# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 16 Issue - 06

ஜூன் 2023 - துல்காயிதா - துல்ஹஜ் 1444




## ஈரான்/அரபு நாடுகள்

## உலகை மாற்றும் உறவுகள்!




## திரைப்படங்களில் தொடரும் இஸ்லாமோஃபோபியா



## அயோத்யா மஸ்ஜித்-இன் தற்போதைய நிலை என்ன?

بسم الله الرحمن الرحيم

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

(அல்குர்ஆன் : 04:01)

# உலகை மாற்றும் உறவுகள்!


கவர் ஸ்டோரி பக்கம் 04

தொடரும் இஸ்லாமோபோபியா படங்கள்

இந்த படங்கள் மூலம் முஸ்லிம் பெண்களுக்கு என்ன சொல்ல வருகின்றீர்கள்?

சிறப்பு கட்டுரை பக்கம் 16

வெளிவரும் ISIL அமெரிக்கா சதிகள் 12

ஆடிட்டர் அப்துல்லாஹ் அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான் 36


அயோத்யா மஸ்ஜித்–ன் தற்போதைய நிலை 40

நாகர்கோவில் – வீடுபுகுந்து கொள்ளை – அதிருப்தியை ஏற்படுத்திய காவல்துறை செயல்பாடுகள்! 46

- மருத்துவம் - தொடர் 50
- டாக்டர் மில்லரை கவர்ந்த திருமறை வசனங்கள் 54
- இந்தியாவில் முஸ்லிம்கள் - தொடர் 56
- பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - தொடர் 62



கர்கரேயை கொலை செய்தது யார்? வெளி வந்துவிட்டது




விரிவாக்கப்பட்ட 5ஆம் பதிப்பு

பக்கம் 28



ஜூன் – 2023 / துல்காயிதா – துல்ஹஜ் 1444

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா – உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only




### ஈரான்/அரபு நாடுகள்

# உலகை மாற்றும் உறவுகள்

"உலகை உருமாற்றும் உறவுகள்" இப்படியும், இன்னும் இதனை விட மிகையான சொற்களையும் பயன்படுத்துகின்றார்கள் உலகத் தலைவர்கள். இந்த செய்தி உலக நாடுகளிடையே ஒரு பெரும் அதிர்வை ஏற்படுத்தியது.(FL : May5,2023)

New Global Order - புதிய உலக ஒழுங்குமுறை என்றெல்லாம் புகழ்பாடுகின்றார்கள். அந்த உறவுதான் ஈரானுக்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையே ஏற்பட்ட உறவு. மார்ச் 10ஆம் நாள் 2023ஆம் ஆண்டு ஈரானும் சவூதி அரேபியாவும் தங்கள் பகையை பகைத்து நட்பை வளர்த்துக் கொண்டன. இந்தப் பகையை முறித்த பெருமையை சைனா/சீனா தட்டிச் சென்றது. இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவு 1979இல் முறிந்தது.



**1979 இஸ்லாமிய உலகின் எழுச்சி?**

*1979இல் தான் ஈரான் தன்னை ஓர் இஸ்லாமிய குடியரசு என அறிவித்தது, இது முழு அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இது உலகில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை சிலுவைப்போர் 2.0 தொடரில் இந்த இதழில் இடம்பெற்ற கட்டுரையில் விரிவாகத் தந்துள்ளோம். (வாசகர்கள் அதை படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்)*

*ஈரான் இஸ்லாமிய குடியரசு என்ற அறிவிப்பைவிட அங்கு 1963-1979 வரை நடந்த நிகழ்வுகளின் விளைவாக 200 ஆண்டுகளாக மன்னராட்சி அதாவது பரம்பரை ஆட்சி ஒழிக்கப்பட்டது. சவூதி அரேபியா உள்ளிட்ட பல முஸ்லிம் நாடுகளில் பரம்பரை ஆட்சி மன்னராட்சி தான் நிலை கொண்டிருந்தது. அரபு மண்ணில் ஆக்கப் பட்டவை அனைத்தும், இந்த அரச பரம்பரைக்கே சொந்தம் என்ற நிலை!*

*இதற்கும் இஸ்லாத்திற்கும் சம்பந்தமில்லை. ஆகவே ஈரானில் மன்னராட்சி ஒழிக்கப் பட்டது போல், சவூதியிலும் இதர நாடுகளிலும் மன்னராட்சியை, பரம்பரை ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்ற கோஷங்கள் எழுந்துவிடுமோ என்ற அச்சம், ஆதங்கம் இந்த அரபு நாடுகளைத் தொற்றிக் கொண்டன. அடுத்து ஈரானில் மன்னராட்சியை ஒழித்தது ஓர் மக்கள் எழுச்சி. அதுவும் இஸ்லாத்தை முன்வைத்து இதே போல் இதர நாடுகளிலும், மன்னராட்சி ஒழிக்கப்பட வேண்டும் என மக்கள் கிளர்ந்தால் என்ன செய்வது.*

*இந்தக் கேள்விக்கு விடையளிக்கத்தான் ஷியா - சன்னி வேறுபாட்டை கிளப்பினார்கள். அரபு நாடுகளை கவ்விப்பிடித்துக் கொண்டிருக்கும் மன்னர்கள் இதற்காகப் பல நூறு மதரஸாக்களை உலகெங்கும் நிறுவினார்கள். இந்த மதரஸாக்களில் முஸ்லிம் உலகில் நடக்கும் எல்லா அவலங்களுக்கும் ஷியாக்களே காரணம் என போதித்தார்கள். இதற்காக அள்ளிக் கொட்டிய பெட்ரோடாலர்கள் என்ற பெட்ரோல் விற்றப் பணம் கோடிக்கணக்கில் கொட்டப்பெற்றது.*

*ஆகவே இஸ்லாமிய குடியரசு என்பது, ஷியாக்களோடு சம்பந்தப்பட்டது என்ற தோற்றத்தை உருவாக்கி அந்த எழுச்சியையும், புரட்சியையும் ஈரானோடு முடக்கிப் போட்டார்கள். ஆனால் அது முடியாது என்ற நிலை வந்தபோது, அமெரிக்காவை ஏவிவிட்டு ஈரானைத் தாக்கிட சதாம் ஹுஸைனை கொண்டு ஈரானை தாக்கினார்கள். வெளி உலகத்திற்குள் இந்தப் போரை ஷியாக்களுக்கும், சன்னி முஸ்லிம்களுக்கும் இடையே நடந்த போர் எனக் காட்டினார்கள். (ஈரான்- ஈராக் போர் 1980-1988)*

*இஸ்லாத்தின் எதிரிகள் இதனை ஊதிப் பெரிதாக்கி இஸ்லாத்திற்குள் ஜாதி சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன எனச் சொன்னார்கள். இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாத்தின் மேல் உள்ள வெறுப்பால் நிறைந்து நின்ற ஊடகங்கள் இதனை ஈரான்-ஈராக் போரைக் கொண்டு முடிந்தவரைக்கும்*

இஸ்லாத்தை மக்கள் மன்றத்தில் மலிவாக காட்டின. இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி, பின்னுக்கு தள்ளப்பட்டது.

இந்தப் போரில் அமெரிக்கா ஈரானுக்கு தேவையான ராணுவ தளவாடங்களை தந்திட வேண்டும். அதற்கான தொகையை சவூதி அரேபியா தந்திடும் என்பது அமெரிக்கா வோடு சவூதி அரேபியா செய்து கொண்ட ஒப்பந்தம்.

சவூதி அரேபியாவும் அமெரிக்காவும் சதாம் ஹூஸைனிடம் அவருக்கு ஏற்படும் நஷ்டங்களை சவூதி ஈடு செய்யும், என்பது ஒப்பந்தம்.

**ஈரான் ஈராக் போர்**

போரின் தொடக்கத்தில் 1980 செப்டம்பரில் ஈரான், பயங்கரமான கஷ்டங்களை சந்தித்தது ஈரானில் சில இடங்களை சதாம் ஹூஸைன் படைகள் கைப்பற்றின. ஈரான் தன்னை தயார்படுத்திக் கொள்வதற்குள் ஏராளமான இழப்புகளை சந்தித்தது.

ஆனால் நான்கே ஆண்டுகளில், போர் தலைகீழாக மாறியது. ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களை, ஈரான் மீட்டது. ஈராக்-ஐ பயங்கர இழப்புகளுக்கு ஆளாக்கியது. சதாம் ஹூஸைன் அதிகமான ஆயுதங்களை அமெரிக்காவிடம் வாங்கினார். அமெரிக்கா உடனுக்குடன் பணத்தை சவூதி அரேபியா விடமிருந்து பிடுங்கிக் கொண்டது. இரண்டு பக்கமும் பயங்கர உயிர் இழப்புகள், இரண்டு நாடுகளிடமும் வாழ்ந்த இளைஞர்கள் ஆயுதம் தாங்கி போருக்கு நின்றார்கள். முடிவில் ஈராக் பயங்கர இழப்புகளை எதிர்கொண்டது. அதன் பல நகரங்களை ஈரான் பிடித்துவிடும் நிலை.

சதாம் ஹூஸைன் ஈரான் எல்லை, ஈராக் எல்லை இவற்றில் வாழ்ந்த குருது முஸ்லிம்களை சந்தேகப்பட்டார். அவர்கள் ஈரானுக்கு உதவி செய்வதாக நம்பினார் ஏற்கனவே குருதுகள் ஒரு தனி நாடு வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது ஈரான் ஈராக்குள் புகுந்து பிடிக்கும் இடங்கள் குருதுகள் பெருவாரியாக வாழும் இடங்கள், ஆகவே ஒரு குருதிஸ்தான் ஒன்றை ஈரான் உருவாக்கிடும் என பயந்தார் சதாம். ஆகவே 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குருதுகள் கொலை செய்யப்பட்டார்கள். குருதுகளை இனப்படுகொலை செய்தார். (இந்த குருதுப் படுகொலைகளைக் காட்டித்தான் அமெரிக்கா பின்னர் சதாம் ஹூஸைனை தூக்கிலிட்டது.)

**ஈரான் அணு ஆலையில் இஸ்ரேல் தாக்குதல்**


ஈராக்-ஐ ஏவி ஈரானை தாக்கினார்கள். காரணம், மன்னர் ஆட்சியை பரம்பரை ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் சவூதி அரேபியாவில் வாழும் மக்களிடையே வந்து விடக்கூடாது, என்பதுதான்.

மக்கள் ஈரான், இஸ்லாமிய எழுச்சியையும், வம்சாவழி ஆட்சியை ஒழிப்பது பற்றியும், சிந்திப்பதையும் பேசுவதையும் பின்னுக்கு தள்ளிவிட்டார்கள். போரில், ஈரான் வெல்லுமா? ஈராக் வெல்லுமா? என்பதைப் பற்றி பரபரப்பாக பேசினார்கள். கூடும் இடமெல்லாம் ஷியா-சன்னிகள் பற்றிய பேச்சுகள் நடந்தன.

இப்படி உலக மக்களின் பார்வையும், பேச்சும் இந்தப் போரின் பக்கம் இருக்கும் போது, இஸ்ரேல் ஈராக் நாட்டில் இருந்த அணுசக்தி ஆலையில் ஒரு பெரும் வான்வழி தாக்குதலை நடத்தியது. அதில் சதாம் ஹூஸைன் பல ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு மெத்த சிரமப்பட்டு வளர்த்த அணுசக்தி முற்றாக அழிக்கப்பட்டது. இந்த தாக்குதலுக்கு Operation Opera ஆப்ரேஷன் ஒப்பேரா- Operation Babylon எனப் பெயர் வைத்தது இஸ்ரேல்!

இஸ்ரேலின் இந்த தாக்குதல் 1981 ஜூன் மாதம் 7ஆம் நாள் நடந்தது ஒசிராக் (Osiraq) என்று பெயரிடப்பெற்ற அந்த ஈராக்கின் அணு ஆற்றல் ஆலை, ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலிருந்து 17 கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது.





இஸ்ரேல் இந்த தாக்குதல்,ஈராக் அந்தப் போரில் (ஈரான்- ஈராக் போரில்) வெற்றி முகத்தில் இருந்தபோது நடந்தது. இஸ்ரேலின் இந்த அத்துமீறிய செயலை ஈரான் கண்டித்தது கடுமையான சொற்களால்! உலக நாடுகளில் பல கண்டித்தன. ஆனால் சவூதி அரேபியா கண்டிக்கவில்லை.

சவூதி அரேபியா இஸ்ரேலின் தாக்குதலை கண்டிக்கவில்லை என்ற விவாதம் உலக ஊடகங்களில் வந்த போது சவுதியின் நயவஞ்சகம் "பளிச்" என தெரியவந்தது. சவூதி அரேபியா நாங்கள் கண்டிக்கவில்லை என்றால் ஆதரிக்கிறோம் என்று பொருள் அல்ல என்று மட்டும் அறிக்கைவிட்டது. ஆனாலும் உலக அரங்கில் அவமானப்பட்டு நின்றது.

இப்படி தங்கள் வம்சாவழி ஆட்சியை காப்பாற்றிக்கொள்ள சவூதி அரேபியா எல்லாவிதமான துரோகத்தையும் முஸ்லிம் உலகிற்கு செய்தது. சவூதியின் இயற்கை வளமான பெட்ரோலை விற்ற பணம், இதில் தாராளமாக அள்ளிக் கொட்டப்பட்டது. போரை தொடர்ந்திட மாதம் 100 கோடி டாலர்களை சவூதி அரேபியா சதாம் ஹுஸைனுக்குக் கொடுத்தது.


இப்படி ஈரானுக்கு எதிராக, அமெரிக்கா வோடு கைக் கோர்த்துக்கொண்டு தங்கள் வம்சாவழி ஆட்சியை தக்க வைத்துக் கொண்டது சவூதி அரேபியா. இதன் பின் சவூதி- ஈரான் உறவுகள் எழவே இல்லை. ஆனாலும் ஈரானைப் போன்றதொரு மக்கள் எழுச்சி அரபுலகில் வராமல் தற்காத்துக் கொண்டது.இதற்காக வளைகுடா நாடுகள், தங்களுக்குள் ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டன அதன் பெயர் "Arab Security Response to the Iran Revolution" -ஈரான் புரட்சிக்கு எதிரான அரபு பாதுகாப்பு அமைப்பு.

**ஈரான் ஈராக் போர் முடிவு**

வேறு வழியின்றி சதாம் ஹுஸைன் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தார். ஈரானிலும் பெரும்பாலான இமாம்கள் இந்தப் போர் தேவையற்றது என எண்ணினர். சமாதானத்தை ஒத்துக் கொண்டார்கள். ஆனால் ஈரானின் புரட்சியின் தளகர்த்தர் இமாம் கொமைய்னி அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை, கடுமையாக எதிர்த்தார். போரை ஈரான் மீது திணித்த சதாம் ஹுஸைன் தண்டிக்கப்படும்வரை போர் தொடர்ந்திட வேண்டும் என்றார் இமாம் கொமைய்னி.

இறுதியில் ஒரு "ஷூறாவில்" சமாதானத்திற்கு ஒத்துக் கொள்வது என முடிவெடுத்தார்கள். இந்த முடிவை இமாம் கொமைய்னி அவர்களிடம் தெரிவித்தார்கள். செவிமடுத்த இமாம் கொமைய்னி அவர்கள் இப்படி சொன்னார்கள் :

"அநியாயமாக ஆக்கிரமிப்பு போர் ஒன்றை, காரணமின்றி ஈரான் மீது திணித்த சதாம் ஹுஸைனை சிறை பிடிக்காமல் அல்லது



கொள்ளாமல் போரை நிறுத்துவது என்பது என்னை பொருத்தவரை விஷத்தை குடிப்பது போன்றது. ஷூறாவின் முடிவில் அல்லாஹ்வின் பரக்கத் "அருள்" இருக்கும் என்பதால் இந்த விஷயத்தை முடிக்கின்றேன்" என்றார், ஷூறாவின் முடிவை ஒத்துக் கொண்டார். போர் முடிவுக்கு வந்தது.

ஆனால் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த இந்த போரால், இரு தரப்பிலும் பெரும் பொருளாதார சேதம். அதைவிட அதிகமாக உயிர் இழப்புகள். 10 லட்சம் பேர் இறந்தார்கள். சதாம் ஹூஸைன் ஏறத்தாழ ஒரு லட்சம் குருதுகளை கொலை செய்தார். 99 சதவீதமும் முஸ்லிம்கள். சதாம் - சவூதி இவற்றின் மேல் உள்ள ஆதங்கம் இன்றும் எமக்கு குறையவில்லை.

**சதாமும் நஷ்ட ஈடுகளும்**

சதாம் ஹூஸைன் போரில் தனக்கு பயங்கர பொருளாதார இழப்புகள் ஏற்பட்டுவிட்டன, அதனை வாக்களித்தபடி அமெரிக்காவும் சவூதி அரேபியாவும், இதர அரபு நாடுகளும் ஈடுசெய்திட வேண்டும் எனக் கேட்டார்.

இதனை அமெரிக்காவும், சவூதி அரேபியாவும், இதர அரபு நாடுகளும், Arab Security to the Iran Revolution என்ற அமைப்பும் ஒத்துக்கொள்ளவில்லை.

சதாம் குவைத் நாட்டை ஆக்கிரமித்து அதன் எண்ணெய் கிணறுகளை கையகப்படுத்துவேன், அதன் மூலம் என் இழப்புகளை ஈடுகட்டுவேன் என்றும் மிரட்டினார். குவைத்தை ஆக்கிரமித்தார். ஆகஸ்ட் 2, 1990இல் எண்ணெய் கிணறுகளை கையகப்படுத்தினார், இதுவே வளைகுடா போர்.இதற்கு எதிராக 39 நாடுகளைக் கொண்ட பன்னாட்டு படைகள் ஒன்று அமைக்கப்பட்டு சதாம் குவைத்தி லிருந்து மார்ச் 4, 1991ல் வெளியேற்றப் பட்டார். பின்னர் சதாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் டிசம்பர் 30,2006இல் தூக்கிலிடப்பட்டார். சொந்த நாட்டிலேயே இப்படித்தான் தங்கள் முடிவை சந்திக்கின்றார்கள்.

**சவூதி ஈரான் உறவு இரண்டாவது கட்டம்**

ஈரான் ஈராக் போரில் வாங்கிக் கட்டிக்கொண்ட சவூதி அரேபியா ஈரானுடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கு லாவகமாக ஈரானில் 1989இல் அக்பர் காஷிமி ரஃப்ப் ஜென்ஜானி என்பவர் குடியரசு தலைவரானார். இவர் சவூதி அரேபியா வுடனும், இதர வளைகுடா நாடுகளுடனும் நல்லுறவை வளர்த்துக் கொள்வது என முடிவு செய்தார். அமெரிக்காவை எதிர்க்க இது அவசியம் எனக் கருதினார். அதன் வழி இரண்டு நாடுகளுக்கு இடையேயும் விமான வழி போக்குவரத்தும், வர்த்தகமும் தொடங்கியது.

புரட்சியைப் பற்றிய அச்சம் வளைகுடா நாடுகளிடையே குறைந்து அல்லது இல்லை என்றானது. எல்லா உறவுகளும் வளர்ந்தன. 1997இல் அக்பர் காஷ்மி ரஃப்ப் ஜென்ஜானி ஓய்வு பெற்றார், முஹம்மத் காத்திமி என்பவர் ஈரானின் குடியரசு தலைவரானார். இவர் இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தினார்.

முஹம்மத் காத்திமி OIC என்ற முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பின் தலைவர் ஆனார். அந்நிலையில் சவூதி மன்னர் ஈரான் வந்தார். காத்திமி ரியாத் சென்றார் உறவுகள் உச்சத்தை அடைந்தது.

எல்லா முஸ்லிம் நாடுகளும் ஷியா - சன்னி வேற்றுமைப் பாராமல் ஷியா நாடான ஈரானின் தலைமையின் கீழ் வந்தன.

ஷியா - சன்னிப் பிரச்சனையைச் சொல்லி முஸ்லிம் நாடுகளைப் பிளந்து கொள்ளை யடித்துக் கொண்டிருந்தவர்கள் செய்வதறியாது திகைத்துப் போய் நின்றார்கள்.

இப்படி ஒரு ஒற்றுமை முஸ்லிம் நாடுகளிடையே நிலவும்போதுதான் ரஷ்யா என்ற வல்லரசு ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து இந்த ஒற்றுமை, உடனேயே பயந்திடவும் செய்தது.

1979 டிசம்பர் 24இல் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்க ரஷ்யா படை நடத்தியது.

நொடிப் பொழுதில் ஆப்கானிஸ்தான் வல்லரசு ரஷ்யாவின் பிடிக்குள் சிக்கிவிடும் என எதிர்பார்த்தார்கள் நோக்கர்கள் அனைவரும். ஆனால் அது நடக்கவில்லை. உலகம் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. அதுபோலவே இஸ்லாத்தை இலட்ச்சியமாகக் கொண்ட

அறிஞர்களும், ஆன்றோர்களும் என்ன நடக்கின்றது ஆப்கானிஸ்தானில் என எட்டிப் பார்த்தார்கள்.

அங்கே ஒரு கூட்டம் மாணவர்கள் இறைவனின் வழியில் வல்லரசு ரஷ்யாவோடு போர் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆயுதங்கள் எதுவுமில்லை. கற்களும், மரக் கட்டைகளை ஈட்டியாகவும், அம்பு வில்லு களுமாக மாற்றி போர் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவ்வப்போது வெற்றியும் கிடைக்கின்றது என்பதை அறிந்தார்.

உலகிலுள்ள இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்கள் ஒன்றிணைந்தார்கள். எந்தெந்த யுத்திகளைக் கையாள வேண்டும் என்பதை வகுக்க ஓர் நிறுவனத்தை நிறுவினார்கள். அதன் பெயர் "Islamic Institute of Policy Studies".

இதில் எல்லா இஸ்லாமிய இயக்கத்த வர்களும், குறிப்பாக இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டார்கள். இமாம் கொமைய்னி அவர்கள் அலாதியான ஆர்வம் காட்டினார். வியூகம் வகுத்தார்கள் வெற்றி பெற்றார்கள்.

உலகின் இரண்டு வல்லரசுகளில் ஒன்றை ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் வீழ்த்திக் காட்டினார்கள். ஆக முஸ்லிம் நாடுகள் முதல் முறையாக ஒன்று சேர்ந்திடும் மையப் புள்ளியாக, ஆப்கானிஸ்தான் அமைந்தது. அதில் வெற்றியும் கிடைத்தது.



இஸ்லாத்தின் எதிரிகளால் இதனைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. உடனேயே எதிர் திட்டங்களைத் தீட்டினார்கள். அவை நீண்டகாலத் திட்டங்கள். அவற்றுள் ஒன்றுதான் இஸ்லாத்தை தீவிரவாதத்தோடு நேரடியாகத் தொடர்புபடுத்துவது. அதற்கான ஆய்வுகள் - இந்த வகையில் அவர்கள், வெளியிட்ட ஆய்வுகள் அல்லது போர் திட்டங்கள் நூல் களாகவே வெளிவந்தன.

அவற்றுள் தலையாயன,

1. The Voices of Resurgent Islam

இஸ்லாமிய மறு எழுச்சியின் குரல்கள், எழுதியவர் - ஜான் எக்ஸ்போசிட்டோ,1982.

2. Islamic Threat Myth or Reality, 1987.


இஸ்லாமிய அபாயம் உண்மையா? பொய்யா?

3.The Clash of Civilization and the Remaking of the World Order.

கலாச்சாரங்களின் மோதலும் புதிய உலக ஒழுக்கத்தை மீண்டும் கட்டமைப்பதும்

4.Default Wars by Daniel Pipes

நாங்கள் நேரடியாகத் தலையிடாத யுத்தங்கள்.




இந்த நூல்களை எல்லாம் பற்றி ஏற்கனவே நான் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி பத்திரிகையிலும், இப்போது நிறுவி நடத்திக் கொண்டிருக்கும், வைகறை வெளிச்சம் இதழிலும் நிரம்பவே தந்து விட்டதால் இங்கே நாம் அவற்றை விவரிக்கவில்லை.

### வெற்றுக் காகிதங்களாய் ஆராய்ச்சி நூல்கள்

உண்மையைச் சொன்னால் இந்த புத்தகங்களும், அவற்றிற்கு அள்ளிக் கொட்டிய பெரும் தொகையும், முயற்சிகளும் காகிதக் குப்பைகளாக மண்மூடிப் போய்விட்டன. இவர்கள் இந்த இலக்கியங்களில் அள்ளிக் கொட்டிய புள்ளி விவரங்கள், ஆய்வு முடிவுகள் என பீற்றிய இவையெல்லாம் பித்தலாட்டங்கள் என்றாகி விட்டன.


ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் இவர்கள் அடிவாங்கி வீழ்ந்து கொண்டிருக்கும்போதே போர் எப்படி முடியும் என அவர்களின் தளபதிகள் களத்தில் நின்று கொண்டே எழுதினார்கள்.


Loosing Battle with Islam.

Why We Lost?

அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையினால், முஸ்லிம் நாடுகளில் ஆட்சியிலிருப்போர் இவர்களின் மதியை நன்றாக புரிந்துகொண்டார்கள், ஒன்று கூடிவிட்டார்கள்.

இந்த சிந்தனைக்கு வித்திட்டது ஈராக்கில் முதலிலும், ஆப்கானிஸ்தானில் இரண்டாவதும் 2021 இல் அமெரிக்காவும்




அதற்கு அத்தனை அநியாயங்களிலும் துணை நின்ற நேட்டோ நாடுகளும் அடைந்த படுதோல்விதாம்.

ஈராக்-ஐ விட்டு வெளியேறும் போது அங்கே பல தீவிரவாத குழுக்களை ஏற்படுத்தி, அவற்றின் கைகளில் ஆயுதங்களைத் தந்தார்கள். அவர்கள் “கிலாபத்”-ஐ கொண்டு வருகின்றோம் என்ற போர்வையில் முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள். ஆயிரக்கணக்கானோரை அநாதைகளாக்கினார்கள். அதேபோல் சிரியாவில் பஷரல் ஆசாத்-இன் ஆட்சிக்கு எதிராக இருந்தவர்களை ஒன்று சேர்த்து அவர்களின் கைகளில் ஆயுதங்களைத் தந்து, முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள். அந்த நாட்டு மக்களை அவர்களின் சொந்த பூமியிலேயே அநாதைகளாக்கினார்கள். இதில் ஷியா - சன்னி பிரச்சனையுமிருக்கின்றது என்றார்கள்.

முஸ்லிம்கள் வாழுமிடங்களிலெல்லாம் பிணங்கள், இரத்த ஓட்டம், அநாதைகளின் அபயக் குரல், அகதிகள் முகாம்கள். இவர்களில் சிலர் அபயந்தேடி சில நாடுகளின் எல்லைகளை எட்டியபோது, அவர்களை அகத்தே விடாதீர். அவர்கள் உங்கள் வேலை வாய்ப்புகளையும், உங்கள் உணவுகளையும் பறித்திட வருகின்றார்கள் என வழி மறித்தார்கள். அகதிகளைப் பற்றி உள்நாட்டு மக்களிடையே அச்சத்தையும், வெறுப்பையும் வளர்த்தார்கள்.

சிரியாவைப் பொறுத்தவரை பஷரல் ஆசாத்திற்கும் பொருளாதாரத் தடைகள். “கிலாபத்” என்ற பெயரால் முஸ்லிம்களைக் கொலை செய்தவர்களுக்கு அடுக்கடுக்காய் ஆயுதங்கள், பொருளாதார உதவிகள். உலகின் இதரப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களிடம், என்னே! நம்மவர்களே சரியில்லை என்ற விரக்தி! இதை ஊதிப் பெரிதாக்கிட சில சில்லறை சொற்பொழிவாளர்கள்!

### சவூதி அரேபியாவுக்கு ஓர் எதிரி

அரேபியாவுக்கு ஓர் எதிரி “ஏமனின் ஹவ்தீஸ்” அவர்கள் ஷியாக்கள் என்ற பெயரில் அவர்களை ஏவி கபளீகரங்கள். ஹவ்தீஸ் அவர்களைக் கொண்டு சவூதி அரேபியாவின் முக்கிய எண்ணெய் கிணறுகளைத் தாக்குவது, முக்கிய விமான நிலையங்களையும் தாக்குவது. இதற்குப் பகரமாக ஏமனைத் தாக்கி கபளீகரப்படுத்துவது.

பள்ளிக் கூடங்கள், மழலையர் இல்லங்கள் இவற்றை தாக்குவது. இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், இஸ்ரேல் பாலஸ்தீன் மீது தாக்குதலை நடத்தும் போதும், அமெரிக்காவின் கைத்தடிகள் சிரியாவிலும், ஏமனிலும் தாக்குதலை நடத்திடும் போதும் குறி வைப்பது குழந்தைகளை தாம்.

இது அமெரிக்காவின் இலக்காகிய அடுத்த தலைமுறை முஸ்லிம்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டது. முஸ்லிம்களை கொலை செய்திட வேண்டும் என்பது, சாமுவேல் கண்டிங்டன் தன்னுடைய கலாச்சாரங்களின் மோதல் என்ற நூலில் Youth

Buldge என்ற திட்டத்தின் கீழ் தந்த திட்டம்.

இப்படியெல்லாம் முஸ்லிம் நாடுகளிடையே ஒரு பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தி, அவர்களின் பாதுகாப்பிற்கு உதவி செய்வதாக, பணத்தை பறிப்பது, தேவையற்ற ஆயுதங்களை அள்ளிக் கொட்டுவது.

### சவூதி அரேபியாவுக்கு வந்த ஞானோதயம்

சவூதியின் எண்ணெய் வளம் வேகமாகக் குறைந்து வருகின்றது. அத்தனையும் அமெரிக்காவுக்கும் (Aramco - என்ற Arab-American Company) இதர ஐரோப்பிய நாடுகளாலும் கொள்ளையடிக்கப் பட்டு விட்டன. இதனால் தனது பொருளாதாரத்தைச் சீர்செய்திட பல திட்டங்களை வகுத்துள்ளது சவூதி அரேபியா. அதனை சவூதியின் "Saudi Vision 2030" எனப் பெயரிட்டு அழைக்கின்றது. இதன் முக்கிய கூறுகளாக எண்ணெய் (பெட்ரோல்) வளத்தை முற்றிலும் சார்ந்திருப்பதைக் குறைப்பது. பொதுநல சேவைகளை மேம்படுத்துவது, சுற்றுலாவை அதிகப்படுத்தும் பணிகளைச் செய்வது, முதலீடுகளைக் கவர்ந்திழுப்பது. இதற்கு அவர்கள் மிகப்பெரிய பெயரை வைத்திருக்கின்றார்கள். "To become a Global Investment Power House"

இதில் நமக்கு (வைகறை வெளிச்சத்திற்கு) ஒரு சிறு அச்சம். முதலீடுகளும், தொழிலும் வளரும் போது கலாச்சாரங்களை



காப்பாற்றுவது கடினம். சவூதி அரேபியாவின் இந்த இலட்சியத்திற்கு மிகவும் தடையாக இருப்பது அதன் பாதுகாப்பு. சவூதி அரேபியா எந்த நேரமும் ஆட்கொள்ளப்படலாம். ஈரானால் என்று அமெரிக்க உளவுத்துறை தகவல்களைக் கொடுத்து கொண்டே இருக்கின்றது. இதனால் அமெரிக்காவின் அதிநவீன பாதுகாப்பு உத்திகள் தேவை என அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது.

இந்த வெறும் அச்சுறுத்தல் போதாது என்பதால் ஹைத்தீஸ் வழியாக சில தாக்குதல்களை நடத்திக்காட்டிற்று. அது ஈரான் பின்னணியில் உள்ள ஷியா தாக்குதல் என உலகெங்கும் பிரச்சாரம் செய்தது. இப்படி அமெரிக்கா தன்னை ஆட்டிப்படைப்பதும் அதற்கு, ஈரான் ஷியா எனக் காரணங்களைச் சொல்வதையும் தவிர்க்க வேண்டும். சவூதியைப் பாதுகாப்பான ஒரு பூமியாக ஆக்கிட வேண்டும். அப்போதுதான் "Global Investment Power House" உலக முதலீடுகளை ஈர்க்கும் இல்லமாக சவூதியை மாற்றிட முடியும் என சவூதி அரேபியா தீர்மானித்தது.

அதேபோல் மேலை நாடுகளின் சதியைக் கூர்ந்து கவனித்து வந்த சில சில நல்ல மனம் கொண்ட முஸ்லிம்களும் கருதினார்கள். மேலை நாடுகள் எப்போதும் சதிகளைச் செய்து கொண்டிருக்கும், அவற்றில் சிக்கித் தவிப்பது தான் நமது வேலையா? எனச் சிந்தித்தார்கள், களப்பணிகளில் இறங்கினார்கள்.

### ஈரான் – சவூதி பேச்சு வார்த்தைகள்

இவர்களின் முயற்சிகளால் 2021இல் பாக்தாத்தில் வைத்தும், 2022 இல் மஸ்கட்டில் வைத்தும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இந்தப் பேச்சு வார்த்தைகள் ஈரான் இஸ்லாமிய குடியரசின், சவூதி அரேபியாவின் மன்னர் ஷேஹ் சல்மான் அவர்களின் பிரதிநிதிகளுக்கு மிடையே நடைபெற்றது. (The Hindu : Mar 15, 2023)

இந்தப் பேச்சு வார்த்தைகளுள் ஒன்று தெளிவானது, அது அமெரிக்காவின் தலையீடு இல்லாமல் சவூதி அரேபியா பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிட தயாராக இருக்கின்றது என்பது தெளிவானது.

### சவூதியின் சிந்தனை

சவூதி அரேபியா தன்னுடைய இலக்கு 2030 ஐ மிகப்பெரிய தடையாக இருப்பது ஏமனின் ஹவ்தீஸ். இந்த ஹவ்தீஸ்களை வைத்துத்தான், அமெரிக்கா பாதுகாப்பு வியாபாரம் செய்கின்றது இந்த ஹைத்தீஸ்கள் சவுதியின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான “ஆரம்கோ” மீது குண்டுகளைப் போட்டது. இப்படித் தாக்கியும் அமெரிக்கா தடுப்பதில்லை. மாறாக அதிக ஆயுதங்களை அரேபியாவுக்கு விற்பனை செய்தது.




# வெளிவரும்

# ISIL – அமெரிக்கா சதிகள்!

அன்பார்ந்த சகோதரர்களே! ஏற்கனவே வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு அரபு நாட்டில் நடக்கின்ற ஒரு Global Remodulization- உலகத்தை இன்னொரு வழியில் உருவாக்குகின்ற ஒரு முயற்சியை பற்றி சொல்லி இருக்கிறேன். அது இப்பொழுது கொஞ்சம் வளர்ந்திருக்கின்றது. அந்த வளர்ச்சியின் ஒரு கட்டமாக இவர்கள் இதுவரைக்கும் மிஷிமிலி என்று உலகெங்கும் முஸ்லிம் அப்பாவி மக்களை, கொத்தனார் வேலை செய்து கொண்டிருந்த முஸ்லிம்களை, வயல்வெளியில் வேலை செய்து கொண்டிருந்த முஸ்லிம்களை, டீக்கடை, காபி கடைகளை நடத்திக் கொண்டிருந்தவர்களை எல்லாம் மிஷிமிலி உடன் தொடர்புள்ளவன் என்று ஓடி ஓடி கைது செய்தார்கள் அது வெட்ட வெளிச்சத்திற்கு வருகின்றது.

இப்பொழுது அரபு நாடுகளிடமிருந்து அடிக்கடி ஒரு அறிக்கை வருகிறது. Why should be Out source Our Security to the Europe, We'll Take Care of Our Own Security. நம்முடைய பாதுகாப்பை நாம் ஏன் அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவிற்கும் தாரை வார்த்து தர வேண்டும்? நம்முடைய பணம் தான் செலவாகிறது. நம்முடைய பணத்தை அமெரிக்காவிடம் கொடுத்து நாம் நம்முடைய பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமாம்! அந்த பாதுகாப்பை அவர்கள் செய்தார்களா என்றால், இல்லை.

சவுதிக்கு எதிராக ஒரு ஹவுத்தியை உருவாக்கினார்கள். ஈரானுக்கு எதிராக ஒரு ஈராக்கை உருவாக்குவார்கள். சிரியாவிற்கு எதிராக சிரியாவிற்கு உள்ளாகவே ஒரு கூட்ட மக்களை உருவாக்குவார்கள். சிரியாவில் இவர்கள் மிகவும் கவனமாக இருப்பார்கள் ஏன் என்று சொன்னால் சிரியாவிலும் மற்ற இடங்களிலும் இருக்கின்ற ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேலுக்கு

ஒரு அச்சுறுத்தல் என்பதை இஸ்ரேல் அறியும். அதனால் சிரியாவை கபளீகரப்படுத்த வேண்டும் என்று கபளீகரப்படுத்தி விட்டார்கள். அதைப்பற்றி நான் ஏற்கனவே ஒரு உரையில் ஒரு மணி நேரம் 15 நிமிடங்கள் பேசி இருந்தேன். இன்னொரு காணொளியும் பதிவிட்டிருந்தேன், சிரியாவில் நடப்பது என்ன? என்ற தலைப்பில் வைகறை யூடியூப் பக்கத்தில் அது இருக்கின்றது.

உண்மை கொஞ்சம் வெட்ட வெளிச்சம் ஆகும் நேரத்தில் பஷருல் ஆசாத் என்ற சிஈயா வினுடைய ஆட்சியாளர் தலைமறைவாக இருந்தார். அமெரிக்காவினுடைய தாக்குதலுக்கு பயந்து. ISIL-னுடைய தாக்கு தலுக்கு அவர் பயப்படவில்லை. அமெரிக்கா பஷருல் ஆசாத்தை கொலை செய்துவிடும். அமெரிக்கா ISILக்கு ஆயுதங்களை கொடுக்கிறது. பணத்தை கொடுக்கிறது. ஆனால் பஷருல் ஆசாத்திற்கு பொருளாதார தடை. அவர் அவருடைய எண்ணெயை விற்க முடியாது. அவருடைய நாட்டையே அவர் எட்டிப் பார்க்க முடியாத அளவிற்கு பொருளாதார தடை.

இப்பொழுது இந்தப் புது கருத்து, "நாம் எதற்கு நம்முடைய பாதுகாப்பை அமெரிக்காவிற்கு தாரை வார்த்து கொடுக்க வேண்டும்? நான் அனைவரும் சேர்ந்து நம்முடைய ரீஜனல் செக்யூரிட்டியை பாதுகாத்துக் கொள்வோம்" என்று ஒரு முயற்சியை எடுத்தார்கள். Normalization of Relationship with Bashar al-Assad என்று ஒரு பிரகடனத்தை வைத்து அவர் தலைமறைவாக இருந்த வாழ்க்கையிலிருந்து வெளியே வந்து ஜித்தாவில் Gulf Co-operation Committee என்று சொல்லக்கூடிய எல்லா நாட்டு தலைவர் களையும் சந்தித்து இருக்கிறார். 19ஆம் தேதி நடந்த ஒரு மாநாட்டிற்கும் வந்து சென்று இருக்கிறார். வந்திருக்கிறார் சென்று விட்டாரா என்று பத்திரிகைகள் சரியாக சொல்லவில்லை. அந்த மாநாட்டில் மிகவும் பலமாக இருந்தது அமெரிக்காவில் ஒரு சட்டம் வருகிறது, அது எதற்கு எதிராக என்றால் பஷருல் ஆசாத்தின் Normalization of Relationship with other People அந்த சட்டத்தின் பெயர் Assad's Normalization Act.

இவர்கள் எதற்கு சட்டம் இயற்ற வேண்டும்? இவர்களெல்லாம் ஒன்றானால் இவர்களுக்கு என்ன?. அதன் பிறகு அவர்கள் சொல்கிறார்கள் all countries who normalize a relations with Syria will be made accountable for the killings in the Syria. "சிரியாவில் ஆட்களை கொன்றது யார் அமெரிக்கா, ரஷ்யாவும் இடையில் குண்டு மழைகளை பொழிந்தது, இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. நடத்திவிட்டு முஸ்லிம் நாடுகள் மீது பழியை போட்டீர்கள். குருதுகள் கையில் ஆயுதத்தை கொடுத்து துருக்கியோடு சண்டை போடுங்கள் என்று சொன்னீர்கள். அதை கண்டுபிடித்து உங்கள் ஆயுதம் இருக்கக் கூடிய இடத்தில் குண்டு போட்டார்கள், உடனே துருக்கியும் குண்டு போட்டது. இப்பொழுது பஷருல் ஆசாதிற்கு பொருளாதார தடை விதித்தது மூலம் மிஷிமிலி ற்கு செய்து கொண்டிருந்த உதவி இப்பொழுது போய் சேராது.

ஏனென்றால் இவர்களெல்லாம் அதாவது ஈரான் ஈராக் போன்ற அனைவரும் இயல்பாகிவிட்டார்கள். இனி உங்களுடைய கபளீகரங்கள் எடுபடாது. அமெரிக்காவினுடைய ஒரு அறிக்கையே இப்படி சொல்கிறது, "American sanctions are hitting ordinary people and not top official's - அமெரிக்காவினுடைய பொருளாதார தடைகளினால் பாதிக்கப்படுபவர்கள் யார்? உயர் மட்டத்தில் இருப்பவர்களல்ல, அவர்கள் எங்கிருந்தாலும் 22 டிகிரி ACயில் உட்கார்ந்திருப்பார்கள். அவர்களுக்கு எல்லா விதமான வசதியும் இருக்கும். சாதாரண மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். பொருளாதாரத் தடை என்றால் அப்பாவி மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். அந்த அப்பாவி மக்களுக்கு உணவு போன்றவற்றை வழங்கலாம் என்ற அடிப்படையில் தான் அமெரிக்காவுக்கு எதிராக எழுந்து நிற்கிறார்கள்."

அதே அறிக்கை இன்னொன்றையும் சொல்கிறது "Normalization of this relationship will be a sign for fading US Influence in the Arab countries. இவர்களுடைய உறவு நன்றாகி விட்டால் அதாவது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நாம் சண்டை போடாமல் இருந்தால் யாருக்கு நஷ்டம் என்று சொல்கிறார்கள், முஸ்லிம்களுக்கு லாபம் முஸ்லிம் நாடுகளுக்கு லாபம் என்பதை சொல்வதை விட, அமெரிக்காவிற்கு நஷ்டம், அமெரிக்காவினுடைய ஆதிக்கம் செத்துப்போய்விடும்."



எவ்வளவு நம்மை முட்டாள்களாக்கி இருக்கிறார்கள் பார்த்தீர்களா! இதில் வாட்ஸாப், முகநூல் போன்றவற்றில் வருவதை கண்டு இளைஞர்கள் உணர்ச்சிவசப் படுகிறார்கள். அவ்வளவும் பொய்! இப்பொழுது ISILக்கு இவர்களின் ஆயுதமும் போய் சேராது என்று நினைக்கிறேன். அவர்கள் இவர்கள் கைகளில் இருந்த ஒரு கூட்டம் கிரிமினல்ஸ் என்பது ஏற்கனவே வெளியில் வந்த செய்தி.

ஆகவே சகோதரர்களே, Normalization of Relationship என்பது உலகத்தில் அமெரிக்கா விற்கு இனிமேல் பணம் தந்து எங்கு பாது காப்பது? அமெரிக்கா என்ன செய்யும், சவுதியில் ஹவுதிசை சொல்லி குண்டு போட சொல்லும். பிறகு சவுதியிடம் இவற்றை எல்லாம் வாங்கிக்கொள் என்று சொல்லும். ஆனால் சவுதி, ஹவுதிஸிடம் சென்று பேசிவிட்டது. நமக்கிடையில் எந்த பிரச்னையும் வேண்டாம் என்று எந்த அளவிற்கு என்றால் சவூதியினுடைய அனைத்து எண்ணெய் நிறுவனங்களிலும் குண்டு போட தயாராக இருந்தவர்கள்.

ஆனால் இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது, முஸ்லீம் நாடுகள் எல்லாம் ஓர் அறிக்கை விட்டுள்ளது அது,

“Creating Regional Insecurity then Burdening the Regional government for its expenses. அமெரிக்காவினுடைய சூழ்ச்சி எப்படி இருக்கிறது என்றால், சவூதி அரேபியாவிடம் ஈரான் வந்து பிடித்துவிடுமோ என்ற பயத்தையும், ஈராக்கிடம் ஈரான் வந்து பிடித்துவிடுமோ என்ற பயத்தையும், சிரியாவிடம் மற்றவர்கள் எல்லாரும் வந்து பிடித்து விடுவார்களோ என்ற பயத்தை ஏற்படுத்தி , பிராந்திய பாத்துகாப்பின்மையை ஏற்படுத்தி அதற்கு மிஷிமிலி ஐ பயன்படுத்தி, எக்கச்சக்கமாக மேற்கண்ட நாடுகளில் இருந்து கொள்ளையடிப்பது.”

அந்த நிலை இப்போது மாறுகிறது. இஸ்ரேல் இப்பொழுது திணறிப்போய் நிற்கிறது. அமெரிக்காவினுடைய USIP என்று சொல்லக்கூடிய United States International Policy என்று சொல்லக்கூடிய அமைப்பு ஒரு அறிக்கையை சொல்கிறது அது, “நாம் தொடர்ந்து தவறுதான் செய்து கொண்டிருக்கிறோம் என்று. எப்படி 9/11 பிறகு, அதாவது 20 வருடங்களுக்கு பிறகு ஒத்துக்கொண்டார்களோ அதே போல் ஒத்துக்கொண்டார்கள்.

A Big Elephant like America can through in a Country like Iraq through charge in Libya much in

Afghanistan then withdraw without any progress and make all this provinces about bringing Democracy and human rights through regions whom it is when it is a opposite.

ஒரு முரட்டு யானை அமெரிக்கா. அது ஈராக் -ஐ நாசமாக்கிவிட்டது. லிபியாவை நாசமாக்கிவிட்டது. ஆப்கானிஸ்தானில் குண்டு மழை பொழிந்து அதையும் நாசமாக்கி விட்டது. (50 லட்சம் மக்களை இந்த பகுதியில் மட்டும் கொன்று இருக்கின்றன அமெரிக்கா வினுடைய குண்டுகள்.) ஆனால் அங்கு எந்த முன்னேற்றத்தையும் கொடுக்காமல் ஓடி வந்துவிட்டாய். ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் என்ற பெயரைச் சொல்லி இதற்கு எதிராகவே அமெரிக்க இதையெல்லாம் செய்து வருகிறது.

இதனால் மக்கள் விரக்தி அடைந்து, தாங்களே தங்களுடைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வோம் என்று முடிவு செய்துவிட்டனர்.

இப்பொழுது முஸ்லிம் நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து விட்டதால், அவர்கள் இனி டாலர்களை அள்ளித் தந்து பாதுகாப்பை பெற வேண்டிய அவசியம் இல்லை.

**- MGM**

# நாகப்பட்டினம் மாவட்டம், மஞ்சகொல்லை சுற்றியுள்ள பகுதிகளில் தா:வா






**கடந்த 14-05-2023 திருவாரூர் மாட்டம், மஞ்சகொல்லை சுற்றியுள்ள பகுதியில் இஸ்லாமிய அழைப்பு பணி நடைபெற்றது. இதில் சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை, தீண்டாமை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், செந்தமிழ் நாட்டுச் சேரிகள், எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர் போன்ற புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மக்கள் ஆர்வத்தோடு பெற்று கொண்டார்கள்.**

**- அன்பகம் தாஃவா குழு -**
**மஞ்சகொல்லை**








# தொடரும் இஸ்லாமோ


## இந்த படங்கள் மூலம் முஸ்லிம் பெண்களுக்கு என்ன சொல்ல வருகின்றீர்கள்?

### லிப்ஸ்டிக் அண்டர் மை புர்கா

**பாலியல் பித்து பிடித்த ஆணாதிக்கவாதிகளின் முஸ்லிம் பெண்களுக்கு எதிரான இஸ்லாமோபோபிக் திரைப்படம்.**

பெண்கள் தொடர்பான இந்த சர்ச்சைக்குரிய திரைப்படத்தை உங்களில் பலர் பார்த்திருக்கலாம். போபாலில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் வாழும் நான்கு பெண்களின் வாழ்க்கை சம்பந்தமான படம் இது. அவர்களின் தனிப்பட்ட மற்றும் பாலியல் சுதந்திரம் சார்ந்த வேட்கைகளையும், அவற்றுக்கான தடைகளைத் தகர்ப்பது குறித்தும் அது பேசுகிறது. அந்த நான்கு கதாப்பாத்திரங்களில் ஒன்று, ரெஹானா அபிதி. பர்தா உடையணிந்த ஒரு கல்லூரி மாணவி; தையல்காரரின் மகள். இன்னொன்று, ஷிரீன் அஸ்லம். மூன்று குழந்தைகளுக்குத் தாயாக இருப்பவர்; கணவருக்குத் தெரியாமல் கடை ஒன்றில் விற்பனைப் பெண்ணாகப் பணிபுரிபவர். ஒப்பனை நிலையம் வைத்திருக்கும் லீலா, தன் அன்றாட வாழ்க்கைக்குப் போராடிவருவதற்கு மத்தியில் பாலியல் சார்ந்த கற்பனையில் வாழ்பவர். மற்றொரு கதாப்பாத்திரம் உஷா பர்மார். 55 வயதான விதவை. ஓர் இளம் நீச்சல் பயிற்சியாளர் மீது காதல் கொள்வதோடு தன் பாலியல் வேட்கையையும் அவரிடம் வெளிப்படுத்துகிறார்.

இந்தப் படத்தில் ஓர் அடித்தள வர்க்க/சாதி/முஸ்லிம் பெண் தன் மேட்டுக்குடி, உயர்சாதி




# ஃபோபியா

நண்பர்களைக் கவர்வதற்கு ஜீன்ஸ் அணியவும், அவர்களுடன் விருந்தொன்றில் கலந்துகொள்வதற்காக ஒரு நல்ல ஆடையைத் திருடவும் வேண்டியிருக்கிறது. இன்னொரு முஸ்லிம் பெண், தான் பணிபுரிவதை மறைக்கிறாள்; ஒவ்வொரு இரவும் உறங்கு வதற்கு முன் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகிறாள்; குழந்தைகளை உற்பத்தி செய்யும் இயந்திரமாக மட்டுமே நடத்தப்படும் ஒடுக்குமுறை சூழலில் வாழ்கிறாள். கிட்டத்தட்ட முஸ்லிம் குடும்பங்கள் குறித்த இந்து வலதுசாரிகளின் வழக்கமான பிரச்சாரம்தான் இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படம், ஒடுக்குமுறையின் வடிவம் எனும் மோசமான சித்திரத்தை முஸ்லிம் ஆண்களுக்கு வழங்குகிறது. மனைவியை வல்லுறவுக்கு உள்ளாக்குவது தவிர்த்த வேலைகள் எதுவும் இல்லாதவராக, ஆணுறை பயன்படுத்தக்கூட தெரியாதவராக, பல பெண்களுடன் தொடர்பில் இருப்பவராக முஸ்லிம் ஆண் கதாப்பாத்திரம் காட்டப்படுகிறது. ரெஹானா அபிதியின் அப்பாகூட ரொம்பவும் அதிகாரம் செலுத்தக் கூடியவராகவும் அன்பையும் பாசத்தையும் தராதவராகவும் இருக்கிறார். அதாவது, ஒரு முஸ்லிம் பெண்/குடும்பம்கூட நல்ல வாழ்க்கை வாழவில்லை. என்னவொரு பரிதாபகரமான கதை!

இப்படத்தில், ஷிரீன் அஸ்லமின் கணவர் ‘சவுதியிலிருந்து வந்திருப்பது’ அவரை ‘முரடர்’ ஆக்கியிருக்கிறது. ஒரு காட்சியில், தன் பையிலிருந்து ஷிரீன் கைத் துப்பாக்கியை வெளியில் எடுக்கும் சந்தர்ப்பத்தில் அவருடைய புர்கா அவருக்குத் தீவிரவாத சாயலைக்கூட ஏற்படுத்துகின்றது. முஸ்லிம் ஆண்களை பெண் அடக்குமுறையின் குறியீடாய்ச் சித்தரிப்பதன் மூலம் படத்தயாரிப் பாளர்கள் எந்த அளவுக்கு ஒடுக்கு முறைக்கான சவர்ண வரையறைகளை உள்வாங்கியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

சமூக ரீதியில் பார்த்தால் மேற்குறிப் பிட்ட நான்கு பெண் கதாப்பாத்திரங்களும் உயர்சாதி எனும் வகைப்பாட்டின் கீழ் வருவதில்லை. லீலா அநேகமாக ஒரு அடித்தள சாதி/வர்க்க பின்புலமுள்ளவரே. தன் பாலியல் கற்பனைகள் சார்ந்த உலகில் உழல்பவர், பொய் சொல்லி சம்பாதிப்பவர், அவரின் அம்மா வாழ்வாதாரத்துக்கு வழியின்றி பல ஆண்டுகளாக உடல் ஓவியத்துக்கு நிர்வாணமாக அமர்ந்து வருகிறார்.

உண்மையில் இவையெல்லாம் பகுஜன் பெண்களைப் போகப் பொருளாய் அணுகும் பார்ப்பன ஆணாதிக்கக் கருத்தோட்டங்களையே வலியுறுத்துகின்றன. ஆனால், துரதிருஷ்டவசமாக பாலியல் விடுதலை என்கிற பெயரால்!

அதேசமயம், முஸ்லிம் பெண்களின் அவஸ்தைகளை மதத்தோடு தொடர்புபடுத்தி விட்டு, ஏனைய சமூகத்துப் பெண்களின் அவஸ்தைகளை வெறும் சமூக வழக்கங்களின் (Tradition) பகுதியாக மட்டுமே ஆக்கிவிடுவது இஸ்லாமோ ஃபோபியாவின் உச்சத்தை எடுத்துக்காட்டுகின்றது.

படத்தின் தலைப்பே அதனளவில் முன்முடிவுகளைக் கொண்டதுதான். அது புர்காவை அடக்குமுறைக்கும் உதட்டுச் சாயத்தை விடுதலைக்கும் அடையாளப் படுத்துகின்றது.

உயர்சாதிப் பெண்களில் அன்றாடம் தாக்கப் படுபவர்கள், தங்கள் வீட்டு ஆண்களின் பாலியல் இன்பத்துக்காக பலமுறை கருக் கலைப்புச் செய்தவர்கள், தாய் வீட்டுக்குப் போக அனுமதிக்கப்படாமல் தங்களுடைய சமூக அந்தஸ்தைக் காத்து நிற்கும் பெண்களெல்லாம் இருக்கிறார்கள். தங்களின் கணவர் பல பேரிடம் தொடர்பில் இருந்ததன் விளைவால் HIV-க்கு ஆட்பட்டவர்களும் கூட இருக்கவே செய்கிறார்கள். அண்டை வீடுகளிலுள்ள உயர்சாதிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் அழுகுரல்களை பலமுறைக் கேட்டிருக்கிறேன்.

ஆனால், ஏன் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களின் கதைகள் மட்டுமே இங்கே உலாவுகின்றன? அதிலும் வல்லுறவுக்கு ஆட்பட்ட முஸ்லிம் பெண்கள், காஷ்மீரின் பாதி விதவைகள், கலவரக்காரர்களால் தாக்கப் பட்டு கணவரை இழந்த அபலைகள் என யாருடைய கதைகளும் படமாக்கப் படுவதில்லையே. ஏன்? அதற்கு என்ன காரணம்?

வகுப்புக் கலவரங்களில் பாதிக்கப் பட்டவர்களுக்கும், இராணுவத்தினரால் வன்முறைக்கும் ஆட்கடத்தலுக்கு ஆளானவர்களுக்கும் உதட்டுச்சாயத்தால், ஜீன்சால் விடுதலை சாத்தியமா? முஸ்லிம்கள் மீதான தப்பெண்ணம், வன்முறை, பாரபட்சம் போன்றவற்றில் இருந்து அவர்களுக்கு எப்போது விடுதலை?

இறுதியாக ஒன்று. ஏற்கனவே பெருமளவில் இஸ்லாமோ ஃபோபியாவும் வெறுப்பும் நிலவும் இன்றைய சூழலில் இந்தப் படம் முஸ்லிம் ஆண்கள் மீதான பாகுபாட்டையும் பகையையும்தான் கூர்மைபடுத்தும்.

யூடியூபில் இந்தத் திரைப்படதுக்கான விமர்சன வீடியோக்களுக்கு வந்துள்ள பின்னூட்டங்களைச் சற்று பாருங்கள். முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் எதிரான வசைகளால் அவை நிரம்பியிருக்கின்றன. இப்படம் என்ன கருத்தை பெருவாரியான மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளது என்பதை இதன் மூலம் எளிதில் உணர முடியும்.

## ஜிப்ஸி

### இடதுசாரி சிந்தனையாளர்களின் முஸ்லிம்களுக்கு எதிரான இஸ்லாமோபோபியா!

ஜிப்ஸியின் கதைக் கரு வித்தியாசமான ஒன்று. எனினும், பார்வையாளர்கள் ரசிக்கும் வகையில் சுவாரஸ்யமாக அதைத் திரைக்கதை ஆக்குவதை விடவும் இயக்குநர் படம் முழுக்க கருத்துரைக்க முயற்சித்திருப்பதால் பல இடங்களில் நமக்குப் பிரச்சார நெடியேறுகிறது. இன்னும் சரியாகச் சொன்னால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஎம்) பிரச்சாரத் திரைப்படமாகவே அது இருக்கிறது.

படத்தின் தொடக்கத்தில் கஷ்மீரில் வன்முறை நடப்பது போன்ற காட்சி. அதில் மதப்பற்றுள்ள கஷ்மீரி முஸ்லிம் பெண் மற்றும் பண்டிட் இந்து ஆண் ஜோடிகள் (முஸ்லிம் பிரிவினைவாதிகளால்) கொல்லப்பட்டு விடுகிறார்கள். அவர்களுக்குப் பிறந்த குழந்தையை நாடோடி குதிரைக்காரரான சீனியர் எடுத்து வளர்க்கிறார். அந்தக் குழந்தைதான் ஜிப்ஸி. சீனியரை போலவே சாதி, மத அடையாளங்கற்றவன் அவன்.

ஜிப்ஸியைக் கூட்டிக்கொண்டு நாடு முழுக்க அந்தக் குதிரைக்காரர் சுற்றித்திரிகிறார். ஜிப்ஸி இந்திய மொழிகளில், இசையில், பாடலில் கைதேர்ந்தவனாக வளர்கிறான். அவன் வாலிபனானதும் அவனுக்கான துணையைத் தேடிக்கொள்ளுமாறு அறிவுரைத்துவிட்டு மரணித்துவிடுகிறார் சீனியர். நாடோடியான ஜிப்ஸி தனது குதிரை சே உடன் நாகூர் போகும்போது, அங்கு சீனியர் சொன்னது போல ஒரு பெண்ணைப் பார்க்கிறார். உருது

பேசும், பர்தா அணியும் ஒரு முஸ்லிம் பெண் அவள். இப்படி காதல் கதை போலத் தொடங்கிய படம் அந்த முஸ்லிம் பெண், 'அடிப்படைவாதியான' அவளுடைய தந்தையாலும் தன் சமூக சூழலாலும் எப்படியெல்லாம் ஒடுக்குமுறையைச் சந்திக்கிறாள் என்பதில் கவனம் குவிக்கிறது.

அந்த நிமிடத்திலிருந்து, முஸ்லிம்கள் குறித்து பொதுபுத்தியில் இருக்கும் அத்தனை தப்பெண்ணங்களையும் தொகுத்து காட்சிக்குக் காட்சி அடுக்கி வைத்திருக்கிறார் இயக்குநர் ராஜு முருகன். வழக்கமாக திரைப்படங்களில் முஸ்லிம்களை எப்படி எதிர்மறையாகப் பொதுகுணப்படுத்துவார்களோ அவ்வாறே இப்படமும் செய்திருக்கிறது. அதையொரு பரப்புரை போல முன்னெடுத்து, திகட்டத் திகட்ட பார்வையாளர்களுக்குத் தந்திருக்கிறார் ராஜு முருகன்.

முஸ்லிம்களின் சமய, குடும்ப, சமூக வாழ்வு பற்றி குறைந்தபட்ச அறிவுகூட இல்லாமல் அரைகுறையாக ஹோம்வொர்க் செய்து எடுக்கப்பட்ட படம் இது என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. தமிழ் முஸ்லிம்கள் வாழும் நாகூரில் உருது முஸ்லிம் குடும்பம், அதிலும் மலையாள தொனியில் தமிழ்ப் பேசும் அப்பா! நாகூரில் பீஃப் பிரியாணி செய்யும் வழக்கமே கிடையாது. ஆனால், படத்தில் அந்தக் குடும்பம் இரவு உணவாக பீஃப் பிரியாணி சமைத்து வைத்திருக்கிறது! தொழுகையில் அல்லாஹு அக்பர் சொல்ல வேண்டிய இடத்தில் சுப்ஹானல்லாஹ் என்பது, திருமண விவாகரத்து நடக்கும்போது சந்தோஷமான சந்தர்ப்பத்தில் சொல்லப்படும் "மாஷா அல்லாஹ்" என்று சொல்வது, நபி மொழிகளைச் சொல்லும்போதெல்லாம் குர்ஆன் சொல்லுவதாகக் கூறுவது, தாலி செண்டிமன்டை கருகமணிக்குக் கூறுவது போன்ற அசட்டுத்தனம் கடும் அயற்சியைத் தருகிறது.

கிரிக்கெட், குடி, கூத்து என எல்லாவிதமான கேளிக்கைகளிலும் முஸ்லிம் ஆண்கள் திளைத்திருக்க, முஸ்லிம் பெண்கள் அடிமைகளாக வாழ்வது போல சித்தரிக்கிறது படம். தொழுகை, ஹிஜாப் உள்ளிட்ட இஸ்லாமிய அம்சங்களெல்லாம் முஸ்லிம் ஆண்களால் பலாத்காரமாக முஸ்லிம் பெண்கள் மேல் திணிக்கப்படுவதாக தம்



முன்முடிவைப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர்.

படத்திலுள்ள பல விஷயங்கள் நம்பும்படியாக இல்லை. படத்தின் தொடக்கம் முதலே ஜிப்ஸி மீது எவ்வித காரணமுமின்றி கதாநாயகி வஹீதாவுக்கு ஒரு ஈர்ப்பு இருக்கிறது. ஒரு கட்டத்தில் ஜிப்ஸியின் குதிரை சே முஸ்லிம் இமாம் ஒருவரை உதைத்துவிடுகிறது. அதற்காக ஜிப்ஸிக்கு 'அந்த ஆட்களின்' அமைப்போடு தொடர்பிருக்கிறதா, அவன் என்ன சாதி, எந்த மதம் என ஆய்வு செய்கிறார்கள் முஸ்லிம்கள். 'ஆய்வு முடிவு' வரும் வரை கொல்லைப் புறத்தில் ஜிப்ஸியையும் அவரின் நண்பர் களையும் கட்டிப் போடச் சொல்கிறார் கதாநாயகியின் தந்தை.

அதன் பின் கதை எப்படி நகரும் என்பதை பார்வையாளர்கள் எளிதில் ஊகிக்க முடியும். காதல் பாடல், நடனம் என எல்லாம் செய்து கதாநாயகி வஹீதாவை எளிதாகவும் முழுமையாகவும் தன் பக்கம் ஈர்த்துவிடுகிறார் ஜிப்ஸி. எந்நேரமும் முரட்டுத்தனமாகவும் அன்பற்றவராகவும் இருக்கும் அப்பாவிடம் சிக்கித் தவிக்கும் வஹீதாவுக்கு ஜிப்ஸி மூலம்தான் சிரிப்பு, மகிழ்ச்சி என்பன கிடைக்கின்றன. ஒருநாள் அவள் தன்னுடைய வீட்டு முற்றத்தில் நின்று மழையில் நனைந்து ஆனந்தம் அடைந்த 'பாவத்துக்காக' அவளைத் திருமணம் செய்துவைக்க முடிவெடுப்பார் அவளின் தந்தை. அந்தக் காட்சியில் வஹீதா மழையில் நனையும்போது, வில்லத்தனமான இசைப் பின்னணியுடன் எண்ட்ரீ கொடுப்பார் இரும்பு நெஞ்சம் கொண்ட அவர். அடுத்த காட்சியிலேயே அவளுடைய நிச்சயதார்த்தம் காட்டப்படும். அப்போது அந்த வில்லத்தனமான இசை அப்படியே சோகம் ததும்பும் இசையாகப் பரிணமிக்கும்.

கதாநாயகிக்கு நிச்சயம் செய்து வைத்திருக்கும் மணமகனின் தாய் அடுப்பங்கரையில் புழுங்கிக் கிடப்பதைக் காட்டி, கதாநாயகிக்கும் அதேவிதமான ஓர் எதிர்காலம் காத்திருக்கிறது என்பதைக் குறியீடாக உணர்த்துவதன் வழியாக முஸ்லிம் பெண்கள் என்போர் முஸ்லிம் ஆண்களிட மிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர்கள் என்று இந்தப் படம் நிறுவ முனைகிறது.

திருமண ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்த வேளையில், அதில் விருப்பமில்லாத வஹீதா யாருக்கும் தெரியாமல் தன் காதலன் ஜிப்ஸியைக் கூட்டிக்கொண்டு திடீரென ஓடிப்போய்விடுகிறார். உத்தர பிரதேசத்தில் கணவன்-மனைவியாக வாழும் ஜிப்ஸியும் வஹீதாவும் அங்கு இந்து தேசியவாதிகளால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். படுகொலைகள், பொருட் சேதங்கள், பாலியல் வன்கொடுமைகள் என எல்லா அட்டூழியங் களையும் கட்டவிழ்த்து விடுகிறது அந்த கும்பல். ஜிப்ஸியின் குதிரை சே-வையும் தீயிட்டுக் கொலை செய்கிறது. அந்தச் சமயத்தில் கருவுற்றிருந்த வஹீதாவை ஓர் இந்து பக்திமான் காப்பாற்றுகிறார். மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில், கைக் குழந்தையுடன் வஹீதாவை கேரளாவில் வசிக்கும் அவளின் தந்தையிடம் அவர் ஒப்படைக்கிறார். தன் மகள் ஓடிப்போனதால் ஏற்பட்ட அவமானத்தின் காரணமாக நாகூரில் இருந்து கேரளாவுக்குக் குடிபெயர்ந்திருப்பார் அந்த தந்தை.

ஓராண்டு கழித்து சிறையிலிருந்து நிரபராதி என்று வெளிவரும் ஜிப்ஸி தன்னுடைய மனைவியைத் தேடி கேரளாவுக்கே செல்கிறார். பெரும் வன்முறையைப் பார்த்து மனநலம் பாதிக்கப்பட்டு தம் பெற்றோருடன் வசிக்கும் வஹீதாவைச் சந்திப்பதற்காக வீட்டுக்குச் செல்லும் ஜிப்ஸியை அவளின் தந்தை வசைபாடி திருப்பியனுவிடுவார். பிறகு, அங்குள்ள சிபிஎம் காம்ரேடுகளோடு சேர்ந்து ஜிப்ஸி அந்த 'அடிப்படைவாத' தந்தையிடம் இருந்து பாவப்பட்ட அந்த கதாநாயகியை எப்படி மீட்கிறார் என்பதுதான் மீதிக் கதை.

முஸ்லிம் பெண்கள் மூச்சு முட்டும்படியான ஒடுக்குமுறையின் கீழ் துன்புற்று வருவது போலவும், கிடைக்கும் முதல் வாய்ப்பில் தங்கள் குடும்பங்களைவிட்டு வெளியேறிவிடத் துடித்துக்கொண்டிருப்பது போலவும் ஒரு கருத்தை இப்படியான காட்சிகள் மூலம் கடத்தியிருக்கிறார் இயக்குநர்.

முஸ்லிம் ஆண்கள் எதிர் முஸ்லிம் பெண்கள் எனக் கட்டமைப்பது, முஸ்லிம் ஆண்களை கொடூரர்களாகச் சித்தரிப்பது, அவர்களை அடிப்படைவாதி என்பது, அவர்களிடம் இருந்து முஸ்லிம் பெண்ணுக்கு இந்து ஆண்தான் விடுதலை தரவேண்டும் எனக் கொக்கரிப்பது போன்றவை இந்து தேசியவாதிகளின் அரசியல். அதற்குத் துணை போகும் வகையிலேயே ஜிப்ஸி படம் அமைந்துள்ளது. இது ராஜு முருகனிடம் இருக்கும் சிக்கல் மட்டுமல்ல CPM காரர்களின் (அதிலும் குறிப்பாக கேரள கட்சிக் காரர்களின்) கண்ணோட்டத்திலேயே இருக்கின்ற சிக்கல். அதனால்தான், படம் இஸ்லாமோஃபோபியாவின் சிபிஎம் வெர்ஷனாக வெளிவந்துள்ளது.

இந்து எனும் வளையத்துக்குள் இருந்துகொண்டு பாதிக்கப்படும் முஸ்லிம் சமூகம் குறித்து தன் மனம் போன போக்கில், பொறுப்புணர்வு கொஞ்சமும் இல்லாமல் படம் எடுத்திருக்கிறார்கள். இந்த லட்சணத்தில் தான் இவர்கள் தங்களை ஒடுக்கப்பட்ட சமூகங்களின் மீட்பர் எனக் கருதிக் கொள்கிறார்கள். இவர்கள் தங்களைத் தாங்களே இப்படி சக்திமான்களாகக் கற்பனை செய்துகொள்ளும் முதிராப் பருவத்திலிருந்து வளர்ந்து எப்போது வயசுக்கு வருவார்கள் என்பதுதான் நம் முன்னுள்ள மில்லியன் டாலர் கேள்வி.

**- Source: www.meiporul.in**

புர்கா

## இஸ்லாம் / முஸ்லிம் பெண்களின் வாழ்வியல் குறித்த புரிதலற்ற மூடர்களின் இஸ்லாமோபோபியா!

கணவனை இழந்த நஜ்மா, வீட்டில் தனியாக இருக்கிறார். 144 தடை உத்தரவு அமலில் உள்ளது. காசு வாங்கிக் கொண்டு கலவரம் செய்யும் சூர்யா, கலவரத்தில் அடிபட்டு நள்ளிரவில் நஜ்மா வீட்டுக் கதவைத் தட்டுகிறார். அவருக்கு முதலுதவி செய்து உயிரைக் காப்பாற்றுகிறார் நஜ்மா. மறுநாள் விடைபெறுகிறார் சூர்யா. ஒரு நாள் முழுவதும்

நஜ்மாவிற்கும் சூர்யாவிற்கும் நடைபெறும் உரையாடல்தான் திரைப்படமாக எடுக்கப் பட்டுள்ளது.

இஸ்லாமிய மதத்தில், கணவன் இறந்த பிறகு, மனைவி அவளது கணவன் கருவைத் தான் சுமக்கிறாளா என்பதை அறிய 'இத்தா' என்னும் கொடுமையான வழக்கம் பின்பற்றப் படுகிறது. நான்கு மாதங்கள் வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் சடங்கு அது என்பது போன்ற கண்ணோட்டத்தில் இத்திரைப்படத்தில் காட்சிகள் அமைக்கப் படுகின்றன.

உண்மையில் "இத்தா" என்பது இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளுள் ஒன்று. எல்லாம் வல்ல இறைவன் தனது திருமறை குர்ஆனில் என்று பெண்கள் மீது இத்தா என்ற காத்திருப்பு காலத்தை கடமை யாக்கியுள்ளான்.

இத்திரைப்படத்தில் காட்டியுள்ளது போன்று "இத்தா" காலத்தில், பெண்கள் வீட்டிற்குள்ளேயே அடைத்து வைக்கப் படுவார்கள், வீட்டிற்கு உள்ளேயும் புர்கா அணிந்திருப்பார்கள், வெளியில் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள், அறைக்குள் பூட்டி வைக்கப்படுவார்கள்! என்றெல்லாம் இல்லை.

கணவனை இழந்த பெண் நான்கு மாதங்கள் பத்து நாட்கள் அடுத்த திருமணம் செய்யாமல் இருக்க வேண்டும். அவ்வளவுதான். இந்த காத்திருப்பு நாட்களை, அவளது சாதாரண நாட்களை போல கடத்து வதில் இஸ்லாம் எந்த கட்டுபாடுகளையும் விதிக்கவில்லை.

ஏன் நான்கு மாதங்கள் பத்து நாட்கள் காத்திருக்க வேண்டும். ஒரு கணவன் மனைவி உறவு கொள்ளும் போது இந்த கணவனின் "பாலியல் ரேகை" அந்த மனைவியின் உடலிலிருந்து நான்கு மாதங்கள் பத்து நாட்கள் கழித்து தான் முழுமையாக அழியும். இது அறிவியல் ரீதியான மருத்துவ உண்மை.

இதை ஆய்வு செய்தே ஒரு யூத விஞ்ஞானி இஸ்லாத்திற்கு வந்துள்ளார். ஆம் அவரது பெயர் ராபர்ட் இல்ஹாம்.

கணவனை இழந்த பெண்கள் நான்கு மாதங்களும், பத்து நாட்களும் மறுமணம்



செய்யாமல் இத்தாவைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது இன்று அறிவியல் மூலமாகவும் நிரூபிக்கப்பட்ட உண்மை ராபர்ட் கில்ஹாம் என்ற யூத விஞ்ஞானி இது குறித்து ஓர் ஆய்வை மேற்கொண்டார்.

தம்பதியர் உடலுறவு கொண்டால், ஆண், தனது பாலின ரேகையைப் பெண்ணிடம் விட்டுச் செல்கின்றான். அந்த ரேகை மூன்று மாதங்களுக்குப் பிறகே முற்றாக அழியும் என்று ராபர்ட் கண்டு பிடித்தார்.

அதற்கேற்ப, அமெரிக்காவில் ஆப்பிரிக்க முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒரு பகுதியில் கள ஆய்வில் இறங்கினார். அப்பகுதியில் வாழும் முஸ்லிம் பெண்களிடம் அவர்களின் கணவர்களது ரேகைகள் மட்டுமே பதிவாகியிருந்தன.

அதே நேரத்தில், அமெரிக்கப் பெண்கள் வாழும் ஒரு தெருவில் ஆய்வை மேற் கொண்ட



போது, அப்பெண்களிடம் பல்வேறு ரேகைகள் காணப்பட்டன. மூன்று வெவ்வேறு ரேகைகள் அவர்களில் பதிவாகியிருந்தன.

ராபர்ட் கில்ஹாம் அதிரடியாக ஒரு காரியம் செய்தார். அவர் தம் மனைவியை மருத்துவப் பரிசோதனைக்கு ஈடுபடுத்தினார்.

அவளிடம் மூன்று ரேகைப் பதிவுகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி யடைந்தார். அத்துடன் தம்முடைய மூன்று மகன்களில் ஒருவன் மட்டுமே தமக்குப் பிறந்தவன் என்பதையும் கண்டறிந்தார்.

-https://www.shia-news.com/

- https://vk.com/

கணவன் இறந்த ஓரிரு மாதங்களில் ஒரு பெண் திருமணம் செய்தால் இரண்டாம் கணவன் மூலம் பெற்றெடுக்கும் அவளது குழந்தை இரண்டாம் கணவனின் டி.என்.ஏ வுடன் ஒத்துப் போகாமல் இருக்க சாத்திய முண்டு. முதல் கணவனின் டி.என்.ஏ, யுடன் ஒத்துப் போகும் வாய்ப்பும் உள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பும் “இத்தா” வின் அவசியத்தை உணர்த்துகிறது.

நான்கு மாதங்களும், பத்து நாட்களும் கழித்து அவள் மறுமணம் செய்து கொண்டால், டி.என்.ஏ. பரிசோதனை யில் குழப்பம் இராது. திருக்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தை என்று அறிந்து ராபர்ட் கில்ஹாம் இஸ்லாத்தை ஏற்றதற்கு இத்தா எனும் சட்டம் காரணமாக அமைந்தது. இத்தா எந்த அளவுக்கு முக்கியத் துவம் வாய்ந்த விதி முறை என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இந்நிலையில் புர்கா படக்குழுவினர் முஸ்லிம்கள் நான்கு மாதம், பத்து நாட்கள் கணவனை இழந்த பெண்களை இத்தா என்ற பெயரில் இருட்டறையில் அடைத்துக் கொடுமைப் படுத்துகின்றனர் என தவறாக எண்ணியுள்ளனர்.

மறுமணம் செய்யாமல் இருப்பதும், திருமணத்தைத் தூண்டும் அலங்காரங்களைத் தவிர்ப்பதும் முதல் கணவனின் நினைவுகளில் இருந்து மீளவுமே தான் இத்தா என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## தி கேரளா ஸ்டோரி

## வெறுப்புணர்வை தூண்டி பிரிவினையை தூண்டும் இந்துத்துவவாதிகளின் இஸ்லாமோபோபியா!

சுதிப்தோ சென் இயக்கியுள்ள ‘தி கேரளா ஸ்டோரி’ திரைப்படம் கடும் சர்ச்சைகளுக்கு மத்தியில் நாடு முழுவதும் வெளியாகியுள்ளது.

கேரளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து செவிலியர் படிப்பிற்காக கல்லூரியில் இணையும் நாயகிகளான ஷாலினி (ஆதா ஷர்மா), கீதாஞ்சலி(சித்தி இத்னானி), நிமா(யோகிதா பிகானி), ஆசிஃபா (சோனியா பலானி) ஆகியோர் விடுதியில் சந்தித்துக் கொள்கின்றனர். இதில் ஆசிஃபா இஸ்லாம் மத நெறிகளைக் கடுமையாகப் பின்பற்றுபவராக இருக்கிறார். நாளடைவில் நெருக்கமாகும் தன் தோழிகளிடமும் இஸ்லாம் மதத்தின் தேவை குறித்தும் அல்லா ஒருவனே இறைவன், மற்ற தெய்வங்கள் கோழைகள் என அவர்களிடம் கூறுகிறார். அதைப் அப்பெண்கள் விளையாட்டாக கடந்துசெல்கின்றனர். ஆனால், ஆசிஃபா அவர்களை பல்வேறு வழிகளில் மூளைச்சலவை செய்து இஸ்லாம்தான் பெண்களைப் பாதுகாக்கிறது என நம்பவைக்கிறார்.

இந்துக் கடவுகள் குறித்து கடுமையாக கேள்விகளை எழுப்பும் ஆசிஃபாவிற்கு பதில் சொல்ல முடியாமல் தவிக்கும் ஷாலினியும் கீதாஞ்சலியும் புர்கா அணியவும் ஓரளவு இஸ்லாம் குறித்தும் அறிந்து கொள்கின்றனர்.

இதற்கிடையே ஆசிஃபா தான் சார்ந்திருக்கும் இஸ்லாம் மத அடிப்படைவாத கும்பலிடம் தன் தோழிகளின் புகைப் படங்களை அனுப்பிவைக்கிறார். அக்குழுவின் வேலை, மாற்று மதப் பெண்களை இஸ்லாமியராக மாற்றி ஐஎஸ்ஐஎஸ் போன்ற பயங்கரவாத அமைப்புக்கு பாலியல் அடிமைகளாக அனுப்பி வைப்பது.

இந்த வலையில் அப்பெண்களைச் சிக்க வைக்க இரு இஸ்லாமிய இளைஞர்கள் ஷாலினி மற்றும் கீதாஞ்சலியிடம் நெருக்கமாக பழகுகிறார்கள். ஒருகட்டத்தில் அது காதலாக மாறி உடலுறவும் நடக்கிறது. இதில் ஷாலினி கர்ப்பம் அடைகிறார். கீதாஞ்சலியின் நிர்வாணப் படங்களையும் விடியோக்களையும்



அவரின் காதலன் பதிவு செய்கிறான். கர்ப்பமான ஷாலினி என்னைத் திருமணம் செய்துகொள் என தன் காதலன் ரமீஸிடம் சொல்கிறாள். அவன் மறுத்து தலைமறை வாகிறான். உடனே, ஷாலினி ரமீஸை அறிந்த இமாம் ஒருவரிடம் தன் நிலையைக் கூறுகிறாள். இதைக் கேட்ட இமாம் 'ரமீஸுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது. இன்னொருத்தியின் கணவன் மீது நீ ஆசைப்பட்டது இஸ்லாம் நெறிகளுக்கு எதிரானது. இந்தப் பாவத்தைக் கழுவ நான் சொல்கிற இஸ்லாமியனைத் திருமணம் செய்துகொண்டு சிரியா செல். அங்கு சேவை செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்' என்கிறார். ஷாலினி ஃபாத்திமாவாக மாறி இன்னொருவரைத் திருமணம் செய்துகொண்டு சிரியா செல்கிறாள். அங்கு அவளுக்கு என்ன நடந்தது? நிமாவும் கீதாஞ்சலியும் என்ன ஆனார்கள்? என்பது மீதிக்கதை.

இப்படம் உண்மைச் சம்பவங்களை அடிப் படையாகக் கொண்டு எடுக்கப்பட்டதாக படக்குழு தெரிவித்திருக்கிறது. ஆனால், பாதிக்கப்பட்ட சிலரின் வாழ்க்கையைக் கொண்டு ஒட்டுமொத்த இஸ்லாம் மதத்தையும் கடுமையாக சித்திரித்துள்ளார் இயக்குநர். ஒவ்வொரு காட்சியிலும் இஸ்லாமியர்கள் மிகக் கேவலமான சிந்தனையாளர்கள் என்பதைப் போல நிறுவ முயன்றிருக்கிறார்கள். குறிப்பாக, படத்தின் ஆரம்ப காட்சியில் கல்லூரி சுவரில் 'காஷ்மீருக்கு விடுதலை வேண்டும்', 'தேசியவாதம் ஹராம்', 'இஸ்லாம் ஒன்றே அடையாளம்' போன்ற பிரிவினைக் கருத்துக்களை கேரள இஸ்லாமியர்கள் கூறுவதைப்போல் காட்சிப்படுத்தியுள்ளனர்.

கதையின் போக்கில் கிறிஸ்துவப் பெண்ணான நிமா கழற்றிவிடப்பட்டு இந்துப் பெண்களான ஷாலினி, கீதாஞ்சலி மட்டுமே இஸ்லாம் மதவாதிகளுக்குத் தேவை என்பதைப் போல திரைக்கதை நகர்கிறது. காட்சிகள் மாற மாற இந்துத்துவ அரசியலின் கை ஓங்கி, இஸ்லாமியர்களின் அடிப்படை வாதத்தைக் கேள்வி கேட்பதாக நினைத்து ஒரு இஸ்லாமியப் பெண்ணோடு மற்ற மதப் பெண்கள் பழகினால் இப்படித்தான் மூளைச்சலவைக்கு ஆளாவார்கள் எனக் கூறுகிறார்கள்.

உச்சகட்டமாக இப்படத்தில் இஸ்லாம் மதத்துடன் இடதுசாரிகளையும் சேர்த்துச் சாடியுள்ளார் இயக்குநர். ஒரு காட்சியில் கீதாஞ்சலி சொல்கிறாள், 'கம்யூனிஸ்ட்களைப் போல் பெண் வெறுப்பாளர்கள் யாரும் இல்லை' என. கிளைமேக்ஸ்க்கு முன் தான் பாதிக்கப்பட்டதை உணர்ந்த அதே கீதாஞ்சலி கம்யூனிஸ்ட்டான தன் தந்தையிடம் அழுது கொண்டே சொல்கிறாள், 'நீ நாத்திகம், கம்யூனிசம் பேசியதற்கு நம் நாட்டின் கலாச்சாரத்தையும் மதப்பெருமைகளையும் பேசியிருக்கலாம்'. எப்படியிருக்கிறது உண்மைச் சம்பவங்களின் அடிப்படையிலான திரைப்படம்?

இது கேரள மாநிலத்தைச் சேர்ந்த மூன்று பெண்களின் கதைதான் என்றும் எனக்கு எந்த அரசியலும் தெரியாது என்றும் இயக்குநர் கூறியிருந்தார். ஆனால், இது இஸ்லாமுக்கு எதிராக அவர்களை வெறுப்பவர்களுக்கு ஆதரவாக எடுக்கப்பட்ட படம் என எளிய பார்வையாளன் கூட கண்டுகொள்வான். எவ்வளவு மோசமாக ஒரு திரைப்படத்தை எடுத்தாலும் யாரை நாம் தவறானவர்கள் எனக் காட்டுகிறோமோ அவர்கள் கூட்டத்தில் ஒரு நல்லவரையாவது காட்டுவார்கள். இப்படத்தில் அதுவும் இல்லை. காசர்கோடு, இலங்கை, சிரியா வரை நீளும் கதையில் இடம்பெற்ற இஸ்லாமியர்களில் ஒருவர் கூட நல்லவர் இல்லை!

எல்லாவற்றையும் விட முழுப்படமும்

குறிப்பிட்ட சமுதாயத்தை மோசமாக சித்திரித்தை மத்திய தணிக்கைக் குழு கண்டு கொள்ளாமல் விட்டதுதான் வேடிக்கையான ஒன்று. கவனிக்காமல் விட்டார்களா கவனித்த தால் விட்டார்களா எனத் தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்லது செய்கிறேன் என புதிய பிரச்னைகளுக்கு வழிவகுத்துள்ளனர். சினிமா மிகப்பெரிய ஊடகம். நம் கருத்துக்கள் பல கோடி மக்களைச் சேர்கிறது என தன்னுணர்வு ஒவ்வொரு இயக்குநருக்கும் தேவை. இத்தனை வெறுப்பை உமிழ்ந்த படத்தைப் பார்த்து முடிந்ததும் மக்கள் அமைதியாக கலைவார்கள் என நினைத்தால் சிலர் கைதட்டி விசில் அடிக்கிறார்கள்.

அத்தனை தடைகளை மீறி வெளியான தி கேரளா ஸ்டோரி "உண்மையில்" யாருக்காக எடுக்கப்பட்டதோ அவர்களைச் சென்றடைந்துவிடும் என்றே தோன்றுகிறது.

– **தினமணி விமர்சனம்**

# பெண்ணியவாதிகள் பேசும் பெண்ணுரிமை!

இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத் திருப்பதும், உங்களிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.(அர்ரூம் 30:21)

"பிரபஞ்சத்தின் ராஜாவாகிய இறைவன் என்னைப் பெண்ணாகப் படைக்காதிருந்து, என் மீது அருள் பொழிந்துள்ளான்." (யூத ஆண்களின் பிரார்த்தனை)

"மனைவியாக இருந்தாலும், தாயாக இருந்தாலும் ஒரு வித்தியாசமும் இல்லை. அவள் ஏவாள் தான். எனவே எந்தப் பெண்ணின் மீதும் நாம் மிக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."(புனித அகஸ்டின்)

முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் கொலை செய்யப்படுவதோ, முஸ்லிம் பெண்கள் கற்பழிக்கப்படுவதோ, உலகின் பல பாகங்களிலும் முஸ்லிம்கள் ஒடுக்கப்படுவதோ இங்கே மனித உரிமைகள் விவகாரம் இல்லை. மேற்கத்திய பார்வையில் இதனை நோக்கினால், பாதிக்கப்பட்டவர்கள்தான் இங்கே அதிகமாக குற்றஞ்சாட்டப்பட்டு திட்டப்படுவார்கள்; ஒடுக்குபவர்கள் இங்கே உத்தமர்கள்.

"நாகரிகங்களின் மோதல்" உள்ள இக்கால கட்டத்தில் முஸ்லிம் பெண்கள் விவகாரம் பெரிய 'உரிமைகள்' பிரச்னையாக மாறி யிருக்கிறது. ஐரோப்பாவும், அமெரிக்காவும், "தங்கமான தரத்தில்" வைத்து பெண்கள் விஷயத்தில் பார்க்கப்படுகிறார்கள். பெண்களுக்கு அவர்களது சமூகத்தில் "வழங்கப்பட்டுள்ள கண்ணியம்" பெரிதும் போற்றப்படுகிறது. முஸ்லிம்களும் அவ்வழியைப் பின்பற்ற வேண்டும் என்று பரவலாக கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன.

மேலைநாடுகள், பெண்களை அடக்கி ஒடுக்கிய, பெண்களை மனித இனமாகவே கருதாத ஒரு பென்னம் பெரிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்பதை நாம் மறந்து விடலாகாது. 1860 வரை, இங்கிலாந்திலுள்ள ஒரு மணமான பெண், சட்டபூர்வமான ஒரு வராகக் கருதப்படவில்லை. திருமண மானவுடன் அந்தப் பெண் அவளது கணவனின் உடைமையாகி விடுவாள்

அவளது பெயரும் தான் யாருடைய சொத்து என்பதை வெளிக்காட்டும் முகமாக மாற்றப்பட்டுவிடும். இந்தப் பழக்கம் இன்றும் தொடர்கிறது. அவளால் ஒரு சொத்தை வாங்க முடியாது, ஒப்பந்தம் போட முடியாது, உயில் எழுத முடியாது, அவளது சொந்த குழந்தை களின் பாதுகாவலராக ஆவதற்கான உரிமை கள் கோர முடியாது.

1632ம் ஆண்டின் இங்கிலாந்துச் சட்டம் இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது: "கணவனுக்கு என்னவெல்லாம் உண்டோ

அதுவெல்லாம் அவனுக்கே சொந்தம். மனைவிக்கு என்னவெல்லாம் உண்டோ அதுவெல்லாம் அவளது கணவனுக்கே சொந்தம்!” இதைவிடவும் மோசமானது என்னவெனில், ஒரு பிடிக்காத திருமணத் திலிருந்து வெளிவரும் உரிமைகள் அவளுக்குக் கிடையாது.

1857ம் ஆண்டு வரை, விவாகரத்து என்பது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் ஒரு சட்டமாகவே இருந்தது. அங்கே பெண்ணின் இரண்டாந்தர நிலை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. “ஆண் இறைவனின் நிழலும், மகத்துவமும் ஆவான். ஆனால் பெண்ணோ ஆணின் நிழலும், மகத்துவமும் ஆவாள்.” (டி கொரின்தியன்ஸ் 11:7)

ஆதலால் மேலைநாட்டில் 15ம் நூற்றாண் டிலிருந்து 18ம் நூற்றாண்டுவரை வாழ்ந்த எந்த ஒரு மதிக்கப்படத்தக்க தலைவரும் இந்தக் கருத்தை எதிர்க்கத் துணியவில்லை. மிகப் பெரிய சீர்திருத்தவாதி மார்ட்டின் லூதர் இவ்வாறு கூறுகிறார்: “பெண்கள் தளர்ந்து விட்டாலோ, இறந்து விட்டாலோ அது ஒரு பொருட்டே அல்ல. அவர்கள் குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிடட்டும், அதற்குத் தான் அவர்கள் இருக்கிறார்கள்”.

மேரி வோல்ஸ்டோன்கிராஃப்ட் (1792), ஜான் ஸ்வோர்ட்மில் (1869) ஆகியோர்தான் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை களுக்கெதிராகக் குரல் கொடுத்தவர்கள். ஆனால் அவர்கள் தகுதியற்ற மனிதர் களாதலால் அவர்கள் காலத்தில் வாழ்ந்த வர்களால் புறந்தள்ளப்பட்டார்கள்.

19ம் நூற்றாண்டில் நிலைமை கொஞ்சம் மாறத் தொடங்கியது. அதுவும் பெண் களுக்கான நியாயமான காரணங்களுக்காக அல்ல. அப்போது ஏற்பட்ட முதலாளித்துவ தொழிற்புரட்சியினால் இந்த மாற்றம் தேவைப்பட்டது.

இந்தப் புரட்சி ஏற்பட்டவுடன் கைவினை ஞர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அவர்கள் தங்கள் பிழைப்பிற்காக பெரிய நகரங்களை நோக்கி நகர்ந்து கடைகளிலும் வேலைக்குச் சேர்ந்தனர். அவர்களது வயிற்றை நிரப்பும் அளவுக்கு கூலி தரப்பட்டது.

ஆனால் வீட்டில் மனைவியையும், குழந்தைகளையும் காப்பாற்றக்கூடியதாக அந்த வருமானம் இல்லை. அவர்கள் 'குடும்பப் படி' கேட்டனர். கொடுக்கப்படவில்லை.

வேறு வழியில்லாமல் வீட்டிலிருந்த பெண்களையும், குழந்தைகளையும் வேலைக்கு அனுப்ப ஆரம்பித்தனர். இப்படித்தான் வீட்டிலிருந்தே பெண்கள் வெளிக்கொண்டு வரப்பட்டனர். பின்னர் கிளார்க் வேலைகள் பரவ ஆரம்பித்தபொழுது எல்லா தரப்பு பெண்களும் லட்சக்கணக்கில் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தனர். அவர்கள் விற்பனைப் பணிப்பெண்களாகவும், தட்டச்சுப் பணியாளர்களாகவும், செயலர்களாகவும் பணியில் சேர்க்கப்பட்டனர். ஆண்களை விட பெண்கள் வேலைக்கு வருவதில் இன்னொரு பெரிய லாபம் இருந்தது. அதுதான் குறைந்த சம்பளம்.

இந்த லாபங்கலெல்லாம் மறைக்கப்பட்டு, பெண்கள் வீட்டைவிட்டு வெளிவருவதற்கு பெண்ணிய இயக்கவாதிகளால் “பெண்ணுரிமை” முலாம் பூசப்பட்டது.

எத்தனை பெண்கள் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டனரோ அந்த அளவுக்கு “பெண்ணுரிமை” வளர்ந்ததாக தணிக்கப் பட்டது.

தொழிற் புரட்சி, இயந்திரப் புரட்சியால் ஏற்பட்ட சமூக மாற்றம் “பெண்கள் முன்னேற்றம்” என்று பெயர் சூட்டப்பட்டது.

பெண்ணியவாதிகளின் இந்த “முன்னேற்றம்” தந்த வாதம் என்னவெனில், ஒரு பெண் தனது கணவனுக்கும் பிள்ளைகளுக்கும், உணவு பரிமாறினால் அது அடிமைத்தனம்! அனால் அதே பெண் யாருக்கோ, எவருக்கோ ஹோட்டல்களிலும், விடுதிகளிலும், விமானங் களிலும் உணவு பரிமாறினால், அதனால் நேரிடும் பாலியல் தொல்லைகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு சேவைகள் செய்தால் அது பெண்களின் “முன்னேற்றம்!” என்னே அருமையான வாதம்..!

பழங்கால கிரேக்கத் தத்துவவியலாளர்கள் பெண்ணுக்கு ஆன்மா உண்டா, இல்லையா என்று கடுமையாக விவாதம் செய்தனர். ஆனால் “நாகரிகத்தின்” உச்சாணிக் கொம்பில்

உட்கார்ந்திருக்கும் ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் இந்தப் பொல்லாத விவாதத்திற்கு விடை தந்து விட்டனர்.

அதாவது, பெண் என்பவள் ஓர் உடலைத் தவிர வேறொன்றும் இல்லை. ஆன்மாவாவது, கத்தரிக்காயாவது. பெண் என்பாள் ஓர் அழகிய உடலுக்குச் சொந்தக்காரி. அவளை எப்படி வேண்டுமானாலும் பார்க்கலாம்; ரசிக்கலாம்; பயன்படுத்தலாம். அவளை அரை நிர்வாணத்துடனும் பார்க்கலாம்; முழு நிர்வாணத்துடனும் பார்க்கலாம்.

"பெண்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துவிட்டார்கள்" என்று மேலை நாடுகள் மார் தட்டிக்கொண்டிருக்கும் பொழுதுதான் இந்த நிர்வாணக்கோலங்கள் அரங்கேறுகின்றன.

"லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்" என்ற பத்திரிகை இண்டர்நெட்டில் உலாவும் ஆபாசப் படங்கள் பற்றி ஓர் ஆய்வை மேற்கொண்டது. "நிர்வாணப் படங்கள் வேண்டுமானால் குறைந்திருக்கலாம். ஆனால் இந்த இண்டர்நெட் உலகம் உருவாக்கியிருக்கும் போக்கு எப்படிப் போய்விட்டதென்றால் பெண் தனது உடலை வியாபாரப் பொருளாக்கி, அதனை இண்டர்நெட்டில் உலாவவிட்டு, வாடிக்கையாளர்களுக்கு வலை வீசும் அவலம் வந்து விட்டது." என்று அந்த ஆய்வு கூறுகின்றது.

இந்தச் சூழ்நிலை நிலவும் ஒரு நாட்டில் பெண்களை பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்திய ஓர் அதிபர், பெண்களிடமிருந்தே அதிக ஓட்டுகளை வாங்கினால், அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இருக்கிறதா? யாரும் எதைப் பற்றியும் கவலைப்படாத ஒரு சமுதாயம் அது. ஏனெனில் பாலியல் கொலைகள் என்பது அங்கு அன்றாடச் செய்தி. சாதாரண செய்தி. 'வீட்டு வாழ்க்கை' அமைப்பு அழிந்ததன் விளைவு தான் இந்தக் கேடுகெட்ட சூழ்நிலை உண்டானதன் காரணம்.

1994ம் ஆண்டு மட்டும், 12 லட்சம் விவாகரத்துகள் ஆனானப்பட்ட அமெரிக்காவில் அரங்கேறியிருக்கிறது. நிபுணர்கள், புதிய திருமணங்களில் பாதி விவாகரத்தில் தான் முடியும் என்று சர்வ சாதாரணமாகக் கணிக்கிறார்கள். ஓர் அநீதி அமைப்பால் சுரண்டலின் வடிவம்தான் மாறியிருக்கிறது. அவர்களால் வீடுகளின் விஷயங்களை மாற்ற முடியவில்லை. ஆதலால் அவர்கள் வீடுகளை விட்டும் பெண்களை 'விடுதலை' செய்து விட்டனர்.

முற்காலத்தில், கெட்ட ஆண்களுக் கெதிராகப் போராடிய பெண், இன்று பெண்ணியம், நவீன பெண்ணியம் என்ற பெயரால் இன்றைய ஆண்களுக்கெதிராகப் போராடிக் கொண்டிருக்கிறாள்.

இதற்கெல்லாம் மாறாக, இஸ்லாம் பெண்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை அள்ளி வழங்குகிறது. அவர்களை வலுக் கட்டாயமாக வீட்டை விட்டு வெளியேற்றும் கொடுமை இஸ்லாத்தில் இடம்பெறவில்லை. அவளுக்கு சொத்துக்களைச் சொந்தமாக்கும் உரிமை உண்டு. வாரிசுரிமையும் உண்டு. திருமணத்தில் கணவனுக்கு என்ன உரிமை களெல்லாம் உண்டோ அத்தனை உரிமை களும் மனைவிக்கும் உண்டு.

இஸ்லாத்தில் பெண்கள் வீட்டின் எஜமானிகள். அவர்கள் வீட்டை நிர்வாகிக்கும் நிர்வாகிகள். குழந்தைகளை வளர்த்தெடுக்கும் பாதுகாவலர்கள். எதிர்கால சமுதாயத்தின் உயிர்நாடிகளான இன்றைய குழந்தைகளை வார்த்தெடுக்கும், வளர்த்தெடுக்கும் உன்னத பொறுப்பில் உள்ளவர்கள். அந்தக் குழந்தைகளின் சுவனம் பெண்ணின் காலடியில் தான் உள்ளது. அவளது கணவனின் நன்மைகள் அவளை அவன் எவ்வாறு நடத்துகிறான் என்பதை வைத்தே தீர்மானிக்கப்படும்.

ஒரு பெண்ணை நல்ல முறையில், அன்பு செலுத்தி அரவணைத்து வளர்த்தெடுக்கும் தந்தைக்கு நரகத்திலிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது.

ஆக, ஒரு கணவனுக்கு, ஒரு மகனுக்கு, ஒரு தந்தைக்கு ஈடேற்றம், பெண்ணை மையமாக வைத்துத்தான் என்று இஸ்லாம் அன்றே தீர்மானித்து விட்டது. இது இன்றைய "நவீன பெண்ணிய வாதிகளுக்கு" புரியுமா? இன்ஷா அல்லாஹ் காலம் புரிய வைக்கும்.

நன்றி: IMPACT INTERNATIONAL LONDON, MARCH 1997

விடியல் வெள்ளி - டிசம்பர் 2004

# நேர்வழி

தலையங்கம்

நம்மைப் படைத்த இறைவன் நமக்கு நிறைய அருட்கொடைகளை வழங்கியிருந்தாலும் அதில் முதன்மையானது, இறைவன் புறத்திலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய “நேர்வழியாகும்”. இந்த நேர்வழி தான் நம்மை தவறான பாதையிலிருந்து விலக்கி நேரான பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

பொய்யிலிருந்து விலக்கி நம்மை உண்மையில் நிலை நிறுத்தச் செய்கிறது. நரகத்திலிருந்து காப்பாற்றி நம்மை சுவனத்திற்கு அழைத்துச் செல்கிறது. இப்படிப்பட்ட நேர்வழியிலிருந்து திசை திருப்பக்கூடிய காரியங்களிலிருந்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். திருமறையில் திருக்குர்ஆனில் இறைவன் பல இடங்களில் இதைப் பற்றி எச்சரிக்கின்றான்.

“நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்கார மக்களுக்கு நேர்வழி காட்டமாட்டான்.” (அல்மாயிதா : 51)

அநியாயத்தை விட்டும் விலகி இருக்கும் வரை நமக்கு நேர்வழி கிடைக்காது.

அப்படியல்ல அவர்கள் (குர்ஆன் ஆகிய) அதன் அறிவைப் (ப் பற்றி) அறிந்து கொள்ள இயலாததை அதன் விளக்கம் அவர்களுக்கு எட்டாத நிலையில் பொய்யெனக் கூறுகிறார்கள். (யூனுஸ் : 39)

இப்னு தைமியா(ரஹ்) அவர்கள் கூறினார்கள்,

“மனிதர்களை விட்டும் நுபுவுத்துடைய ஒளி துண்டிக்கப்பட்டால் அவர்கள் பித்னாவுடைய இருளில் வீழ்ந்து விடுவார்கள். மேலும் அவர்களுக்கு மத்தியில் பித்அத்துகள், பாவமான காரியங்கள் மற்றும் தீங்கான செயல்கள் நிகழ்ந்து விடும்.”

அறியாமை அனைத்து வகையான பாவங்களுக்கும் அடிப்படையாக காணப்படுகிறது. நேர்வழி யிலிருந்து நம்மை வழிபிறழச் செய்கிறது.

“நீர் மனோ இச்சையைப் பின்பற்றாதீர் (அவ்வாறு பின்பற்றினால் அதன் காரணமாக) அல்லாஹ்வுடைய பாதையை விட்டும் அது உன்னை வழிதவறச் செய்துவிடும்.” ( ஸாத் : 26)

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள், ஜாஹிலியாக் காலத்தில் நடுவர் வெண்ணிறக் கல்லை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வணங்கி வருவார். அதனை விட மிக அழகான ஒரு கல்லைக் காணும்போது இரண்டாவது கண்ட கல்லை வணங்க ஆரம்பிப்பார். முதலாவதை விட்டுவிடுவார். இதுதான் மனோ இச்சையைப் பின்பற்றுவதன் யதார்த்த நிலையாகும். மேலும் இப்னு தைமியா(ரஹ்) கூறினார்கள் : “மனோ இச்சையைப் பின்பற்றுபவரை அவருடைய மனோ இச்சை குருடனாகவும், செவிடனாகவும் மாற்றிவிடும்”.

நேர்வழியிலிருந்து பிறழச் செய்யக்கூடிய தீயபண்புகளை விட்டும் நம்மை காத்துக்கொள்ள வேண்டும்.இன்னும் இறைவன் நமக்கு கற்றுத் தந்த துவாவை மனனம் செய்து துவா கேட்டு வர வேண்டும்.

(இறைவா) உன்னையே நாங்கள் வணங்குகிறோம், உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம், நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக( அது) உன் கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல, நெறி தவறியோர் வழியுமல்ல. ( அல்ஃபாத்திஹா : 5–7).




# விரிவாக்கப்பட்ட 5ஆம் பதிப்பு

நான்காம் பதிப்பு அதிவேகமாகவே விற்றுத் தீர்ந்தது. வெகுநாட்களுக்கு முன்பாகவே ஐந்தாம் பதிப்பை பதிந்திருக்க வேண்டும். நிதி நெருக்கடியும், இதர நூல்களை கொண்டு வந்திட வேண்டும் என்ற நிர்பந்தமும் ஐந்தாம் பதிப்பைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. எனினும் நான்கு பதிப்புகளும் மக்கள் மன்றத்தில் போதிய தாக்கங்களை ஏற்படுத்திடவே செய்தன. அத்தோடு மதுரை மாநகரில், இதன்முதல் பதிப்பை வெளியிடும்போது, நான் ஆற்றிய உரை சமூகத் தளங்களின் வழி வேகமாகவே மக்களைச் சென்றடைந்தது.


பலமுறை தொலைக்காட்சி விவாதங்களில் இந்த நூல் இடம் பெற்றது. இந்த விவாதங்களில் இந்தியாவில், தீவிரவாதத்தைத் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருக்கும் சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டார்கள். இந்த நூலின் எந்தப் பகுதியையும் அவர்களால், நிராகரித்திட இயலவில்லை. உண்மையைச் சொன்னால் விவாதத்தில் சிக்கிக்கொண்டு விழிபிதுங்கியே சென்றார்கள்.

“நாங்கள்தாம் குண்டு வைத்தோம் அதனால் என்ன?” என பல சங்கப்பரிவாரத்தினர் அறிக்கை விட்டுக்கொண்டே வருகின்றார்கள்.

# விட்டது....!

# கொலை

# யார்?



“நாங்கள்தாம் குண்டு வைத்தோம். ஆட்சியைப் பிடிக்க” என எஷ்வந்த் ஷிண்டே என்ற ஆர்.எஸ்.எஸ்.-இன் முழுநேர ஊழியன், நந்தேத் (மகாராஷ்டிரா மாநிலம்) நீதிமன்றத்தில், 29 ஆகஸ்ட் 2022 அன்று ஓர் சாட்சிய அறிக்கையைத் தாக்கல் செய்தபின் எல்லாம் வெளிச்சத்திற்கு வந்தது. ஷிண்டே-யின் வாக்குமூலம் முழுமையாக தமிழில் இப்போது, நூலாகக் கிடைக்கின்றது. இதே வேர்கள் பதிப்பகந்தான் அதையும் வெளியிட்டிருக்கின்றது. இப்படி இந்துத்துவவாதிகளே உண்மையை ஒத்துக்கொண்டதும், உரக்க முழங்கியதும் இது முதல்முறை அல்ல.

முதலில் இந்துத்துவ சந்நியாசி, சுவாமி அசீமானந்தா அவர்கள், நீதிபதியிடம் வழங்கிய வாக்குமூலம் பல ஆண்டுகளாகவே புழக்கத்திலிருக்கின்றது. அதில், ஹைதராபாத்திலுள்ள


1) பாணிபட் சம்சவ்தா எக்ஸ்பிரஸ் ரெயில் குண்டுவெடிப்பு 19 பிப்ரவரி 2007,

2) ஹைதராபாத்திலுள்ள மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு 18 மே 2007,

3) அஜ்மீர் தர்கா ஷெரீஃப் குண்டுவெடிப்பு 11 அக்டோபர் 2007

இவற்றையெல்லாம் தான்தான் ஏற்பாடு செய்தேன் என்றார், ஸ்வாமி அசீமானந்தா. அவர் இன்று சிறையில் இல்லை, பிணையில் இருக்கின்றார், சுதந்திர மனிதனாக. அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் என்றொரு நூலை வேர்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அதை வாசகர்கள் வாங்கிப் படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறெல்லாம் நாம் இந்த நாட்டின் உண்மையான தீவிரவாதிகளை இனங்கண்டு மக்களுக்கு இனங்காட்டி வருகின்றோம். இதன் வழி மக்கள் தெளிவடைந்துள்ளார்கள்.




இந்த நூலின் ஆசிரியர் முஷ்ரிஃப் அவர்கள் எழுத்தாளர் அல்ல. அவர் தன்னோடு பணியாற்றிய நேர்மையான அதிகாரி, திறமையான அதிகாரி. ஹேமந்த் கர்க்கரேயை கொலை செய்த குற்றவாளிகளை நீதியின் மூன் நிறுத்திட வேண்டும் என இடைவிடாது உழைத்துக் கொண்டிருப்பவர். அவரது அயராத உழைப்பு இன்னும் தொடர்ந்து

கொண்டிருக்கின்றது.

"அவர் கர்கரேயைக் கொலை செய்தது. திட்டமிட்ட செயல். அதை அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பும். மத்திய உளவுத்துறையுத்தான் செய்தது" என்பதில் மிகவும் உறுதியாக இருப்பவர். காரணம், கடுமையான முயற்சிக்குப் பின் பல ஆதாரங்களைத் திரட்டியுள்ளார்.

ஆதாரங்களை மெத்த சிரமப்பட்டு வரிசைப்படுத்துகின்றார். உச்ச நீதி மன்றத்தில் வழக்கொன்றை தொடுக்கின்றார். 26/11 என அடையாளப் படுத்தப்படும் மும்பை தாக்குதல், அதில் காவல்துறை அதிகாரி கர்கரே கொலை செய்யப்பட்ட பகுதியை மட்டும் மறு ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் எனக் கோரிக்கை வைக்கின்றார். உச்ச நீதிமன்றம் முதலில் மும்பை உயர்நீதி மன்றத்தில் நீதி தேடிடும்படி வழிகாட்டு கின்றது.

மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்கை பதிவு செய்கின்றார். அங்கேயுமே நீதி கிடைப்பதாக இல்லை. எனவே அத்தனை ஆதாரங்களையும் மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்கின்றார். அதுவே இந்த நூல்.

இந்நிலையில் ஒன்றிய காங்கிரஸ் அரசு, பா.ஜ.க.வின் அழுத்தங்களுக்கும் ஆர்.எஸ்.எஸ் இன் அழுத்தங்களுக்கும் உள்ளாகி ஓர் சிறப்பு நீதிமன்றத்தின் வழி 26/11 தாக்குதல் வழக்கை, விரைந்து முடிக்கவும் முஸ்லிம்கள் மேல் பழியைப் போடவும் முயற்சிகளை மேற்கொள்கின்றது.

அந்த முயற்சியின் வழி "அஜ்மல் கசாப்" என்பவர்தான் உண்மையான குற்றவாளி என முடிவு செய்தது. அந்த அப்பாவியை தூக்கிலேப் போட்டு மொத்த விவகாரத்தையும் புதைத்திட உத்தி வருக்கின்றது. காங்கிரஸ் அரசு அதன்மூலம் இந்துத்துவ பாசிசத்தையும் அதற்குத் துணையாக நின்ற உளவுத்துறையையும் காப்பாற்றி விடுகின்றது.

ஆமாம், சிறப்பு நீதிமன்றம் அஜ்மல் கசாப் என்ற சிறுவனை தூக்கில் போட தீர்ப்பு வழங்குகின்றது. அதனை அமோதிக்க உச்சநீதிமன்றம் விரைகின்றது ஒன்றிய அரசு.

"அமிகஸ் கூறே" நீதிமன்ற நண்பன் அதாவது நீதிமன்றத்திற்கு உதவி செய்பவர் என்ற அந்தஸ்தில், மூத்த வழக்கறிஞர் ராஜு இராமச்சந்திரன் அவர்களை உச்சநீதிமன்றம் நியமிக்கின்றது. உடனேயே எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் ராஜு இராமச்சந்திரன் அவர்களைத் தொடர்பு கொண்டு முழு விவகாரத்தையும் விளக்குகின்றார்.

ராஜு இராமச்சந்திரன் அவர்கள் அதனைத் தெளிவாக உச்ச நீதிமன்றத்தில் விளக்கிச் சொல்லுகின்றார். அத்தனைக்கும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் தலையசைக் கின்றார்கள். நீதி கிடைத்துவிடும் கர்கரேயைக் கொலை செய்த பகுதி மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என எல்லோரும் நம்பு கின்றார்கள்.

ஆனால், உச்ச நீதிமன்றம் விரைந்து கசாப்-ஐ தூக்கிலிடுகின்றது. இராஜு இராமச்சந்திரன் மிகவும் நன்றாக வாதிட்டார். அரசை தெளிவுபடுத்தினார் என இராஜு இராமச்சந்திரன் அவர்களைப் பாராட்டிற்று. அத்தோடு அவருக்கு 13 லட்சம் ரூபாயை வெகுமானமாகத் தந்தது. அவருடைய உதவியாளருக்கு ரூபாய் மூன்று லட்சத்தை வெகுமானமாகத் தந்தது. இதை உண்மையைப் புறந்தள்ளி, இராஜு இராமச்சந்திரன் போன்றவர்களை சாந்தப்படுத்தி மௌனம் காத்திட உச்சநீதிமன்றம் தந்த லஞ்சம், என யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது! ஆனால் கர்கரே கொலைக்கு நீதி கிடைக்கவில்லை.

ஆனால் இராஜு இராமச்சந்திரன் அவர்கள், அந்தப் பணம் 13 லட்சமும் தனக்கு வேண்டாம் எனக் கூறிவிட்டார்கள். இதன்பின்னர் உச்ச நீதிமன்றம், ஆன்றோர்கள், சான்றோர்கள் ஆகியோரின் மனங்களிலிருந்து வெகுவாகவே கீழே விழுந்தது!. இவற்றையெல்லாம், "26/11 Why Judiciary Also Failed?" என்ற நூலைத் தந்தார் எஸ்.எம். முஷ்ரிஃப் அதனை தமிழில் "26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?" என்ற நூலாக மக்கள் மன்றத்தில் வைத்தது வைகறை வெளிச்சம் ஆசிரியர் குழு. (வெளியீடு : வேர்கள் பதிப்பகம்)

அப்படி கசாப்-ஐ துக்கிலே போடும் போதுகூட ஆதாரங்களின் அடிப்படையில் அதனை செய்யவில்லை.







ஒருவரை தூக்கிலேபோட, குற்றம் ஐயங்களுக்கு அப்பால், நிரூபிக்கப்பட வேண்டும் என்ற வரையறைக்கு மாறாக சுமத்தப் பட்டக் குற்றங்கள் எதுவுமே நிரூபிக்கப்படவில்லை. ஆனால், நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சியைத் திருப்திப் படுத்திட அவரை - அஜ்மல் கசாப்-ஐ தூக்கிலே போடுகின்றோம் எனக்கூறியே தூக்கில் போட்டது உச்ச நீதிமன்றம். இவற்றை யெல்லாம் கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? என்ற நூலில் திரட்டித் தந்திருக்கின்றோம். (வெளியீடு :வேர்கள் பதிப்பகம்)

இப்படிக் கூட்டு மனசாட்சியைத் திருப்திப் படுத்திட, தூக்கிலே போடப்பட்ட இரண்டாவது அப்பாவி "அஜ்மல் கசாப்" முதல் அப்பாவி அப்சல் குரு இதனை நாடாளு மன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மை கள் என்ற நூலில் விளக்கமாகத் தந்துள்ளோம். (வெளியீடு : வேர்கள் பதிப்பகம்) அதனை வாசகர்கள் அவசியம் படிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆனால் எஸ்.எம்.முஷ்ரிஃப்-இன் முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. இந்த முயற்சியின் போதுதான் அந்த அதிர்ச்சியான தகவல் வெளியே வந்தது. அது, ஹேமந்த் கர்கரேயின் உடலில் பாய்ந்த குண்டு யாருடைய துப்பாக்கியில் இருந்து பாய்ந்தது இதில், கர்கரேயின் உயிரை முடிவாகக் குடித்த குண்டு மராட்டிய மாநில காவலர் ஒருவரின் கைத் துப்பாக்கியிலிருந்து தான் பாய்ந்தது. அந்தத் தகவலை எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் தந்தபடி அப்படியே இங்கே பதிவு செய்கின்றோம்.

ஹேமந்த் கர்கரேயின் பிரேத பரிசோதனையில் கிடைத்தத் தகவல்கள் பல அதிர்ச்சியான புதிய திருப்பங்களைத் தருகின்றது. பிரேத பரிசோதனை அறிக்கை குற்றப் பத்திரிகையின் ஒரு பகுதி என்றாலும், அதன் பிரதி ஒன்றைப் பெற்றிடுவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. இப்போது நான் (எஸ்.எம்.முஷ்ரிஃப்) அதன் பிரதி ஒன்றை மெத்த கஷ்டங்களுக்குப் பின் பெற்றுக் கொண்டேன். அதனை மிகவும் ஊன்றிப்

படித்தபோது, ஒரு வேறுபட்ட காட்சி வெளிச்சத்திற்கு வந்தது. அதனை இங்கே விரிவாகத் தருகின்றன.

*1)* மும்பை குற்றப்பிரிவு காவல்துறை தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையின்படி அஜ்மல் கசாப், இஸ்மாயில் கான் ஆகியோர் ரெங்கபவன் சந்தில் தங்களுடைய AK47 துப்பாக்கிகளுடன் பதுங்கி இருந்தார்கள். ஹேமந்த் கர்கரேயின் குவாலிஸ் கார் அங்கே வந்தபோது. தங்கள் கைகளிலிருந்த AK47(ஏகே47) துப்பாக்கியால் சுட்டார்கள். அந்தக் "குவாலிஸ்" காரிலிருந்த எல்லாரும் கொலை செய்யப்பட்டார்கள், ஒரு காவலரைத் தவிர.

*2)* கர்கரேயின் பிரேத பரிசோதனை அறிக்கையை படித்த போது, ஐந்து குண்டுகள், ஒரு கைத் துப்பாக்கியிலிருந்து கர்கரேயின் கழுத்துப் பகுதி வழியாக அவருடைய உடலுக்குள் பாய்ந்திருக்கின்றது. அந்தக் குண்டுகள் கழுத்துப் பகுதியிலிருந்து நேரே கீழே பாய்ந்திருக்கின்றன. மூன்று குண்டுகள் உடலின் உள்ளே பாய்ந்து வெளியே வந்து விட்டன. இரண்டு குண்டுகள் உடலிலேயே தங்கிவிட்டன.

இவையல்லாமல் வேறு குண்டு எதுவும் அவருடைய கர்கரேயுடைய உடலில் புகுந்திடவில்லை. தட்டச்சு பிரதி ஒன்று இங்கே இணைக்கப்பட்டுள்ளது. அந்த குவாலிஸ்காரில் இருந்த வேறு யாருடைய கழுத்திலும், இந்த கைத்துப்பாக்கிக் குண்டுகள் இல்லை.

*3)* இதிலிருந்து பெறப்படும் முடிவு என்னவெனில், கர்கரே அணிந்திருந்த குண்டு துளைக்காத கவசம் (அது அப்போதே காணமலாக்கப்பட்டுவிட்டது) அவரை, தீவிர வாதிகளின் (அபிநவ்பாரத்-ஐ சார்த்தவர்களின்) குண்டுகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றியே இருக்கின்றது. ஒரேடியாக கொன்று விடவில்லை. அபிநவ் பாரத்-ஐ சார்ந்தவர்கள் அவ்விடம் விட்டு அங்கே வந்த காரில் (ஸ்கோடோ) சென்று விட்டபின் வேறுசிலர் அந்தக் குவாலிஸ்-க்குள் புகுந்து தன்னுடைய கைத் துப்பாக்கியிலிருந்து கர்கரேயின் உடலுக்குள் குண்டுகளைப் பாய்ச்சி இருக்கின்றார்கள். இந்தக் குண்டுகளை, கர்கரே அணிந்திருந்த கவச உடைக்கும், அவருடைய காலர் (Collar) கழுத்துப் பகுதிக்கும் இடையே இருந்த இடைவெளிக்குள் புகுந்தப் பட்டிருக்கின்றது.

ஆனால், ஆச்சர்யப்படக்கூடிய அளவில் இந்த முக்கியமான ஆவணமாகிய பிரேத பரிசோதனை அறிக்கையை எந்த நீதிமன்றமும் கணக்கில் எடுக்கொள்ளவில்லை. நீதி மன்றங்கள் இந்தப் பிரேத பரிசோதனை அறிக்கையை விமர்சன பார்வையோடு விவாதித்திருக்க வேண்டும். அதனை தங்கள் தீர்ப்பிலும் விரிவாகச் சொல்லி இருக்க வேண்டும். இந்தப் பிரேத பரிசோதனை அறிக்கையைக் கண்டு கொள்ளாமல் விட்ட நீதிமன்றங்கள் மூன்று

அவை :

*1)* விசாரணை நீதிமன்றம்

*2)* உயர் நீதிமன்றம்

*3)* உச்ச நீதிமன்றம்

இத்தகையதொரு இமாலய தவறு நீதிமன்றங்களில் நடத்திருக்கின்றது. அதனால், கர்கரேயை கொலை செய்தது யார் என்பது முதலில்இருந்தே முழுமையானதொரு புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

என்னுடைய ஆய்வின்படி, கர்கரேயின் கழுத்தில் குண்டுகளைப் பாய்ச்சிய



சந்தேகத்திற்குரிய அந்த நபர், மும்பை துணை காவல்துறை ஆய்வாளர். இப்போது துணை காவல் துறை ஆணையர், (Assistant Police Inspector. Now Asst. commissioner of Police) சன்ஜேய் கோவில்கர் (Sanjay Gowilkar) டி.பி.மார்க் (D.B.Marg Police Station) காவல் நிலையத்தில் அன்று இவர்தான் இரவுப் பணியில் இருந்தார்.

இதை தொலைபேசி அழைப்புகளின் பதிவு ஒன்று தெளிவாகக் காட்டுகின்றது. அது அன்று ரங்கபவன் சந்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டிற்குப் பின் உடனேயே அந்த சந்தில்நுழைந்த ஒரே வாகனம் இவருடைய வாகனந்தான். இதே வாகனந்தான் அங்கிருந்து மெட்ரோ சவிக்கிற்கு சென்றது. அங்கிருந்த அப்பாவி மக்கள் மீது, குண்டுகளைப் பாய்ச்சியது, அந்த அப்பாவிகளில் இரண்டுபேர் பிணமாகினார்கள். இவற்றையெல்லாம் The Wireless Call Records என்ற கம்பியில்லா தொலைபேசி அழைப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்த வகையில் நான், ஒரு விரிவான அறிக்கையை மராட்டிய மாநில, தலைமை செயலாளருக்கு 2019 நவம்பர் 19ஆம் நாள் அனுப்பி இருக்கின்றேன். ஆனால், இதுவரைக்கும் எந்த விசாரணையும் நடக்கவில்லை.

**எஸ்.எம்.முஷ்ரிஃப்,**Rted. IGP

*பூனா. 15. ஜூலை 2021*

**எமது ஆய்வில்**

வீரமகன் எஸ்.எம்.முஷ்ரிஃப் IPS அவர்களின் இந்த ஆய்விலிருந்து இன்னொரு கேள்விகளுக்கும் விடை கிடைக்கின்றது. அது, மத்திய உளவுத்துறையும், அபிநவ் பாரத்தும், வீரமகன் ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்திட முயற்சி செய்தார்கள்.

**காரணம்,**

*1)* ஹேமந்த் கர்கரேதான் தீவிரவாதம், இந்துத்துவ தீவிரவாதிகளிடமிருந்துதான் வருகின்றது. பிரவாகமெடுத்து ஓடுகின்றது. காவித் தீவிரவாதம் என்பதைக் கண்டு பிடித்தார். இதனால் "Saffron Terror" காவித் தீவிரவாதம் என்ற சொல் புழக்கத்தில் வந்தது.

*2)* ஓர் இந்து ராஷ்டிராவை இந்தியாவில் உருவாக்கிட பயங்கர சதித்திட்டங்கள் நடந்திருக்கின்றன என்பதையும் கண்டுபிடித்தார். அந்தத் திட்டத்தில்,

- இந்துத்துவ தீவிரவாதிகள்,
- பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள்,
- இதர மதசார்பற்ற கட்சி எனச் சொல்லிக்கொள்ளும் கட்சிகள்,
- பல்வேறு தரப்பட்ட சமூக ஆர்வலர்கள்,
- உளவுத்துறையைச் சார்ந்தவர் இவர்களெல்லாம் உண்டு.

இதில் உளவுத்துறையைச் சார்ந்த கறுப்பாடுகள் சிலவற்றைக் கைது செய்ய வீரமகன் ஹேமந்த் கர்கரே முயற்சி செய்தார். சில முக்கிய உளவுத்துறையினரை கைது செய்ய வேண்டிய நிலை. அதற்குள் மும்பைத் தாக்குதலை நடத்தி ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்து விட்டார்கள்.


இதனால்தான் கர்கரேயின் கழுத்துப் பகுதியில் குண்டுகளைப் பாய்ச்சியவர் இதர இரண்டு காவல்துறை அதிகாரி மீதும் குண்டுகளைப் பாய்ச்சவில்லை. கர்கரேயைக் கொன்றாக வேண்டும் என்பதை ஓர் கட்டாயக் கடமை என எடுத்துக் கொண்டார்கள் உளவுத்துறையினர்.

ஆனாலும், குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த, சாலாஸ்கரை மருத்துவ மனைக்குள் மரணிக்க விட்டுவிட்டார்கள்.

**கவனத்திற்கு....**

இங்கே நாம் ஒன்றை கவனிக்க வேண்டும்! அது, எஸ்.எம்.முஷ்ரிஃப் தன்னுடைய கருத்துக்கு வலுசேர்க்கும் இதுபோன்ற ஆய்வுகளை மக்கள் மன்றத்தில் கொண்டு வந்திட வேண்டும் என விரைந்திட வில்லை. மாறாக, உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக் கின்றார். அவர்கள் கவனம் செலுத்தவில்லை. கண்டுகொள்ளவில்லை. புறக்கணிக் கின்றார்கள் என்பதைத் தெரிந்த பின்பே மக்கள் மன்றத்திற்குக்கொண்டு வருகின்றார்.






ஆனாலும், நீதிக்காக நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள், கணைத்துக்கூட காட்டிடவில்லை.

இந்த நூலைப் பற்றியும் கர்கரேயின் கொலையைப் பற்றியும்,பல புதிய தகவல்கள் கிடைத்துக்கொண்டேதான் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம், நமது "வைகறை வெளிச்சம்" மாத இதழில் வெளியிட்டு வருகின்றோம். வாசகர்கள் அவற்றை படிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் மீது வழக்கு**

ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், இந்த நூல், நூலாக வெளி வந்திட வேண்டும் என்பதற்காகத் தொகுக்கப்பட்ட நூல் அல்ல. மாறாக, உச்ச நீதிமன்றத்தில் வழக்காகத் தொடுக்கப்பட்ட ஆதாரங்களின் திரட்டு.

உச்ச நீதிமன்றம் முதலில்,மும்பை உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுங்கள். அங்கே, நீதி கிடைக்கவில்லை என்றால், உச்ச நீதிமன்றம் வாருங்கள் என அறிவுறுத்தியது. அதனால் வழக்கை மும்பை உயர்நீதிமன்றத்தில் தொடுத்தார்.

உச்ச நீதிமன்றத்தில் PIL : Public Interest Litigation - பொதுநல வழக்கு என தொடுக்கப்பட்டது. மும்பை உயர்நீதி மன்றத்தில், கிரிமினல் ரிட் என்ற அளவில் தொடுக்கப்பட்டது. விசாரணையின்போது அரசு வழக்கறிஞர் இப்படியொரு வாதத்தை முன்வைத்தார். "எஸ்.எம்.முஷ்ரிஃப் IPS என்ற முன்னாள் காவல்துறை அதிகாரி அவர்கள் ஒரு நூலை எழுதிவிட்டு, அதனை விற்பனை செய்வதற்கு, வழி இல்லாமல் வழக்குகளைத் தொடுக்கின்றார். இதன்வழி நூலின் விற்பனையை விரைவுபடுத்திட விழைகின்றார்".

இதனை செவியுற்ற மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி மார்லாஃப்பள்ளி அவர்கள் இந்த நூலை நான் படித்துவிட்டேன். அதில் நிரம்பவே ஆதாரங்கள் இருக்கின்றன. முடிந்தால் நீங்கள் இந்த நூலாசிரியர் மீது ஒரு வழக்கைத் தொடுங்கள். 'FIR' என்ற முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்யுங்கள். அந்த நெஞ்சுரம் உங்களுக்கு உண்டா?

இந்த நீதிமன்றத்தின் முன் ஒரு (IAS ஐ.ஏ.எஸ். அதிகாரி) இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சாட்சியம் சொன்னார். அதில் "கர்கரேயின் மீது குண்டுகளைப் பாய்ச்சிய வர்கள், "மராட்டி" மொழியில்தான் பேசினார்கள். ஆகவே அவர்கள் மராட்டி யர்கள்கள்தாம்" என்றார். அந்த ஆட்சிப் பணி அதிகாரி.

மராட்டிய மாநில சுற்றுலாத் துறையில்

பணியாற்றிக் கொண்டிருப்பவர்தாம். Maharatshra Tourism Development Corporation-ஐ சார்ந்தவர்கள்.

இதை நீதிபதி அரசு வழக்கறிஞரிடம் பொட்டில் அறைந்தார்போல் சொன்னார்கள். அரசு வழக்கறிஞர் அடங்கிப்போய் அமைதியாக அமர்ந்து விட்டார்கள். அதிகார வட்டத்தின் இலக்கியச் சூதாட்டம் ஆங்கிலத்தில் இந்த நூல் 5 பதிப்புகளைக் கடந்து பல ஆயிரம் பிரதிகள், மக்களைச் சென்று அடைந்துவிட்டன.

அதேபோல் தமிழிலும், இதர மொழிகளிலும் பல பதிப்புகள் (தமிழில் 30 ஆயிரம் பிரதிகள் மக்களைச் சென்றடைத்து விட்டன) பல ஆயிரம் பிரதிகள் மக்களைச் சென்றடைந்துவிட்டன. இதனால், அதிர்ந்து போன உளவுத்துறையினர், தங்கள் பங்கில் சில பல இலக்கியங்களை வெளியே கொண்டு வந்தார்கள். இந்த இலக்கியங்களை வழிமறிக்கவும், மக்களைக் குழப்பவும், ஓர் இலக்கியத்தைப் படைத்துள்ளார்கள் அதிகார வர்க்கத்தினர்.


அந்த இலக்கியங்களுள் ஒன்று, கர்கரேயின் மகளைக் கொண்டே எழுதியது. அதன் பெயர் Hemant Karkare, Memories of a Daughter- ஹேமந்த் கர்கரே மகளின் நினைவுகள். Jui Karkare Navare கர்கரே நவாரீம், இதில் அவர் பொத்தாம் பொதுவாக மொத்தப் பழியையும், புல்லட் புரூஃப் ஜாக்கெட் என்ற குண்டு துளைக்காத கவசத்தின் மேல் போடுகின்றார்.

நூல் மிகவும் மலிவான விலையில் விற்பனை போகிறதால், சந்திரப்பூர் நக்ஸலைட்களால் சண்டையிட்டு கொலை செய்திட முடியாத மாவீரன் ஹேமந்த் கர்கரே, இந்துத்துவ தீவிரவாதிகளும், உளவுத்துறையும் கொலை செய்துவிட்டார்களே என எண்ணி மனம் பதறுகின்றது.

**- MGM**


# கர்கரேயை கொலை செய்தது யார்?

விரிவாக்கப்பட்ட 5ஆம் பதிப்பு




- அரசின் தீவிரவாதம் - இந்தியாவின் வரலாறு என்றாகிவிட்டது. இந்தியாவில் முஸ்லிம்களை எதிரிகளாகக்காட்டி தீவிரவாதத்தைச் செய்தவர்கள் எல்லா அதிகாரத்தையும் அபகரித்து விட்டார்கள். அவர்கள் குண்டுகளை வைத்து மனிதர்களை பிணங்களாக குவித்துவிட்டு, அப்பாவி முஸ்லிம்கள் மீது பழியைப் போடும்போதெல்லாம் அவற்றை பரபரப்புகளாக ஆக்கி, பட்டித் தொட்டிகளெல்லாம் பரவிடச் செய்தது, நம்மை அப்பிப் பிடித்திருக்கும் பொது ஊடகங்கள்,

- நாட்டின் உண்மையான தீவரவாதிகள் முஸ்லிம்களல்ல, இந்துத்துவ பரிவாரங்கள்தாம் என்பதை முதன்முதலில் அதிகாரப்பூர்வமாக கண்டுபிடித்து நிரூபித்தவர் ஹேமந்த் கர்கரே! இவர் மராட்டிய மாநிலத்தின், தீவரவாதத் தடுப்புப் படையின் தலைவர் முழு உண்மையையும் கண்டுபிடித்ததால் அவரை அதே காவிகளின் பரிவாரம் கொலை செய்தது. அதையே 26/11 என அடையாளப்படுத்துகின்றார்கள்.

- அவரது கொலைக்கு நீதிதேடி புறப்பட்டார் எஸ்.எம்.முஷ்ரிஃப். இவர் முன்னாள் மராட்டிய மாநிலத்தின் காவல்துறை அதிகாரி, இன்ஸ்பெக்டர் ஜெனரல். அதன் சுருக்கமே இந்த நூல். இந்தப் பதிப்பில் இன்னும் பல அரிய, அதிர்ச்சியான உண்மைகளைக் கண்டெடுத்துத் தந்திருக்கின்றார். அதனால் இது விரிவாக்கப்பட்ட பதிப்பு.

- தமிழில் மு. குலாம் முஹம்மத், M.A., in JMC. ஆசிரியர் - வைகறை வெளிச்சம்

வேர்கள் வெளியீட்டகம்

**விலை – ரூ.450/– போன் : 7401213394 / 7358278146 / 8148129887**






# ஆடிட்டர் அப்துல்லாஹ் அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்

## இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்

**“நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இவனுக்காகவும் அதாவது தன் மகனுக்காகவும் அந்த பணம் வசூலிக்கப்பட்டிருக்கும், இப்பொழுது அடுத்த தலைமுறைக்கு நாம் அப்படி ஒரு இழிநிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தோம், ஒடுக்கப்பட்டிருந்தோம், தீண்டத்தகாதவர்களிலிருந்தோம் என்பது கூட தெரியவில்லை...!”**

தாவா களத்தில் நம்முடைய தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் - உடன் நீண்ட காலம் பயணித்துவந்த நா. கோதண்டபாணி என்கிற அப்துல்லாஹ் அவர்கள் வயது முதிர்ச்சியின் காரணமாக உடலில் ஏற்பட்ட பிரச்சனைகளால் மௌத்தாகி விட்டார்கள். அவர் அரசு பணியில் இருந்தவர். இயல்பாகவே வசதியானவர். 8 முதல் 10 ஏக்கர் வரை நிலம் சொந்தமாக வைத்திருந்தவர். இயக்குனர் பதவியை தமிழ்நாடு தணிக்கை குழுவில் வகித்தவர்.

அவர் எங்களுடைய தாவாவின் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர். அப்பொழுது நாங்கள் நடத்திக் கொண்டிருந்த அறிவகம் என்ற இஸ்லாமிய கலாச்சாலையில் வந்து பாடம் படிக்க வருகிறார். ஏனைய மாணவர்களோடு மாணவராக! தான் ஒரு பெரிய பட்டதாரி, ஒரு அரசு அலுவலகத்தில் அலுவலராக, இணை இயக்குனராக இருந்து வருகிறோம் என்ற கௌரவம் எல்லாம் இல்லாமல் இருந்தார். சில பிரச்சினைகளை நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது வந்து சேர்ந்து நல்ல

ஆலோசனைகளை எல்லாம் கூறுவார். அதிலிருந்து அவர் எங்களோடு நெருக்கமாகிவிட்டார்.

அவரை சற்று உன்னிப்பாக கவனித்தோம் மிக ஆழமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், அதில் மிகுந்த பிடிப்போடும் இருந்தார். அப்போது அவருக்கு இரண்டு வகையான பிரச்சனைகள். ஒன்று குடும்பத்தில் உள்ளவர்கள் சொத்துக்கள் அனைத்தும் பறிபோய்விடும் அதனால் இவரை நாம் இஸ்லாத்தின் பக்கம் விடக்கூடாது, இரண்டாவது இவர் இஸ்லாத்திற்கு சென்றதிலிருந்து நல்ல முஸ்லிமாக வாழத் தொடங்கி விட்டார். எந்த அளவிற்கு என்றால் மயிலாடுதுறையில் ஸ்ரீனிவாசபுரத்தில் இருக்கக் கூடிய ஜமாத்தில் உறுப்பினராக ஆனார். இப்பொழுது அவரை அங்கு தான் அடக்கம் செய்துள்ளார்கள்.

அவருடைய குடும்பத்திலிருந்து பயங்கரமான எதிர்ப்பு, எதற்கென்றால் சொத்திற்காக. இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில் பணத்தைக் கொடுத்து மதம் மாற்றுகின்றார்கள், பணத்தைக் கொடுத்து மதம் மாற்றுகின்றார்கள் என்பதைத்தான் பாடுவார்கள் சங்கிகளும், இஸ்லாத்திற்கு வருவதை எதிர்ப்பவர்களும். அதேபோல் கிறிஸ்தவத்தை ஏற்று கொள்பவர்களையும் இப்படித்தான் கூறுவார்கள். ஆனால் இவர்கள் எல்லாம் சமத்துவத்தை நாடி வருகின்றவர்கள் என்பதே நிதர்சனமான உண்மை. ஆனால் ஆடிட்டர் அப்துல்லாஹ், அவரே ஜகாத் தருவார், அவரே குர்பானி கொடுப்பார், அவரே அனைத்திற்கும் தேவையான பணத்தையும் கொடுப்பார்.

அவரிடத்தில் நிறைய சொத்து இருக்கிறது ஆனால் கண்ணியமில்லை, மனிதனாக மதிக்கப்படுவதில்லை, அவர் ஒரு அரசு அலுவலராக இருந்தபோது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்பதனால் அரசு தரப்பில் இருந்து பயங்கரமான கெடுபிடிகள் கொடுத்தார்கள். ஒருநாள் இவர் ஓர் அறிக்கை விடுகிறார். "நான் அப்துல்லாஹ் மேலும் நான் ஒரு முஸ்லிம் என." அனைத்து பத்திரிகைகளிலும் இது வந்தது. ஏனெனில் அவர்களுடைய துறையில் இருந்து நீ முஸ்லிமா? முஸ்லிம் இல்லையா?, இப்பொழுது கோதண்டபாணியாக இருந்துகொள் பிறகு அப்துல்லாஹ்வாக மாறிக் கொள்ளலாம் என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால் இவர் எதற்கும் ஒத்துக் கொள்ளவில்லை. கோதண்டபாணி என்ற பெயரில் பணியில் சேர்ந்து இருந்தாலும் அப்துல்லாஹ் என்ற பெயரிலேயே ஓய்வூதியம் வாங்க முடியும் என காட்டியவர். அவருடைய மனைவியும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார், அவருடைய மகனும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அவருடைய மனைவிக்கு ஓய்வூதியத் தொகை செல்வதற்கு பெயரை மாற்றிக் கொடுத்தால் அவ்வளவு எளிதில் கொடுப்பதில்லை. ஆனால் அதையும் வாங்கி கொடுத்தவர்.

ஆங்கிலத்தில் மிகவும் பயங்கரமாக கடித பறிமாற்றம் செய்பவர். அதை நான் வாங்கி படித்துவிட்டு இவ்வளவு சூடாக எழுதிறீர்களே என்று வினவினால் அப்பொழுது தான் அவர்களுக்கு உரைக்கிறது என்பார்.

மனைவி இறந்து போகிறார் இரண்டாவது ஒரு திருமணமும் செய்கிறார் அது ஒரு முஸ்லிம் சகோதரி. அந்த சகோதரியின் பெயரில் ஓய்வூதியத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்கிறார். அதற்கு எந்த சட்டங்களும் இல்லை நீங்கள் மதம் மாறிவிட்டீர்கள் என்கிறார்கள். முடியாது, கொடுத்து தான் ஆக வேண்டும் என எழுதி வாங்கியவர் அவர். இதே மாதிரியான பிரச்சினைகளை அதாவது பெயர் மாற்றுதல், ஓய்வூதியம் சார்ந்த பிரச்சனைகளை எதிர் கொள்பவர்களுக்கு இவருடைய கரஸ்பாண்டன்ஸ் மிகப்பெரிய அளவில் பயன் தரும்.

அவர் தன்னுடைய வரலாற்றை ஒரு புத்தகமாக எழுதி இருக்கிறார் "சிந்திப்பீர் செயல்படுவீர்!" சாதாரணமாக கஷ்டப் பட்டோம், அடி வாங்கினோம், இஸ்லாத்தை ஏற்றோம் இந்த அந்த கஷ்டங்களில் இருந்தெல்லாம் வெளிவந்தோம், இப்பொழுது வசதியாக இருக்கிறோம் அப்படியெல்லாம் தான் புத்தகங்கள் இப்பொழுது செல்கின்றன . நன்றாக இருக்கிறோமா இல்லையா, வசதியாக இருக்கிறோமோ இல்லையோ கண்ணியமாக நடத்தப்படுகிறோம், அந்த பக்கம் செல்லாதே இந்த பக்கம் செல்லாதே, முன்னே நடக்காதே பின்னே நடக்காதே சொன்னவர்கள் எல்லாம்

பள்ளிவாசலில் நெருங்கி நில்லுங்கள் இடைவெளி இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவிற்கு உயர்ந்தோம் என்றெல்லாம் பேசுவார்கள். இவருடைய புத்தகத்தில் வித்தியாசமான வரலாற்றை கூறுவார்

ஒரு முறை அவருடைய மகன் சிறு வயதில் அவரிடம் வந்து இப்படி ஒரு கேள்வியை கேட்டானாம். “அப்பா தலீத் என்றால் என்ன?” பள்ளியில் தலீத் மக்களுக்கான நிதிவசூல் சம்மந்தமாக ஒவ்வொரு மாணவரும் ஒரு குறிப்பிட்ட தொகையை வீட்டில் கேட்டு வாங்கி வரவேண்டும் என்று கூறியுள்ளார்கள். அதனால் அவரது மகன் இந்த கேள்வியை அப்துல்லாஹ்விடம் கேட்டுள்ளான். இதைக் கண்ட அவர், தன்னுடைய கண் கலங்கியது எனக் கூறியுள்ளார். நானும் என் மனைவியும் கதவை பூட்டிக் கொண்டு அழலாமா என்று நினைத்தோம். நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இவனுக்காகவும் அதாவது தன் மகனுக்காகவும் அந்த பணம் வசூலிக்கப்பட்டிருக்கும், இப்பொழுது அடுத்த தலைமுறைக்கு நாம் அப்படி ஒரு இழிநிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தோம், ஒடுக்கப்பட்டிருந்தோம், தீண்டத்தகாதவர் களிலிருந்தோம் என்பது கூட தெரியவில்லை என்று கூறி அந்த ரூபாயை கொடுத்து அனுப்பினேன் என்று கூறினார்.

இது சாதாரணமாக வழக்கமாக ஓடும் ஓட்டங்களில் இருந்து வித்தியாசமானது. அதேபோல் அவருக்கு ஒரு தனிப்பட்ட நூலகம் இருந்தது. அதில் எக்கச்சக்கமான புத்தகங்கள். அவர் ஓர் தீவிரமான வாசிப்பாளர். அந்த புத்தகங்களில் சிலவற்றை தேர்வு செய்து நான் வாங்கி படித்துள்ளேன். அம்பேத்கரை பற்றி ஒழுங்காக படித்தவர். ஏதாவது எனக்கு சந்தேகம் ஏற்பட்டால் அவரைத்தான் கேட்பேன்.

அப்துல்லாஹ் அவர்களே அம்பேத்கரை பற்றி இப்படி எங்கு வருகின்றது என்று கேட்டால் பத்து நிமிடத்தில் எடுத்து அந்த பகுதியை படித்து காண்பித்து விடுவார். சில பகுதிகளை நகலாகவும் எடுத்து கொடுத்து விடுவார். கடைசி காலத்தில் அவர் என்ன செய்தார் என்றால், “இந்த நூல்களை நான் உங்களுக்கு கொடுத்து விடுகிறேன் என்று முடிவு செய்துவிட்டேன் ஏனென்றால் உங்களிடம் இருந்தால் இது உங்களுக்கு பயன்படும் என்று கூறி எக்கச்சக்கமான புத்தகங்களை தந்தார்.” அத்தனையும் அருமையான தொகுப்புகள், நான் அதில் நிறைய பலனடைந்திருக்கிறேன்.

இஸ்லாத்திற்கு வந்ததோடு மட்டுமல்லாமல் தாருல் இஸ்லாமுடன் தொடர்ந்து 16 ஆண்டுகள், உடல் பலவீனமடைந்து அசைய முடியாது என்ற நிலைவரை தாவா களத்தில் இருந்துள்ளார். அந்த மக்களுக்கு சேவை செய்வார். அவர்களுக்கு மனு எழுத தெரியவில்லை என்றால் மனு எழுதிக் கொடுப்பார். எல்லாம் சொல்லிவிட்டு இப்படி கூறுவார் எதற்கு இப்படி கிடந்து கஷ்டப்படுகிறீர்கள் இஸ்லாத்திற்கு வந்து விடுங்கள் எனக் கூறுவார். அவருடைய வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக இருந்தது.

அவருடைய அடக்கத்தில் அந்த ஜமாத்தை சேர்ந்தவர்கள், நீங்கள் அவர் அதில் இருந்தார், இதில் இருந்தார் என்றெல்லாம் கூறாதீர்கள் அவர் எங்கள் ஜமாத்தை சேர்ந்தவர் அவர் எங்களுடைய முன்னாள் கமிட்டி உறுப்பினர். அவர் உடல் நலம் சரியில்லாததால் தான் இப்பொழுது கமிட்டி உறுப்பினராக இல்லை, ஏனென்றால் கடைசி காலங்களில் அவரால் பேசவும் இயலவில்லை.

அவரது ஜனாஸாவை மிகவும் கண்ணியமாக நின்று நல்லடக்கம் செய்திருக்கிறார்கள். அதில் மிகவும் மகிழ்ச்சி என்னவென்று சொன்னால் அவருடைய ஜனாஸாவில் எங்கள் தாவா களத்தில் இருக்கக்கூடிய அனைவரும் கலந்து கொண்டார்கள் என்று தம்பி ஒருவர் கூறியபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் வெயிலில் நான்கு நாட்கள் மிகவும் அலைந்து விட்டு, அதற்குப் பிறகு ஒரு இடத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது அந்த சமயத்தில் செய்தி வந்தது, அங்கு சாலையும் சரியில்லை, அவ்வளவு தூரம் பயணிக்கவும் முடியாது, அசர் நேரத்தில் அடக்கம் அதனால் நேரமும் இல்லை அதனால் செல்ல இயலவில்லை.

அவருடைய நல்வாழ்விற்கு நாம் எல்லோரும் துஆ செய்வோம். இப்படிப்பட்ட பலர் இஸ்லாத்தை வளர்ப்பதற்கு எந்த முகவரியும் இல்லாமல் காரணமாக இருந்திருக்கிறார்கள். மற்றவர்களைப் போல






கொஞ்சம் பிரபல்யமானவுடன் ஏதாவது ஒன்றை ஆரம்பித்து பணம் வசூல் என்றெல்லாம் செல்லாமல், கொடுத்துக் கொண்டே இருந்தவர். அதே மாதிரி இன்னொருவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அது நமது நீதிபதி அவர்கள்.

76 ஆண்டு காலமாக தன்னுடைய வாழ்க்கையை பல்வேறு கொள்கைகளில் செலவழித்துவிட்டு கடந்த 20, 25 வருடங்களாக மக்களை, தலித் மக்களை விடுதலை செய்வதற்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற சிக்கல் நாயக்கன் பேட்டையைச் சேர்ந்த ஜக்கரியா பாய் அவர்கள். இவர்களெல்லாம் விளம்பரங்களை தேடுவதில்லை. அல்லாஹ் அவர்களுக்கு நிரம்பக் கூலிகளை வழங்க வேண்டும்! நீங்கள் தொடர்ந்து துஆ செய்யுங்கள், எங்கள் சார்பில் நாங்களும் துஆ செய்கிறோம்!

**-MGM**


**ஜாதியை ஒழித்துக்காட்டிய மாவீரர்களின் நூல்கள்!**




3 நூல்கள்

₹170/-

Ph:7401213394

Vergal Pathippagam

# அயோத்யா மஸ்ஜித்–ன் தற்போதைய நிலை!



## பாப்ரி மஸ்ஜித் வழக்கை வாதாடிய வழக்கறிஞர்

## ஜாஃப்ரியாப் ஜிலானியை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்

## இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்

அன்பார்ந்த சகோதரர்களே! பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட இடத்திற்கு பக்கத்தில் ஒரு ஐந்து ஏக்கர் நிலத்தை நமக்குத் தந்து, முஸ்லிம்களுக்குத் தந்து அதிலே பள்ளிவாசல் கட்டிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இப்படி ஒரு சமரசமாகத்தான் பாபரி மஸ்ஜித் தீர்ப்பு இருந்ததே தவிர, உண்மையிலேயே அது நீதியின் அடிப்படையில் வந்த தீர்ப்பு அல்ல. அந்த நேரத்தில் தலைமை நீதிபதியாக (Chief justice) இருந்தவர் மீது ஒரு பாலியல் வழக்கு, அவர் பதறிப்போனார். அந்த பாலியல் வழக்கை விசாரிக்க வேண்டும் என்று சொன்ன போது, அவர், தானே அந்த விசாரணையின் தலைவராக இருப்பேன் என்று கூறினார். உலகில் எங்கும் இல்லாத ஓர் நீதி பரிபாலனம்!

அதன் பிறகு பாபரி மஸ்ஜித் அவர்களுக்கு சொந்தம், அதாவது இந்து நாளிதழ் அப்பொழுதும் எழுதியது இப்பொழுதும் எழுதிக் கொண்டிருக்கிறது. பாபரி மஸ்ஜித் தீர்ப்பில் சூழல்கள் அனைத்தும் முஸ்லிம்களுக்கு சாதகமாகவும், தீர்ப்பு மட்டும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் இருந்தது. அப்பொழுது அவர் ஒரு அநியாயமான தீர்ப்பை கொடுத்து அவர் தன்னை காப்பாற்றிக் கொண்டார் என்பதை மாவோ மித்ரா என்ற திரினாமுல் காங்கிரஸ் எம்.பி நாடாளுமன்றத்திலே பேசினார்.



அதன் பிறகு அவர் மீது பாலியல் வழக்கு போட்ட பெண்ணை பணியிடை நீக்கம் செய்தார்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் வேலைகள் அனைத்தையும் பிடுங்குகிறார்கள். அவர்களை மேலும் கஷ்டபடுத்துகிறார்கள். பிறகு அந்த பெண்ணிற்கு மீண்டும் அனைத்து வேலைகளையும் திரும்ப கொடுத்து விட்டார்கள். அந்த சகோதரி என்ன சொன்னார் என்றால், “எனக்கு பாலியல் அநியாயம் நடந்தது உண்மை. நீங்கள் தரக்கூடிய எந்த சலுகையும் தேவையில்லை” என்று கூறினார். எனவே அங்கு என்ன நடந்திருக்கிறது?

பச்சையான கொச்சையான ஒரு மிரட்டல் நடந்திருக்கிறது என்பதுதான் உண்மை. இதிலே காலம் முழுவதும் போராடிய ஒரு போராளி, சட்ட ரீதியிலாக போராடிய ஒரு போராளி ஜாஃபர் யாப் ஜீலானி. எல்லோரும் பாபரி மஸ்ஜிதை வைத்து டிசம்பர் 6ஐ கபளீகரப்படுத்திக் கொண்டிருக்கும்போது, நான் நிறுவி நடத்திக் கொண்டிருந்த மனித நீதி பாசறையின் சார்பில் இன்னும் சொல்லப்போனால் அதனுடைய துவக்க விழாவில் அந்த வழக்கை முழு மூச்சாய் நின்று நடத்தக்கூடிய ஜாஃபர் யாப் ஜீலானி அவர்களை அழைத்து, நாம் அவரிடம் என்ன நடந்து கொண்டிருக்கிறது, இந்த கூப்பாடு இவையெல்லாம் நமக்கு உபயோகப்படுமா? அல்லது நீதிமன்றத்தைத் தான் நம்பி நிற்க வேண்டுமா என்று உரையாற்றிட ஓர் ஏற்பாடு செய்தேன்.

அவரும் நமது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பெரியார் திடலில் அவர் உரையை நிகழ்த்தினார். அந்த நேரத்தில் அவருக்கு நாங்கள் 25,000 ரூபாயை நன்கொடையாக கொடுத்தோம் பாபர் மஸ்ஜித் வழக்கை நடத்துவதற்கு. அதிலே அவர் நெஞ்சம் நெகிழச் சொன்னார், “பாபர் மஸ்ஜித் வழக்கில் முதல் முதலாக வந்த நிதி உங்களிடமிருந்து தான் வந்திருக்கிறது. இது ஒரு பெரிய தொகையல்ல, இருந்தாலும் சில வேலைகளைச் செய்வதற்கு இது உதவி செய்யும்” என்று கூறினார்.

பாபரி மஸ்ஜித் வழக்கை அவர் எப்படி நடத்தினார் என்று சொன்னால், எல்லோரும் எப்பொழுது சிலை வைக்கப்பட்டதோ அப்பொழுது அது கோவிலாகிவிட்டது என்று விட்டுக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென்று அலகாபாத் உயர்நீதிமன்றம் பூட்டை உடைத்து, பூஜைக்கு அனுமதி கொடுங்கள் என்று சொன்னபோது அவர் வழக்கிற்குள்ளாக வருகிறார். அந்த வழக்கில் அவர் ஒரு வாய்தா கூட விடாமல் செல்கிறார். அவருக்கு யாரும் உதவி செய்யவில்லை.

அப்பொழுது அவர் சொல்கிறார், “நான் நீதிமன்றத்திற்கு உள்ளாக செல்லும்போது, RSS மற்றும் பஜ்ரங்தள்-ஐ சார்ந்தவர்களும் இரண்டு புறமும் நின்று கொண்டு நெற்றியில் பேண்ட் (Band) கட்டிக்கொண்டு மிரட்டும் தொனியில் நிற்பார்கள். நான் அதைப் பற்றி கவலை கொள்வதில்லை ஏனென்றால் நான் என் உயிரைப் பற்றி கவலைப்படவில்லை. நீதியை பற்றி கவலைப்படுகிறேன்” என்று கூறினார்.

அதன் பிறகு இது உயர்நீதிமன்றம் உச்சநீதிமன்றம் என்றெல்லாம் சென்றது. நான் கொடுத்த 25 ஆயிரம் ரூபாய்க்கு பிறகு பலரும் நன்கொடை அளித்தார்கள். இங்கே உள்ள மஸ்ஜிதுகளின் கமிட்டி ஒரு தொகையை அளித்தது. நாமும் இரண்டாவதாக ஒரு பெரிய தொகையை அளித்தோம். இன்னும் சில அமைப்புகளும் சில தொகையை கொடுத்தன.

இப்பொழுது என்னவென்றால் நாம் தீர்ப்பை எதிர்பார்த்து தான் இருக்கிறோம். நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோம். நம்மிடம் எல்லா ஆவணங்களும் இருக்கின்றன அதனை ஜாபர் யாப் ஜீலானி அவர்கள் உறுதி செய்தார். “நிச்சயமாக நாம்

வெற்றிபெறுவோம் நீங்கள் வீணாக பதட்டப்பட வேண்டாம்" என்றார்.

அப்பொழுது ஒரு கட்டத்தில் நான் அவரிடம் கேட்டேன், நாம் இதற்காக ஒரு மக்கள் இயக்கத்தை கட்டவேண்டுமா என்று கேட்டேன். அவர் சொன்னார் தேவையில்லை, நாம் நிச்சயமாக வெல்லுவோம் இல்லையேல் அதற்கு ஒரு மக்கள் இயக்கம் தேவைப்பட்டால் உத்திரபிரதேசத்தில் நாங்கள் கட்டிக் கொள்வோம் என்று சொன்னார். அதுதான் பகுத்தறிவு ரீதியான ஒரு நிலை. ஏனெனில் நாம் இங்கு கிடந்து கத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை. அது எங்கிருந்து வரவேண்டும் இந்தியாவிலே முஸ்லிம்கள் அதிகம் வாழக்கூடிய, பாரம்பரியமிக்க, பல நூறு ஆண்டுகள் உத்தரப்பிரதேசத்தை ஆண்ட முஸ்லிம்களிடமிருந்து வரவேண்டும். அவர்கள் அந்த முயற்சியை எடுத்தார்களா என்றால், எடுத்தார்கள். அவர்களில் 134 பேரை சிறையில் அடைத்தார்கள் இதனை ஜாஃபர் யாப் ஜீலானி அவர்களை நேரில் லக்னோவில் சந்திக்கும் போது கூறினார்.

தொடக்க காலத்தில் அவர்களுக்காக வாதாடிய ஒரு வழக்கறிஞரை சுட்டார்கள் அவருடைய பெயர் உமர். கை இழந்த நிலையில் தான் அவர் இருந்தார். அவரை நான் சென்று சந்தித்தேன். "நாம் அவர்களை எப்படியும் விடுவித்து விடுவோம். இங்கு என்ன நடக்கிறது என்றால் இங்கு ஒரு அரசியல் பித்தலாட்டம் நடக்கின்றது. ஒவ்வொரு அரசும் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த பாபரி மஸ்ஜித் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களை விட்டுவிடுவோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் வந்த பிறகு மறந்து விடுகிறார்கள்." என்று சொன்னார். அதில் காங்கிரஸ் உண்டு. அகிலேஷ் யாதவ் உடைய அரசு உண்டு. PSP என்று சொல்லக்கூடிய மாயாவதியின் உடைய அரசு உண்டு. அனைவரும் வாக்குறுதி கொடுப்பது பிறகு நிறைவேற்றுவதில்லை, அந்த வழக்கையும் இவர் எடுத்து நடத்தினார்.


அப்பொழுது நான் 2012ல் ஒரு தாவா சம்பந்தமான புத்தகத்தை வெளியிடுவதற்காக லக்னோவ் சென்றிருந்தபோது, நான் தரைமட்ட வேலைகளை பார்த்துக் கொண்டிருக்கும் போது அவர் ஒரு சாதாரண வழக்கறிஞர். புத்தகம் வெளியீட்டு விழா வைக்கும் நேரத்தில் அவர் Additional Advocate General. சிகப்பு விளக்கு வைத்த காரில் இருப்பார். அவருடைய பெருந்தன்மை என்னவென்றால் முன்பெல்லாம் நான் பார்க்க செல்லும் பொழுது நீ இங்கு வா, அங்கு வா என்று கூறுவார் ஆனால் Additional Advocate General ஆக ஆன பிறகு அவர் கூறினார், "நீ என்னை பார்க்க இயலாது, அதனால் என் கார் வரும் அதில் வா" என்று கூறினார்.

அந்த நிலையிலே நான் அவரிடத்தில் பாபர் மஸ்ஜித் இருந்த இடத்தை சென்று பார்க்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் சொன்னார், "இப்பொழுது அதன் தற்போதைய நிலையை கண்காணிப்பதற்கு ஒரு கமிட்டி உருவாக்கியுள்ளார்கள். அதில் நானும் ஒரு உறுப்பினர். அந்த கமிட்டி செல்லும் பொழுது நீ என்னுடன் வா. தனியாக சென்று விடாதே இந்த காட்டுமிராண்டி அரசு என்ன செய்யும் என்று சொல்ல முடியாது" என்று கூறினார்.

அதன் பிறகு நமது தாவாவில் அவரை பயன்படுத்தினோம். ஆனால் அவர் அங்கு இஸ்லாமிய கல்லூரி ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார். அந்த இஸ்லாமிய கல்லூரியில் ஏப்ரல் 14 தோறும் தாவா நிகழ்ச்சியை நடத்தி நாம் வெளியிட்ட இலக்கியங்களை கொடுப்பார். அதில் சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார்கள். அவர் ஒரு இஸ்லாமிய இயக்க மனிதராகவே இருந்தார்.

மிக எளிதாக எளிமையாக அந்த வழக்கை வாதாடினார். "அன்று நீங்கள் யாருமே எட்டிப் பார்க்காத நேரத்தில் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தார். இப்பொழுது OIC - யே எனக்கு பணம் தருகிறேன் என்று கூறுகிறது. பணம் இங்கு பெரிதல்ல வழக்கை நாம் எப்படி நடத்துகிறோம் என்பதுதான்." இன்னொரு முறை நான் கேட்கும் போது கூறினார்.

நான் எப்பொழுது அவரை கைபேசியில் தொடர்பு கொண்டு அழைத்தாலும் வருகிறேன் என்று கூறிவிடுவார். தொடக்க காலத்தில் நான் All India Muslim Personal Law Board கூட்டத்திற்காக சென்னைக்கு வந்திருந்தேன், அங்கு வந்து நான் பாபரி மஸ்ஜிதை பற்றி 20 நிமிடம் பேசவா என்று கேட்டேன். தமிழ்நாட்டில் உள்ளவர்களும்




வெளி மாநிலங்களில் உள்ளவர்களும் பேசவே கூடாது பிரச்சனையாகிவிடும் என்று சொன்னார்கள். ஆனால் நீங்கள் பாபர் மஸ்ஜிதுக்கு பணம் தருவதற்காக ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தீர்கள். உங்களது தமிழக தலைவர்களில் ஒருவர் என்னை லக்னோவில் சந்தித்து நீங்கள் அந்த நிகழ்ச்சிக்கு வரக்கூடாது என்று இல்லாத பொல்லாததை எல்லாம் சொல்லி இருக்கிறார். அவர் நம்பினாரா நம்ப வில்லையா என்பது இரண்டாவது.

அதன் பிறகு அவர் இவர்கள் சொன்னவற்றையெல்லாம் கேட்காமல் விமான நிலையத்திற்கு வந்து விட்டார். விமான நிலையத்திற்கே சென்று சொல்லி உள்ளார்கள் நீங்கள் போக வேண்டாம் என்று. நான் அவரை அழைத்துச் செல்லும்போது கூறினார், "உங்களுக்கு எதிராக இங்கு இயக்கங்கள் நிறைய இருக்கிறதா" என்று கேட்டார். நான் கூறினேன் "எங்களுக்கு எதிராக இருக்கிறது போல் தெரியவில்லை ஆனால் பின்வாசல் வழியாக எதிர்ப்பை தெரிவிப்பவர்கள் இருக்கலாம்" என்று சொன்னேன். அவர் அந்த தலைவரின் பெயரை சொல்லி தான் சொன்னார், அவர் இரண்டு முறை என்னை வழிமறித்தார் என்று. நான் கேட்டேன் எங்களை முன்பின் தெரியாமல் அப்படி இருந்தும் நீங்கள் எப்படி வந்தீர்கள்? என்று. நான்தான் உங்களிடம் கைபேசியில் பலமுறை பேசியிருக்கிறேனே என்றார். All India Muslim Personal Law Board இல் பாபரி மஸ்ஜித் பற்றி பேசக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது ஒருவர் நீங்கள் வாருங்கள், அதைப் பற்றின முழுமையான தகவல்களை எங்கள் மக்களுக்கு தாருங்கள், இவர்கள் குழப்பத்தில் நிற்கிறார்கள், இங்கே உள்ள சாலைகளில் எல்லாம் பேனர்களை வைத்து கபளீகரப்படுத்துகிறார்கள், உங்களுக்கு பணமும் தருகிறேன் என்று கூப்பிடுகிறீர்கள் என்றால் நீங்கள் ஒரு வித்தியாசமான அமைப்பு என்பதை புரிந்து கொண்டேன். பாபரி மஸ்ஜிதை பற்றி பேசுவதற்கு இவர்கள் ஏன் அவ்வளவு பயப்பட வேண்டும் ஆகவே இதில் என்ன வந்தாலும் செல்வது என்று நான் வந்தேன் என்று சொன்னார்.

லக்னோவில் 2012ம் ஆண்டு "சாதி ஒழிந்தது" இந்தி மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்ட போது அதில் ஆர்வமுடன் கலந்து கொண்டார். அந்த விழாவில் அவர் பேசும் போது,

"தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விடுதலை அடைந்திடும் போது நாம் தாழ்த்தப்பட்ட மக்களின் அந்தஸ்தை நமக்கு வேண்டும் எனக் கேட்டது சரியல்ல என்று கூறினார்கள் அத்தோடு பாபரி மஸ்ஜித் வழக்கிற்கான முதல் நிதி நமக்கு தமிழகத்தில் சகோதரர் குலாம் முஹம்மத் அவர்கள் நடத்திக் கொண்டிருந்த டிரஸ்டில் இருந்து தான் கிடைத்தது என்பதை நாம் மறத்திட முடியாது. அந்த நிகழ்ச்சிக்காக




நான் சென்னை சென்றிருந்தேன் என பழைய நினைவுகளை மொத்தமாக நினைவு கூர்ந்தார்கள்."

நாம் நிச்சயமாக ஜெயிப்போம் என்று இறுதிவரை நம்பினார். உச்சநீதிமன்றம் நம்மை காலை வாராது என்று நம்பினார். ஆனால் காலை வாரிவிட்டது. அதற்கு பகரமாக ஒரு ஐந்து ஏக்கர் நிலத்தை கொடுத்தார்கள். அந்த நிலத்தில் அயோத்தியா மஸ்ஜித் என்று மஸ்ஜிதை கட்டுவதற்கு முஸ்லிம்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் அல்லது ஒரு டிரஸ்ட்-ஐ ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதன் பெயர் Indo Islamic Culture Foundation.

அந்த பள்ளிவாசலை கட்டி முடித்து, அதன் பிறகு நாம் பாபர் மஸ்ஜிதை எப்படி இழந்தோம்? எப்படி நீதிமன்றங்கள் நம்மை ஒவ்வொரு முறையும் நம்மை காலை வாரியது? என்பதை அட்வொகேட் சுவாங் சொன்னதை நான் ஏற்கனவே வைகறை வெளிச்சம் யூட்டூப் காணொளியில் கூறியுள்ளேன். பாபரி மஸ்ஜித் வழக்கை 117 வருடங்களாக இழுத்ததே இந்துத்துவவாதிகள் அல்ல உச்ச நீதிமன்றம் தான். ஒவ்வொரு முறையும் முஸ்லிம்கள் ஒரு நிவாரணத்தை தேடி செல்லும் பொழுது அவர்கள் அதற்கு எதிராக ஒரு தீர்ப்பை கொடுத்து கபளீகரப்படுத்துவார்கள். கையெழுத்து போடாத தீர்ப்பு இறுதியில்.

இந்த ஐந்து ஏக்கர் நிலத்தில் பள்ளிவாசலை கட்ட விடுவார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அந்த மக்களோடு தொடர்பு கொண்டால் அவர்கள் சொல்லுகிறார்கள் "எதற்கெடுத் தாலும் தடையை போடுகிறார்கள். அந்த பகுதியில் எங்களுக்கான திட்டத்தை தாருங்கள் என்று சொன்னால், நீங்கள் 10 முதல் 12 கோடி Development fund என அந்த பணத்தை டெபாசிட் செய்தால் தான் நாங்கள் அனுமதி தருவோம் என்று கூறுகிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கம் எளிதில் கொடுத்து விடுமா என்ன? அவர்கள் கொடுக்க விடவில்லை."

நாம் வடக்கில் இருக்கும் மக்கள் படும் பாட்டை பார்த்துட்டு கண்ணீர் வடிக்கிறோம். துஆ செய்கிறோம். ஆனால் அவர்களிலும் சிலர் எழுந்து நின்று, இருக்கின்ற அவகாசத்தை பயன்படுத்தி வேலை செய்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதில் அத்தார் உசைன் சித்திக் என்பவர் தான் இந்த Indo Islamic Culture Foundation னுடைய ஜெனரல் செக்ரேட்டரி. அவர் தளராமல் கடிதம் எழுதிக் கொண்டே இருக்கிறார்.

10 முதல் 12 கோடி வரை எங்களால் கட்ட இயலாது எங்களுக்கு இதுவரையும் அயோத்தியா பள்ளிவாசல், பாபர் மசூதி என்று கட்டினால் கிடந்து குதிக்கிறார்களே என்று

அயோத்தியா பள்ளிவாசல் என்ற பெயரை வைத்துக் கொண்டார்.

உளவியல் ரீதியாக முஸ்லிம்களை தூக்கி நிறுத்துவதற்காக. அந்த அயோத்தியா பள்ளிவாசலுக்கு நாங்கள் 50 லட்சம் ரூபாய் தான் வசூலித்து உள்ளோம். நீங்கள் 10 முதல் 12 கோடியை கட்டித்தான் திட்ட அனுமதியை வாங்க வேண்டும் என்று சொன்னால் என்ன செய்வது ஆகவே நீங்கள் இந்த டெவலப்மெண்ட் பண்டு போன்றவற்றை யெல்லாம் ரத்து செய்து பள்ளிவாசல் கட்ட அனுமதி தர வேண்டும் அல்லது இதை நீங்கள் குறைத்து சொன்னால் எங்களால் முடிந்ததை நாங்கள் கட்டிக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள்.

இப்படி தடைகளுக்கு மேல் தடைகளை தாண்டி அயோத்தியா மஸ்ஜித் நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் கண்ணுக்கு எதிரே நின்ற 400- 500 ஆண்டுகளாக பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டு கோவில் கட்டப்பட்டு விட்டது.

இனிமேல் நாங்கள் திறக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது கியான் வாபி மஸ்ஜிதுக்கு வந்துவிட்டார்கள். ஆனால் அங்கு தலைமை தொல்பொருள் ஆய்வாளர் கார்பன் டேட்டிங் எல்லாம் கற்களுக்கு கிடையாது என்று கூறிவிட்டார். சிவலிங்கம் என்பதை கல் என்று கூறுகிறார்.

இதைப் பற்றிய தகவல்களை வைகறை வெளிச்சம் youtube தளத்தில் ஒரு காணொளியில் பார்ப்போம் இன்ஷா அல்லாஹ்.

ஆனால் பாசிஸ்டுகள் வீழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். ஏதாவது ஒரு நீதிபதி எழுந்து இதில் உள்ள தவறுகளை கண்டறிந்து இந்த தீர்ப்பு செல்லாது என்று கூறினால் அன்றைக்கு நீதி நிலைத்துவிடும். ஆனால் எந்த நீதிபதியாவது அவ்வளவு தைரியத்தோடு வருவாரா? என்பது காலம் கடந்து தான் தெரியும் பாப்போம் இன்ஷாஅல்லாஹ்!

அண்ணாரின் மறுமை வாழ்விற்காக அனைவரும் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்குமாறு தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**-MGM**





இந்த புத்தகம் இரண்டு முக்கியமான விஷயங்கள் நம் ஜனநாயகத்திற்கு மிக மோசமான அச்சுறுத்தல்களாக இருப்பதை பற்றி பட்டயங்கூறுகிறது. ஒன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் வானளாவிய அதிகாரம் மற்றொன்று ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் தவறான அழிவுக் கொள்கைகளைக் கொண்ட வலது சாரி தீவிரவாத குழுக்களுக்கும் இடையிலான சாத்தானிய உறவு. இவை இரண்டும் தான் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம்.

~~₹220~~ ₹150 தள்ளுபடி விலையில்!

Ph:7401213394

Vergal Pathippagam







# நாகர்கோவில் வீடு புகுந்து கொள்ளை! காவல்துறையின் செயல்பாடு.....?

மே *26* இரவு சுமார் *8:30* மணியளவில் வேதநகர் தெற்கு புதுத்தெருவில் வசித்து வரும் முகமது உமர் சாகிப் என்பவர் வீட்டில் தனியாக இருந்தபோது அந்த கொள்ளை நடைபெற்றது. KL -16-E -3289 என்ற வெள்ளை நிற Accent காரில் தமிழ்நாடு பதிவு எண்ணைக் கொண்ட பொய்யான ஸ்டிக்கரை ஒட்டிக்கொண்டு வந்த ஒரு பெண் உட்பட ஏழு நபர்களால் இந்த துப்பாக்கி முனை கொள்ளை நடைபெற்றது.

கொள்ளையாளிகள் பெண் உட்பட அனைவரும் பர்தா மற்றும் மாஸ்க் அணிந்திருந்தனர். மிகத் தந்திரமாக பால்காய்ப்பு நிகழ்ச்சிக்கு அழைப்பது போல் நடித்து தனியாக இருந்த உமர் சாகிப்பை, தான் கொண்டுவந்த போத்தீஸ் கட்டை பையில் ஒழித்து வைத்திருந்த அரிவாளின் பின்பகுதியால் தலையில் தாக்கியும், தான் கொண்டு வந்த துப்பாக்கியில் மிரட்டியும் சுமார் *20* பவுன் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர். சார்லஸ் அம்மார், ரஹீம், தர்வீஸ் மீரான், கவுரி, ஷேக் முஹம்மது, மொய்தீன் புகாரி ஆகிய குழுக்கள் குற்றவாளிகள் என பொதுமக்கள் கருதுகின்றனர்.

வீட்டில் வெளியில் சென்றவர்கள் திரும்பி வந்திடவே கொள்ளையர்கள் தப்பி ஓட முற்பட்டனர். உள்ளே சென்று பார்த்த உமரின் மனைவிக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது,




தன் கணவர் கொள்ளையர்களால் தாக்கப் பட்டு, கை கால்களை, கொள்ளையர்கள் கொண்டுவந்த கருப்பு நிற டேப்பால் ஒட்டப்பட்டும், அவரது வாயும் சத்தமிடாமல் இருக்க ஒட்டப்பட்டும் கிடந்தார்.

வீட்டிற்கு திரும்பிய உமரின் மனைவி ஜாஸ்மின் மற்றும் அவரது மகளையும் லாவகமாக மீண்டும் கொள்ளையர்கள் நெருங்கியதால் அவர்கள் கூச்சலிட்டனர், அதனால் கொள்ளையர்கள் வந்த காரில் ஏறி தப்பி ஓடினர்.

அக்கம் பக்கம் கூச்சல் சத்தம் கேட்ட பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் காரை விரட்டினர் சற்று தூரம் சென்ற கார் பழுதடைந்ததால் கொள்ளையர்கள் காரில் இருந்து இறங்கி ஓடினர் அதில் பிரபல கஞ்சா புகழ் ரஹீம் பிடிபட்டான். பிடிபட்ட கஞ்சா ரஹீம் தனது மற்ற சகாக்களுக்கும் போலீசுக்கும் அலைபேசியில் தொடர்பு கொண்டே இருந்தான்.

பொதுமக்களும் போலீசுக்கு தகவல் தெரிவிக்க KK1938 என்ற பேட்ச் நம்பர் கொண்ட காவலர் மட்டும் தனியே வந்தார். இத்தனை பெரிய கொள்ளை சம்பவத்திற்கு ஒரு காவலர் மட்டும் வந்தது மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பொதுமக்களின் நிலைமை அறிந்த அந்த காவலர், KK2570 என்ற காவலருக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு “நீ இங்கே வாடா” என அழைத்தார்.

அலைபேசியை வைத்தது தான் தாமதம்! மிக அருகாமையில் நின்றார் போலும், வெறும் மூன்று நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் கொள்ளையன் கஞ்சா புகழ் ரஹீமின் குரல் ஓங்கத் தொடங்கியது. அது மட்டுமல்லாது வந்த காவலர் KK2570 தனது சீருடை சட்டையில் பேட்ச் நம்பர் அணியாமலே வந்து, கஞ்சா புகழ் ரஹீமை அந்த இடத்தை விட்டு காப்பாற்ற முற்படுவது போல் நடந்து கொண்டார்.

சம்பவ இடத்திற்கும் கொள்ளையன் கஞ்சா புகழ் ரஹீம் பிடிபட்ட இடத்திற்கும் சுமார் 10 வீடு தொலைவு இருக்கும். காவலர் KK2570 காவல் நிலையத்திற்கு எந்த தகவலும் கொடுக்காமல் அல்லது கொள்ளையாளியை அழைத்துச் செல்ல போலீஸ் வாகனத்தை அழைக்காமல் தான் வந்த Splendor வாகனத்தில் தனது நண்பனை எவ்வாறு அழைத்துச் செல்வோமோ அவ்வாறு மிகச் சாதாரணமாக அழைத்துச் சென்றது பொது மக்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

இருவரும் காவலர் - கொள்ளையர் போலல்லாமல் நண்பர்கள் போல் நடந்து கொண்டது அங்கே சந்தேகத்தை ஏற்படுத்தியது. கொள்ளையனை அழைத்துச் சென்ற இரண்டு நிமிடத்தில் கோட்டர் ஆய்வாளர் ராமன் சம்பவ இடத்திற்கு வந்தார். அவரும் சிறிது மிரட்டல் தோனியில் கூடிநின்ற மக்களை துரத்த முயன்றார். மக்கள் பொங்கி எழவே நடந்த சம்பவத்தை கேட்க முன் வந்தார் ஆயினும் கொள்ளையடிக்கப்பட்ட வீட்டில் கொள்ளையர்கள் பயன்படுத்திய ஆயுதங்களும், பொருட்களும் சிதறிக்கிடக்கும் நிலையில் அந்த இரண்டு காவலாளிகள் மற்றும் கோட்டர் ஆய்வாளர் ராமன் அவர்களும் சம்பவ இடத்தை, வீட்டை பார்க்க முற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் காவல் கண்காணிப்பாளர், மேயர், துணை கண்காணிப்பாளர் ஆகியோர் மூலம் அழுத்தம் தரவே சம்பவ இடத்திற்கு பார்வையிட வந்தனர்.

*தடயவியல் நிபுணர்கள் இல்லாமல் கைப்பற்றப்பட்ட கொள்ளையர்கள் பயன்படுத்திய பொருட்கள்!*

மூன்று காவலர்களும் சம்பவ இடத்திற்கு வந்ததும், அங்கும் பொதுமக்கள் கூடினர். கொள்ளை நடந்த வீட்டிலும், சந்தேகத்திற்கு இடமாக நடந்த காவலர் Kk2570, பத்திரிகையாளர்கள் சிதறி கிடந்த அரிவாள், துப்பாக்கி, கையுறை, நிக்காப் துணி, டார்ச் மற்றும் கொள்ளையுண்ட பீரோக்களை புகைப்படம் எடுத்தும் Kk2570 என்ற காவலர்



குற்றவாளிகள் கொண்டு வந்து விட்டு சென்ற போத்தீஸ் கட்டை பையில் அரிவாள், துப்பாக்கி, டார்ச், கையுறை அனைத்தையும் தடயவியல் நிபுணர்களுக்கு அழைப்பு கொடுக்காமல் தாமாகவே தன் கையால் எடுத்து சிரித்தவாறு இது பொம்மை துப்பாக்கி தான் என்று கூறி அனைத்தையும் மடமடவென போத்தீஸ் கட்டை பையில் அடைத்தது, தடயங்களை அழித்து எடுத்துச்





J2

நாகர்கோவிலில் பரபரப்பு சம்பவம்:

வீடு புகுந்து துப்பாக்கி முனையில் டிரைவரிடம் 20 பவுன் நகை கொள்ளை

பர்தா அணிந்த கும்பல் அட்டகாசம்

உறவுக்காரர்கள் என்று கூறி நாடகமாடிய கொள்ளை கும்பல்

சென்றது மக்களிடையே பெரும் அதிர்ச்சியும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியது. மொத்தத்தில் காவலர் Kk2570 வின் நடவடிக்கை காவலர் போல் அல்லாமல் பிடிபட்ட கொள்ளையனின் தடயங்களை அழிக்க முற்பட்டது, நண்பர்போல் நடந்து கொண்டது வருத்தமடைய செய்கிறது.

ஆயினும் தனது பணி நிமித்தம் காரணமாக சற்று தாமதமாக வந்த கன்னியாகுமரி மாவட்ட இணை கண்காணிப்பாளர் நவீன் குமார் அவர்கள் நேரில் பார்வையிட்டு பிடிபட்ட கொள்ளையாளி மூலம் மற்ற அனைத்து குற்றவாளிகளையும் கையும் களவுமாக பிடித்து 20 சவரன் நகையை மீட்டார் என்பது பாராட்டுக்குரியது. உமர் சாகிப் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## கேள்விகள் மற்றும் சந்தேகங்கள்

*1.* காவல் ஆய்வாளர் இருந்தும் அவரது துணையில்லாமல் காவல் வாகனம் அல்லாது தனது சொந்த இரு சக்கர வாகனத்தில் கொள்ளையாளியை KK2570 என்ற காவலர் அழைத்துச் சென்ற நோக்கம் என்ன?

*2.* காவல் ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலாளிகள் இருந்தும் கொள்ளையுண்ட வீட்டை தானாக முன்வந்து பார்வையிடாமல், பொதுமக்கள் அழுத்தத்தின் பேரில் வந்து பார்வையிட்ட நோக்கம் என்ன?

*3.* கொள்ளையாளிகள் கொலை வெறி தாக்குதல் நடத்தி பொருட்கள் வீட்டில் சிதறிக் கிடக்கும் நிலையில், தடயவியல் நிபுணர்களை அழைக்காமல் இருந்த காரணம் என்ன? ஏன் தடயவியல் நிபுணர்கள் பயன்படுத்தப் படவில்லை?

*4.* கொள்ளையாளிகளின் துப்பாக்கியை KK2570 என்ற காவலர் தன் வெறும் கையால் எடுத்து இது பொம்மை துப்பாக்கி தான் என்ற முடிவுக்கு வர காரணம் என்ன?

*5.* கஞ்சா புகழ் ரஹீமை கடைசி வரை காப்பாற்ற துடிப்பது போல் நடந்து கொண்ட விதம் எதைக் காட்டுகிறது?

*6.* கஞ்சா புகழ் ரஹீம் ஊரில் பல குற்றங்கள் புரிந்தாலும் குறைவான பிரிவுகளில் வழக்கு பதிவு செய்திருக்கப்படுவதின் காரணம் என்ன?

*7.*வீட்டில் கைப்பற்றப்பட்ட கொள்ளை யாளிகளின் பொருட்களை, சரியான முறையில் ஒப்படைக்கப்பட்டதா? உண்மையில் அது பொம்மை துப்பாக்கி தானா?

*8.*கொள்ளையாளியை தனது இரு சக்கர வாகனத்தில் அழைத்து செல்லும்போது ஏன் தனது பேட்ச் நம்பரை பயன்படுத்தி வரவில்லை, அதன் நோக்கம் என்ன?

இன்னும் இது போன்ற பல சந்தேகக் கேள்விகள் எழுகின்றன. ASP. நவீன் குமார் அவர்கள் திறமையோடு உண்மை குற்றவாளிகளை சிறையில் அடைத்தார். இது போன்ற குற்றங்கள் தொடராமல் இருக்க குற்றவாளிகளை இரும்புக்கரம் கொண்டும் கடுமையான சட்டங்களைக் கொண்டும் அடக்க முன்வர வேண்டும்.

அது மட்டுமல்லாமல் இது போன்ற குற்றவாளிகளுக்கு உதவுவது போல் நடந்து கொள்ளும் காவலர்களையும் அடையாளம் கண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் முக்கிய வேண்டுகோள். கஞ்சா புகழ் ரஹீமின் மீது பல வழக்குகள் நிலுவையில் இருக்க ஏன் கடும் சட்டங்கள் இதுவரை பாயவில்லை.

- நாகர்கோவிலிலிருந்து நமது நிருபர்

# அன்னை ஹஃப்ஸா மகளிர் இஸ்லாமிய கல்லூரி

## பட்டமளிப்பு விழா




மே 28ம் தேதி பெரிய பட்டினம் தர்கா திடலில், அன்னை ஹஃப்ஸா இஸ்லாமிய மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அதில் நமது வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இஸ்லாமிய கல்வி முறை குறித்தும், வாலாறு குறித்தும் பேசினார். சமீபத்தில் வெளிவந்த இஸ்லாத்திற்கு எதிரான திரைப்படங்களை நாம் (வைகறை வெளிச்சம் யூடியூப் தளம்) எப்படி எதிர்கொண்டு அந்த வெறுப்பு பிரச்சாரங்களை முறியடித்தோம் என்பதை குறித்தும் சிறப்புரையாற்றினார்.

மேலும் நிகழ்ச்சியில் இராமநாதபுரத்தைச் சார்ந்த நண்பரும், பல் மருத்துவருமான காசிம் முஹம்மது அவர்களின், “குர்ஆனும் வானியலும் என்ற நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலான Quran and Astronomy” என்ற நூலை ஆசிரியர்.மு.குலாம் முஹம்மது அவர்கள் வெளியிட்டார். இதனுடன், காசிம் முஹம்மது மற்றும் அவரது நண்பர் எஸ்.ராகவன் அவர்கள் இணைந்து எழுதிய “திருக்குர்ஆனில் அறிவியலும் வாழ்வியலும்” என்ற நூலும் அசிரியர். மு.குலாம் முஹம்மது அவர்களால் வெளியிடப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

மேலும், ஹாஃபிழ் ஷரீஃப் ஸிராஜி அவர்கள் வரவேற்புரை ஆற்ற, கோவை அய்யூப் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். இறுதியாக ஜனாப். முஹம்மது சித்தீக் அவர்கள் நன்றியுரையாற்றி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள்.

– நமது நிருபர் – ராமநாதபுரம் மாவட்டம்



மருத்துவம் - தொடர்

# முதுமையும்...! கோடையும்.....!

இனி எதிர்வரும் மாதங்களில் கோடைக்காலத்தின் வெப்பம் அதிகமாகவே இருக்கும் எனக் கூறப்படுகிறது. எனவே கொளுத்தும் வெயிலையும், ஏற்படும் எண்ணற்ற நோய்களையும் சமாளிக்கச் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முதியோர்கள் எடுத்துக்கொள்வது அவசியம்.

வெயிலில் நீண்ட நேரம் இருந்தால் பலவீனம், தலைச்சுற்றல், தலைவலி, தோல் வறட்சி, அதிகரித்த இதயத்துடிப்பு முதலியவை ஏற்படலாம். இவை உடலில் உயர் ரத்த அழுத்தத்தை அதிகரித்து, பக்கவாதத்தைக் கொண்டு வரலாம். இதை உடனடி மருத்துவச் சிகிச்சை மூலம் எளிதில் நிர்வகிக்க முடியும், என்றாலும் தவிர்ப்பதே நல்லது. இயன்றவரை மதியம் 12 மணி முதல், மாலை 4 மணிவரை வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். தவிர்க்கமுடியாத நேரங்களில் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாத நேரங்களில் வெளியே செல்லவேண்டி இருந்தால் குடை அல்லது குளிர் கண்ணாடிகளை அணிந்து செல்லலாம். நீண்ட நேரம் சூரிய ஒளியில் இருக்கும்போது, தீங்கு விளைவிக்கும் புற ஊதாக்கதிர்கள் மென்மையான தோலில் ஊடுருவக்கூடும்.

இதனால், உடல் அரிப்பு,வறண்ட மற்றும் சிவப்பு தோல் ஆகியவை ஏற்படலாம். எனவே உடல், தோல் ஈரப்பதமாக இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். வியர்க்குரு பெரியவர்களை மிகவும் பாதிக்கும் என்பதால், வியர்வையுடன் கூடிய ஆடைகளை அடிக்கடி மாற்றுவதும், இருமுறை குளிப்பதும் நல்லது.

அசுத்தமான உணவு அல்லது தண்ணீரை எடுத்துக்கொள்வதால் வாந்தி, வயிற்றுப்போக்கு. குமட்டல், வயிற்று வலி போன்றவை உண்டாகலாம். வீட்டில் சமைத்த உணவை மட்டுமே அளவுடன் உட்கொள்வது நல்லது.

வெளியிடங்களில் சாப்பிட நேரிட்டால், சுகாதாரமான இடங்களில் மட்டுமே சாப்பிட வேண்டும். கூடுமானவரை எண்ணெய் மற்றும் கார உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

கோடைக்கால நோய்களில் மிகவும் கொடிய ஒன்றான சின்னம்மை, பொதுவாகச் சிறு குழந்தைகளையும், சில நேரங்களில் பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி கொண்ட முதியோர்களையும் பாதிக்கலாம், எச்சரிக்கை தேவை. மஞ்சள் காமாலை நோய், காலரா, டைபாய்டு போன்ற கோடை நோய்களை உண்டாக்கும் நுண்கிருமிகள் வாய் வழியாக உடலுக்குள் சென்று உடலில் அந்தநோய்களை ஏற்படுத்தலாம்.

**மஞ்சள் காமாலையின் முக்கிய அறிகுறிகள்...**

மஞ்சள் நிறத் தோல், வெளிறிய கண்கள், கருமையான சிறுநீர், தோல் அரிப்பு போன்றவை. அன்றாட உடற்பயிற்சி ஆரோக்கியமான எடையைப் பராமரிக்கவும், ரத்தத்தில் கொழுப்பு மற்றும் சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் உதவும்.

முகத்தை ஒரு நாளைக்கு இரண்டு முறை சுத்தமாகக் கழுவுவது, சருமத்தை எண்ணெய் பசை இல்லாமல் வைத்திருப்பது வெப்பக்கட்டிகள் வருவதைத் தடுக்கும்.

கண்கள் வீங்கி சிவந்து வலியை ஏற்படுத்துவதை கண் நோய் இருப்பதற்கான அடையாளமாகக் கருதலாம். இது தொற்று நோய் ஆதலால் ஒருவருக்கு வந்தால் வீட்டில் அனைவருக்கும் வரலாம். கண்களை தொடுவதற்கு முன்பு கைகளை கழுவுவது அவசியம். பாதிக்கப்பட்ட கண்களை குளிர்ந்த நீரில் ஒரு நாளைக்கு பலமுறை கழுவுவதும் மருத்துவ சிகிச்சையும் நல்ல பலனைத் தரும். நீர்க்கடுப்பு ஏற்படுவதைத் தடுக்க நிறைய தண்ணீரையும், இளநீர், எலுமிச்சை, ஆரஞ்சு அல்லது பிற பழச்சாறுகளை எடுத்துக் கொள்வதும் நல்லது.

அதிகப்படியான வியர்வை வெளிவருவதால் உடலில் உப்பு குறைபாடு ஏற்படாமல் இருக்க நீர்மோரில் உப்பு சேர்த்து அருந்துவது நல்லது. மிக இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து, தளர்வான ஆடைகளை அணிய வேண்டும்.




கருப்பு மற்றும் பிற பிரகாசமான நிறங்கள் வெப்பத்தை கிரகிக்கும் தன்மை கொண்டதால், அவற்றைத் தவிர்த்து வெண்மையான பருத்தி ஆடைகளை அணிவது சிறப்பு.

முதியோர்கள் அடிக்கடி சிறுநீர் போவதைத் தடுக்க தண்ணீர் எடுத்துக் கொள்வதை தவிர்ப்பார்கள். வயதின் காரணமாகவும் அவர்களுக்கு தாகமெடுக்கும் உணர்வு குறைந்துவிடும். ஆனால் ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு முதல் மூன்று லிட்டர் வரை நீரை பருகவேண்டும்.

இதயம் மற்றும் சிறுநீரகக் கோளாறு உடையவர்கள் மருத்துவரின் பரிந்துரைப்படியே நீர் அருந்த வேண்டும். நார்ச்சத்துக்கள் அதிகம் கொண்ட கொய்யாப்பழம், தர்பூசணி போன்ற நீர் பழங்களையும் அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். நீரிழிவு நோயாளிகளுக்குப் பசி உணர்வு குறைந்து காணப்படும்.

எனவே அதற்கு தகுந்த மாதிரி மாத்திரைகள் மற்றும் இன்சுலின் ஆகியவற்றில், மருத்துவர்களின் பரிந்துரையுடன் மாற்றம் செய்து கொள்ள வேண்டும்.

- நன்றி : முதுமை எனும் பூங்காற்று




# வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க!

- முடிந்தவரை, அதிகமாக வெயில் இருக்கும் சமயத்தில் வெளியே செல்வதைத் தவிர்க்கலாம்.
- வெளியே போவதற்கு முன்பு தண்ணீர், சிறிது உப்பு கலந்த மோர் அல்லது பழரசம் அருந்துவது நல்லது.
- வெளியே போகும் பொழுது அவசியம் குடை எடுத்துச் செல்லவும்.
- தலையில் ஏற்படும் சூட்டைத் தணிக்க தலையில் தொப்பி அணியலாம்.
- குறைந்தது 2 - 3 லிட்டர் தண்ணீர் அல்லது வேறு ஏதாவது திரவமோ ஒரு நாளைக்குத் தேவைப்படும்.
- இதய நோய் அல்லது சிறுநீரக நோய் உள்ளவர்கள் டாக்டரின் ஆலோசனைப் படி தேவையான நீரை அருந்தலாம்.
- முதியோர்களுக்கு வெயில் அதிகம் இருந்தாலும், தாகம் அவ்வளவாக எடுக்காது. ஆகையால் போதிய தண்ணீர் குடிக்கமாட்டார்கள்.
- இல்லத்தில் உள்ள முதியோர்களைப் போதிய தண்ணீரைக் குடிக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- தர்ப்பூசணி, இளநீர், ஆரஞ்சு போன்ற பழரசங்களை அதிகமாக எடுத்துக் கொள்ளலாம்.
- கோடைக்கேற்ற பழம் நுங்கு.
- நன்னாரி சர்பத் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். பதநீர் கோடையில் உடலுக்கு மிகவும் நல்லது.
- மசாலா அதிகம் உள்ள உணவைத் தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம். உதாரணம்: அசைவ உணவு.
- கஞ்சி - கம்பு, தினை ஆகியவற்றில் செய்த கஞ்சி, உடல் சூட்டைக் குறைக்க வல்லது. எளிதில் செரிக்கவல்லது.
- செயற்கைப் பானங்களை முடிந்தவரைத் தவிர்க்க வேண்டும்.
- கண்கள் மிகவும் சூடாக இருந்தால் வெள்ளரிக்காயை நறுக்கி கண்கள் மேல்


வத்தால், கண் சூடு குறையும்.

- சிறிது நேரம் வைத்தால், கண் சூடு குறையும்.
- காற்றோட்டமுள்ள அறையில் முடிந்தவரை இருந்தால் நல்லது.
- மின் விசிறி, ஏர்கூலர், குளிர்சாதனப்பெட்டி ஆகிய உபகரணங்களைத் தேவைக்கேற்ப உபயோகிக்கலாம்.
- படுக்கை அறையில் வெட்டிவேர்க் கொடியைத் தண்ணீரில் நனைத்துத் தொங்கவிட்டால், அறை குளிர்ச்சியாக இருக்கும்.
- வேர்க்குரு அதிகம் இருந்தால் கேலமைன் கிரீமை உடலுக்குத் தடவலாம்.
- லேசான பருத்தியிலான அல்லது கதர் ஆடைகளை அணிவது நல்லது.
- காலையிலும் இரவிலும் குளித்தால் உடல் சூடு குறையும்,
- கண்ணிற்குக்குளிர்ச்சிதரும் கண்ணாடியை உபயோகப்படுத்தலாம்.
- அரிப்பு அதிகமாக இருப்பின், டாக்டரைக் கலந்து அதற்குத் தேவையான மாத்திரைகள் மற்றும் களிம்பினை உபயோகப்படுத்தலாம்.

ஆகவே கோடையில் குளிர்ச்சி பெற தண்ணீர், மோர், பழரசம், பதநீர், நுங்கு, கஞ்சி போன்றவைகளைத் தினமும் சேர்த்துக்கொண்டு, லேசான பருத்தி ஆடை அணிந்து, தினமும் இருமுறை குளித்து வந்தால் போதும். நாம் இருக்கும் இடத்திலேயே ஊட்டியின் குளிர்ச்சியை ஓரளவிற்கு அனுபவிக்க முடியும்.

- நன்றி : முதுமை எனும் பூங்காற்று

## மருத்துவர் வர இயலாத போது




மருத்துவம் வியாபாரமாக மாறியதிலிருந்தே அது மேல்தட்டு மக்களுக்கு எட்டும் கனியாகவும் ஏழைகளுக்கு எட்டா கனியாகவும் உருமாறியது. இது இப்போது உருவான பிரச்சினை அல்ல காலம்காலமாகவே இது தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. இதே பிரச்சினை இஸ்லாமிய வரலாற்றிலும் நிகழ்ந்துள்ளது.

17 –ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவின் மருத்துவ உலகின் தலைவாசலாக திகழ்ந்த இமாம் ராஸி (ரஹ்) அவர்களே முதன் முதலாக இதற்கான தீர்வை தேடினார்.இதற்கான தீர்வாக அமைந்த புத்தகம் தான் “மருத்துவர் வர இயலாத போது”.

இந்த நூலின் முன்னுரையில் இமாம் ராஸி (ரஹ்) குறிப்பிடுகிறார் :

“நான் மருத்துவர்களுடைய மருத்துவ குறிப்பு உள்ளடக்கிய நூல்கள் அனைத்தையும் வாசித்தேன்.ஆனால் அதில் அவர்கள் குறிப்பிடும் சிகிச்சை முறைகள் மற்றும் மருந்துகள் ஆகியவை மன்னர்களது கஜானாக்களில் மட்டும் கிடைக்க கூடியதாகவே இருந்தது, எனவே ஏழைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு, அவர்களுக்கு எளிமையாக கிடைக்க கூடிய பொருள்களை வைத்து எவ்வாறு சிகிச்சை பெற்று கொள்ள இயலும் என்று ஆய்வு செய்து ஒரு நூலை எழுத வேண்டும் என்ற ஆசை மனதில் எழுந்தது அதன் மீட்சியே இந்த நூல்.”

36 அத்தியாயங்களை உள்ளடக்கிய இந்த நூலில் ஏழைகள், பயணிகள் மற்றும் சாதாரண குடிமக்களுக்கு மருத்துவர் கிடைக்காத போது நோய்களுக்கு எளிமையாக கிடைக்க கூடிய பொருள்களை கொண்டு சிகிச்சை பெற்று கொள்வதற்கான குறிப்புகளை இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார். 20 ஆம் நூற்றாண்டு வரை இந்த புத்தகம் மிகவும் பிரபலமாக இருந்ததால் மருந்தியல் வரலாற்றில் சிறப்பு கவனத்தை பெற்றது.

**– மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**

# டாக்டர் மில்லரை கவர்ந்த

# திருமறை வசனங்கள்

கனடா நாட்டைச் சார்ந்த கிறிஸ்தவ பிரச்சாரகர் டாக்டர் ஜாரிமில்லர். இவர் பைபிளை கரைத்துக் குடித்தவர். எந்த விசயத்தையும் தர்க்க ரீதியாக ஆராய்பவர்.

டாக்டர். மில்லர் குர்ஆனை வாசிக்க நினைத்தார். குர்ஆனைப் படித்து முஸ்லிம்களை கிறிஸ்தவர்களாக மாற்ற வேண்டுமென நினைத்தார். அதுவகைக்கு குர்ஆனைப் படித்தார். உலகில் எந்த நூலிலும் கிடைக்காத அற்புதங்கள், பலதெளிவுரைகள் அவருக்கு கிடைத்தது. பொதுவாக யூத, நஸாராக்கள், நபிபிரானுக்கு அருளப்பட்ட குர்ஆனை நபிபிரான் இறைவனிடமிருந்து ஜிப்ரயீல் (கபிரியேல் என்னும் சன்மனஸூ மூலம்) பெற்று இறைவனுக்குத் தெரியாமல் அறிவிக்கப்பட்டது. நபிகள் நாயகம் தீர்க்கதரிசியல்ல என்பது அவர்கள் வாதம்.

உலகில் வேறு எந்த நூலிலும் கிடைக்காத அற்புதத் தகவல்கள் குர்ஆனில் இருப்பது பார்த்து அதிசயித்தார் டாக்டர் மில்லர். நபிகள் நாயகத்தின் மனைவியர் பற்றியோ, குடும்பம் பற்றியோ குர்ஆனில் இருக்குமென எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தார் மில்லர். குர்ஆனில் முழு அத்தியாயம் அன்னை மரியம் பெயரால் இடம் பெற்றிருந்தது. பைபிளில் மரியம் பற்றி இல்லாத பல விசயங்கள் குர்ஆன் மூலம் அறிந்து கொண்டார் மில்லர்.



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

திருமறையில் நபியின் குடும்பம் பற்றிய குறிப்பு காணப்படாதது மில்லரை பெரும் வியப்பில் ஆழ்த்தியது. ஆயிஷா, பாத்திமா போன்ற நாயகியர் பெயர்கள் திருமறையில் இல்லாததும் பார்த்து வியப்படைந்தார்.

நபி ஈஸா(அலை) பற்றி (ஏசு கிறிஸ்து) பற்றி குர்ஆனில் இருபத்தி ஐந்து இடங்களில் பெயரோடு குறிப்பு உள்ளது. நபிகள் நாயகத்தின் பெயர் வெறும் ஐந்தே இடங்களில் காணப்படுவது பார்த்து அதிசயித்தார். குர்ஆனை ஆழமாக படித்தும் அவரால் குற்றம் காண முடியவில்லை. ஒரு வசனம் அவரை தூக்கி வாரிப்போட்டது. “இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து சிந்திக்க

வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாத வரிடமிருந்து வந்திருப்பின் இதில் அதிகமான முரண்பாடுகளை அவர்கள் நிச்சயம் கண்டிருப்பர் என்ற இறைவசனம் அறைகூவல் விடுப்பதாகவுள்ளது.

உலகில் எந்தப் படைப்பானாலும் ஒரு நூலை எழுதி விட்டு இதில் தவறுகளே இல்லை என அறைகூவல் விடுப்பதில்லை.ஆனால் குர்ஆன் அறைகூவல் விடுவதோடு தவறு இருந்தால் காட்டுங்கள். குர்ஆனில் தவறே இல்லை என பறைசாற்றுகிறது.

மேலும் இறை மறுப்பாளர்கள் சிந்திக்க வேண்டாமா? வானங்களும் பூமியும் ஒன்றாக இணைந்திருந்தன. நாம் தான் அவற்றை வெடித்து சிதறடித்தோம். உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரால் உருவாக்கினோம். அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டாமா? (திருக்குர்ஆன் *21 :30.)*

*1973*-ம் ஆண்டு அறிவியல் ஆய்வில் கண்ட நோபல் பரிசே இந்தப் பொருள் பற்றியதாகும். பெரும் வெடிப்பு (WAY Wpey) பிரபஞ்சக் கோட்பாடாகும். மிகமிக அதிகமான வெப்பநிலையும் அடர்வும் மிகுந்த ஒரு வெடி பொருள் பலகோடி ஆண்டுகளுக்கு முன் வெடித்து சிதறியதால் உண்டானதே இப்பிரபஞ்சம் என்கிறது இக்கொள்கை.

இணைந்திருத்தல் ரத்க் என்னும் அரபி சொல் வசனத்தில் மூலத்தில் ஆளப்பட்டுள்ளது. இது ஒன்றோடொன்று இணைந்த பொருளைக் குறிக்கும். சிதறல் என்பதை குறிக்க மூலத்தில் அல்ஃபதக் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. வெடித்து சிதறுவதை இது குறிக்கும் (நத்க், ஃபதக்) நபிபிரானுக்கு சைத்தான் குர்ஆனை சொல்லிக் கொடுப்பதாக மதவாதிகள் புகார் சொல்லி வந்தனர்.

இக்கூற்றை குர்ஆன் “இதை ஷைத்தான்கள் இறக்கி விடவில்லை. அது அவர்கட்கு தகுந்ததும் அல்ல. அதற்கு அவர்களால் இயலவும் செய்யாது. *(28 : 210, 211)*

நபியே! நீர் குர்ஆனை ஓதுவதானால் விரட்டப்பட்ட சைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருவீராக *(116:98)* என்று கட்டளையிடுகிறது.

சைத்தானே ஒரு வேதத்தை அருளிவிட்டு அதை ஓதுவதற்கு முன் எப்படி என்னை விட்டு



பாதுகாப்புகோருவீராக என எப்படிச் சொல்லும்.

டாக்டர்.மில்லர் இம்மாதிரியான இறை வசனங்களால் குர்ஆன் மீது இருந்த தவறான எண்ணங்களை மாற்றி உண்மையை கண்டறிந்தாரென அவர் வரலாறு பறைசாற்றுகிறது.

நானும் ஒரு இந்து நண்பரும் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் எங்களிருவரின் ஒரு விவாதத்தின் போது நீங்கள் எல்லா நபிமார் களையும் விசுவாசிக்க இஸ்லாம் சொன்னாலும் ஏசுகிறிஸ்துவை மேல் மட்டுக்குத்தான் நீங்கள் நபியினை சொல்கிறீரென்றார்.

நான் அந்த இந்து நண்பனிடம் காலம் சென்ற உலக கத்தோலிக்க குரு செயின்ட்பால் Grazing the Resold of hope என்ற புத்தகத்தில் மேரி மாதாவை பற்றியும், ஏசுகிறிஸ்து பற்றியும் புனித பைபிளை விட புனித குர்ஆனில் அதிக குறிப்பு காணப்படுகிறதென புல்டன்ஜீன் என்னும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார் என்பதை குறிப்பிட்டுள்ளார் என்பதை சொன்னேன். அப்படியா என்று அவர் ஏற்றுக் கொண்டார். எது விசயத்தையும் ஆராயாமல் முடிவுக்கு வரக்கூடாது.



Maulana Syed Abul Hasan Ali Nadwi, Chairman of the Board of Trustees

# இஸ்லாமிய அறிவு தீபம் அணையாமல் காத்த இந்திய மத்ரஸாக்கள்

மூலம்:
அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்)



தமிழில்:
மௌலவி. நியாசுதீன் புகாரி நத்வீ

### அல் ஜாமிஆ மில்லியா அல் இஸ்லாமிய்யா பல்கலைக்கழகம்:

கிலாஃபத் போராட்டத்தின் பரபரப்பான நாட்களில், அலிகர் பல்கலைக்கழகத்தின் மீதான நம்பிக்கையை இழந்த அதன் முன்னாள் மாணவர்களில் சிலர், அரசியல் தளத்தில் சுதந்திரமாக செயல்படும் ஒரு பல்கலைக்கழகத்தை 1920 -ஆம் ஆண்டு நிறுவினார்கள். மிக மூத்த இஸ்லாமிய தலைவர் முஹம்மத் அலி அவர்களே இதற்கு தலைமை தாங்கினார்.முதலில் அலிகரில் இருந்த இந்த பல்கலைக்கழகம் பிறகு டில்லிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.இந்த பல்கலைக்கழகமே ஜாமியா மில்லியா என்ற பெயரில் பிரபல்யமானது.

இதன் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் இந்திய நாட்டிற்கு தொண்டாற்ற வேண்டும், இந்த நாட்டிற்காக பல அர்ப்பணிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உன்னத நோக்கில் செயல்பட்டார்கள்.இவர்கள் அனைவரும் இந்தியாவின் முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களது தலைமையின் கீழ் மிகச் சிறப்பாக பணிபுரிந்தார்கள். நெடுங்காலமாக பல சவால்களை எதிர்கொண்டு பல கஷ்டங்களையும் சிரமங்களையும் சகித்து கொண்டார்கள்.கல்வி மற்றும் கலாச்சாரம் சார்ந்து மிகச் சிறந்த ஆக்கபூர்வமான விஷயங்களை மேற்கொண்டார்கள். இப்போது இந்திய அரசின் உதவி பெறும் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இது திகழ்கிறது.

### ஜாமியா உஸ்மானிய்யா

தற்கால கல்வியை இந்தியாவின் முக்கிய மொழிகளில் ஒன்றான உருது மொழியில் போதிக்கபடுவதே ஹைதராபாத்தில் நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகத்தின் தார்மீக

நோக்கம். தத்துவம் , இயற்கை அறிவியல், மருத்துவம், அரசியல், பொருளாதாரம், வரலாறு ஆகிய துறைகளில் முக்கியமான நூல்களை உருது மொழியில் மொழிபெயர்ப்பு செய்வதில் இந்த பல்கலைக்கழகம் தனி கவனம் செலுத்தியது. எந்தளவிற்கு என்றால் பல்துறை சார்ந்த வார்த்தைகள் முழுக்க உருது மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப் பட்டது.இதன் மூலம் இப்பல்கலைக்கழகம் இந்திய முஸ்லிம்களுக்கும் இந்திய கலாச் சாரத்திற்கும் மிகப்பெரிய தொண்டாற்றியது.

## நத்வதுல் உலமா

பாரம்பரியத்தை பற்றி பிடித்து அதிலிருந்து சிறிது பிறழ்வது கூட மிகப் பெரிய தவறு என்ற நிலைப்பாட்டை கொண்ட பழைய கல்வி நிறுவனங்களுக்கும் அதே நேரத்தில் புதுமையை புனிதப்படுத்தி பழமையையும் பாரம்பரியத்தையும் இழிவு படுத்தி கொண்டிருந்த புதுமையான கல்வி நிறுவனங்களுக்கும் மத்தியில் ஒரு நடுநிலையை கடைபிடிக்கும் நோக்கில் நிறுவப்பட்ட நிறுவனமே தாருல் உலூம் நத்வதுல் உலமா. இக்கல்வி நிறுவனம் ஹிஜ்ரி 1312 -ஆம் ஆண்டு லக்னோ நகரத்தில் ஆன்மீக பேரொளி அல்லாமா முஹம்மத் அலி மோன்கிரி(ரஹ்) அவர்களாலும் கலப்பற்ற தூய்மையான உள்ளங்களை கொண்ட அவர்களது நண்பர்களாலும் நிறுவப்பட்டது.

ஒருபுறம் பிற்போக்குவாதிகள் முஸ்லிம் களிடையே ஏற்படுத்திக் கொண்டிருந்த தாக்கம், மறுபுறம் மார்க்க அறிஞர்கள் பொது வாழ்விலிருந்து முழுமையாக ஒதுங்கி கல்வி மற்றும் கலாச்சாரத்தில் மிகவும் பின்தங்கி யிருந்தார்கள். இதற்கு மத்தியில் மத்ஹபை குறித்து எழுந்த தவறான புரிதல்கள், சிறு சிறு ஃபிக்ஹ் மஸாயில்களில் கடுமையான கருத்து வேறுபாடு கொண்டு உருவாகிய மோதல்கள் இப்படிப்பட்ட அபாயகரமான சூழல், அல்லாமா முஹம்மத் அலி மோன்கிரி (ரஹ்) மற்றும் அவர்களது நண்பர்களது உள்ளத்தில் ஆழமான அச்சத்தை உருவாக்கியது. இவ்வனைத்திற்குமான தீர்வாகவே இந்த காலகட்டத்தில் நத்வதுல் உலமா என்ற கூட்டமைப்பும் அதற்கு கீழ் செயல்படும் தாருல் உலூம் நத்வதுல் உலமா என்ற இஸ்லாமிய பல்கலைக்கழகமும் நிறுவப்பட்டது.

இவையிரண்டின் அடிப்படை கொள்கையே எதிலும் நடுநிலையை கடைபிடிப்பதே. இதன் மிகச் சிறந்த நோக்கங்களில் சில, “தரம் உயர்ந்த தலைசிறந்த பாரம்பரியத்தையும் பயனளிக்கும் நவீன நாகரிகத்தையும் ஒன்றிணைக்க வேண்டும்.”

“என்றுமே மாறாத நிலைத்தன்மை கொண்ட சன்மார்க்க இஸ்லாத்தையும் எப்போதுமே மாறிக் கொண்டு வளர்ச்சி அடையும் அறிவையும் ஒன்றிணைக்க வேண்டும்”. அஹ்லுஸ் ஸுன்னாவின் பிரிவுகளில் அகீதாவில் கருத்து வேறுபாடு கொள்ளாத பிரிவுகளை ஒன்றிணைக்க வேண்டும்.

ஆரம்பித்த நாளிலிருந்து இதன் வலுவான நம்பிக்கையே, நிச்சயமாக இஸ்லாமிய கல்வி என்பது செழித்தோங்கக் கூடிய உயிரோட்டமான கல்வி . நிச்சயமாக இதன் பாடத்திட்டம் மாற்றத்திற்கும், புதுப் பித்தலுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். காலம் மற்றும் சூழலிற்கு ஏற்ப இதனை புதுப்பித்து சீர் செய்து கொண்டே இருக்க வேண்டும். முஸ்லிம்களது சூழல் அவர்களது தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்டத்தில் ஏதேனும் பாடங்களை கூட்டியோ குறைக்கவோ வேண்டும்.

தாருல் உலூம் நத்வதுல் உலமா குர்ஆன் சார்ந்த இஸ்லாமிய கலைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தது.எல்லா காலத்திற்கும் எல்லா தலைமுறைக்குமான வேதமே அல்குர்ஆன் என்பதை வலியுறுத்தும் வகையில் பாடங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் தனி கவனம் செலுத்தியது. அதேபோல அரபு மொழியை கற்பிப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தியது. ஏனென்றால் இம்மொழியே குர்ஆனை புரிவதற்கான சாவி.இம்மொழியை போதிப்பதில் நேர்த்தியான முறைகளை கடைபிடித்தது. இந்த சங்கையான மொழியை மனிதர்களால் பேசப்படாமல் அழிந்து போய் வெறும் கற்களிலும் ஏடுகளிலும் மட்டும் உயிர் வாழும் அரிதான மொழியை போல் அல்லாமல் மனிதர்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வழக்கத்தில் உள்ள மொழியை போல போதித்தது.

பெரியளவில் பயன் தராத பழைய பாடங்களுக்கு பதிலாக தான் வாழும்



மத்ரஸதுல் இஸ்லாஹ் என்ற இந்த கல்வி நிறுவனம் சராய் மீர் என்ற நகரத்தில் ஹிஜ்ரி 1326-ஆம் ஆண்டு மிகப்பெரிய அறிஞர் ஹமீதுத் தீன் ஃபராஹி (ரஹ்) அவர்களால் நிறுவப்பட்டது. இந்த மத்ரஸாவில், இதன் நிறுவனர் ஃபராஹி(ரஹ்) அவர்கள் குர்ஆனை புரிந்த முறையில் புரிவதற்கும், தஃப்ஸீருக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

காலத்தில் ஒரு மார்க்க அறிஞனுக்கு தனது மார்க்கத்திற்கும் தனது உம்மத்திற்கும் சேவையாற்ற தேவைப்படக் கூடிய கல்வியை அந்த இடத்தில் வைத்தது.இன்னும் இந்த ஸ்தாபனம் புதிய தலைமுறைக்கு நிலையான இஸ்லாமிய மார்கத்தை கொண்டு நற்செய்தி கூறும்,ஷரீஅத்தை மக்களுக்கு புரியும் மொழியில் விளக்கமளிக்கும், அவர்களது உள்ளங்கள் எளிமையாக உள்வாங்கும் விதத்தில் இந்த தீனுல் இஸ்லாத்தை எடுத்துச் சொல்லும் ஆலிம்களை உருவாக்க பெரும் முயற்சி எடுத்தது.

அதே போல பாரம்பரியத்தை பற்றி பிடித்துக் கொண்ட தியோபந்த் மத்ரஸாவிற்கும் நவீன கல்வியை உயர்த்தி பிடித்த அலிகர் பல்கலைக் கழகத்திற்கும் மத்தியில் நடுநிலையை கடைபிடிக்கும் அறிஞர்களாக இவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டியது. இந்த பணியில் கணிசமான அளவில் வெற்றியும் பெற்றது.

இதன் மூலம் இப்பல்கலைக்கழகம் தற்கால முஸ்லிம் அறிஞர்களுக்கு சிறந்த முன்னுதாரணம் மிகுந்த அறிஞர்களை ஈன்றெடுத்தது. இவர்கள் இஸ்லாமிய இலக்கியம், இறைகொள்கை, நபி(ஸல் ) வரலாறு,வரலாறு ஆகிய கலைகளை புதிய தலைமுறைக்கு ஏற்றவாறு படைத்ததில் நிரந்தர தடயங்களை விட்டு சென்றிருக்கின்றனர்.

## மத்ரஸதுல் இஸ்லாஹ்

## தாருல் முஸன்னி:பீன்

தாருல் உலூம் நத்வதுல் உலமாவிலிருந்து கல்வி பயின்று வெளியேறிய மாணவர்கள் 1913 ஆம் ஆண்டு அஃலம் கர் என்ற நகரத்தில் தாருல் முஸன்னஃபீன் என்ற பெயரில் மிகப் பெரிய அறிவுசார் நிறுவனத்தை நிறுவினார்கள். இந்த நிறுவனம் செயல்பட்ட காலம் வரை இதன் தலைவராக அல்லாமா ஸைய்யித் சுலைமான் நத்வி(ரஹ்) அவர்கள் பொறுப்பு வகித்தார். மார்க்கம், இலக்கியம், வரலாறு சார்ந்து பல்வேறு நூல்களை இந்நிறுவனத்தின் வாயிலாக வெளியிட்டனர். இதன் எண்ணிக்கை ஹிஜ்ரி 1392 வரை 112 நெருங்கியது. இந்த புத்தகங்கள் இல்லாமல் ஒரு நூலகம் கூட இருக்க இயலாது என்று கூறும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த நூல்களாக விளங்கியது.இந்நிறுவனம் மாஆரிஃப் என்ற பெயரில் ஆழமான அறிவு களஞ்சியங்களை உள்ளடக்கிய மாத இதழை மாதந்தோறும் வெளியிட்டது.

## நத்வதுல் முஸன்னி:பீன்

டில்லியிலும் இது போன்று கலாச்சாரம் மற்றும் வரலாறு சார்ந்த நூல்களை வெயிடக் கூடிய நிறுவனம் செயல்பட்டு வந்தது. இது நத்வதுல் முஸன்னஃபீன் என்ற பெயரில் 1938 - ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனமும் புர்ஹான் என்ற பெயரில் பல அறிவார்ந்த தகவல்களை உள்ளடக்கிய மாத பத்திரிகையை மாதம்தோறும் வெளியிட்டது. இதன் ஆசிரியராக உஸ்தாத் ஸஈத் அஹ்மத் அக்பரா

பாதி செயல்பட்டார். இந்நிறுவனத்தின் மூலமாக வெளியிடப்பட்ட பல நூல்கள் இஸ்லாமிய அறிவு வட்டாரத்தில் மிகப்பெரிய வரவேற்பையும் அங்கீகாரத்தையும் பெற்றது.

## முஸ்லிம் கல்வி மாநாடு

இந்தியாவிலேயே பழமையான கல்வி கழகம். அரசியல் மற்றும் கல்வி ரீதியாக முஸ்லிம்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் இதற்கு மிகப்பெரிய பங்குண்டு.இதன் பெயர் முஸ்லிம் கல்வி மாநாடு. இதனை ஸர் ஸைய்யித் அஹ்மத் கான் 1886 -ஆம் ஆண்டு அலிகரில் நிறுவினார். அரசு கல்விக்கூடங்களில் முஸ்லிம் இளைஞர் களை கல்வி கற்க வைப்பதற்கான முயற்சியின் வித்தே இந்நிறுவனம்.இது தான் பிற்காலத்தில் 1906 ஆம் ஆண்டு முஸ்லிம் லீக் உருவா வதற்கும் வழிவகுத்தது. இந்த கழகம் இந்தியாவின் பிரிவினைக்கு பிறகு அரசியல் மற்றும் கல்வி சூழல் மாறியதனால் இது பின்னடைவை சந்தித்தது.

## தீனி த:லிமி கவுன்சில்

இந்தியா 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்தை பெற்றது. மதச்சார்பற்ற அரசியல் அமைப்பை தேர்ந்தெடுத்து கொண்டது. அதற்கேற்ப அரசியல் சாசனத்தையும் உருவாக்கியது. இந்த அரசியல் சாசனம் அனைவருக்கும் சமமான உரிமைகள் கிடைக்கும் விதத்தில் உருவாக்கப் பட்டது. இருந்தும் சில பிராந்தியங்களில் கற்பிக்கப்பட்ட பாடத்திட்டம் முஸ்லிம்களது மார்க்கத்திற்கும் கலாச்சாரத்திற்கும் முற்றிலும் எதிராக இருந்தது. அவர்களது அடிப்படை நம்பிக்கை மற்றும் கொள்கைக்கு மாற்றமாக இருந்தது மட்டுமன்றி, இஸ்லாத்தின் அஸ்தி வாரத்தை அடியோடு தகர்ப்பது போலிருந்தது.

இவ்வாறு முஸ்லிம்களது எதிர் கால தலைமுறைக்கு ஆபத்தாக மாறப் போகும் இதனை நன்கு புரிந்த சில சிந்தனையாளர்கள் உத்திரப்பிரதேசத்தில் பல இஸ்லாமிய அமைப்புகளின் கண்காணிப்பின் கீழ் தீனி தஃலிமி கவுன்சில் என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை நிறுவினார்கள். இந்நிறுவனமானது இந்தியாவில் உள்ள பல பகுதிகளில் உள்ள பல பள்ளிகூடங்களுக்கு மத்தியில் ஒரு தொடர்பை ஏற்படுத்தியது.இந்த பள்ளிகூடங்களின் எண்ணிக்கை 10,000 எட்டியது. இந்த நிறுவனம் முஸ்லிம்களது இஸ்லாமிய கல்வியை மேற்பார்வையிட்டும் குழந்தைகள் தங்களது மொழிகளில் மார்க்கத்தை தெரிந்து கொள்வதற்கான முன்னெடுப்புகளையும் எடுத்தது.

## தாஇரதுல் மஆரி:ப் ஆராய்ச்சி நிறுவனம்

இந்தியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி ஸ்தாபனங்களில் ஒன்று.இந்தியாவின் பண்டைய நூலகங்களில் புதைந்து கிடக்கும் நூல்கள், அரிய இஸ்லாமிய நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவைகளை கண்டுபிடித்து இஸ்லாமிய உலகில் அவற்றை வெளியிட்டதில் இந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மிகப்பெரிய பங்குள்ளது.

இந்த மகத்தான ஆராய்ச்சி நிறுவனம் தாஇரதுல் மஆரிஃப் என்ற பெயரில் ஹைதரா பாத்தில் 1888 -ஆம் ஆண்டு அல்லாமா சையத் ஹுசைன் பில்கிராமி(ரஹ்), மௌலானா அப்துல் கையூம்(ரஹ்), மௌலானா அன்வருல்லா கான்(ரஹ்) ஆகியோரது வழி காட்டுதலின் அடிப்படையில் நிறுவப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிறுவனம் அஸ்மா-உர்-ரிஜால், வரலாறு, கணிதம் மற்றும் தத்துவம் ஆகியவற்றில் இதுவரை 150க்கும் மேற்பட்ட விலைமதிப்பற்ற படைப்புகளை வெளியிட்டுள்ளது. இப்படைப்புகள் அனைத்தும் இஸ்லாமிய உலகம் என்றைக்கோ இழந்து விட்ட காலத்தால் மறக்கப்பட்டு விட்ட, கல்வி வட்டாரத்தில் இதன் பெயர் களை நெடுங்காலமாக வெறும் செவிகள் மட்டுமே கேட்டு கொண்டிருந்த நிலையில் இப்படைப்புகளை இந்நிறுவனம் வெளியிட்டது.

இதன் மூலம் மார்க்கத்திற்கும் கல்விக்கும் மிகப்பெரிய சேவையாற்றியது. முஸ்லிம் களுக்கு தங்களது இஸ்லாமிய கலாச் சாரத்தோடு கொண்ட ஆழமான ஆத்மார்த்த மான உறவிற்கும் இது ஆதாரமாக இன்றும் திகழ்கிறது.

இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் அளப்பரிய முயற்சியை, அறிவுலகத்திற்கு இவர்கள் ஆற்றிய பங்களிப்பை, இவர்களது முயற்சியால் கிடைத்த நூல்களின் மதிப்பை கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளின் புகழ்பெற்ற அனைத்து அறிஞர்களும் ஒப்புக்கொண்டனர். 1937ஆம்

ஆண்டில், எகிப்தில் உள்ள அஸ்ஹர் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் குழு ஒன்று சுற்றுப் பயணமாக இந்தியாவுக்கு வந்திருந்தது. அதன் தலைவர் ஷேக் இப்ராஹிம் அல்-ஜிபாலி கூறினார்:

“ஹைதராபாத்தில் உள்ள தாஇரதுல் மஆரிஃப் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிஞர்கள் அறிவுலகத்திற்கு புரிந்த மாபெரும் பங்களிப்பையும், அரேபிய கலாச்சாரத்தை பரப்ப அவர்கள் எடுத்த பல முன்னெடுப்பு களையும் நாங்கள் மனமாற ஒப்பு கொள்கிறோம். அழிந்து போன பல தலைசிறந்த நூல்கள், கல்வியாளர்களது வட்டாரத்தில் மட்டுமே அறியப்பட்டு வந்த நூல்கள், இந்த நூல்களை ஒருமுறையாவது பார்த்து விடமாட்டோமா என்று அறிஞர்கள் ஏங்கிய நூல்கள் போன்ற அரிதான நூல்களை கண்டெடுத்து அதற்கு நூல் வடிவம் கொடுத்து அதனை சரி பார்த்து மறு பதிப்பு செய்து மலை போன்ற இந்த பணியை மிகவும் சிரமத்தை மேற்கொண்டு செய்து அதற்கு அதிக அளவில் செல்வத்தையும் வாரி இறைத்து இந்த மகத்தான பணியை மேற்கொண்டார்கள்”.

## தாருத் தர்ஜுமா

ஹைதராபாத்தில் உள்ள உஸ்மானிய்யா பல்கலைக்கழகம் பல்வேறு கலைகளை பல்துறை சார்ந்த கல்வியை உருது மொழியில் பயிற்றுவிக்க முடிவு செய்த போது தாருத் தர்ஜுமா என்ற மொழிபெயர்ப்பு நிறுவனத்தை ஹிஜ்ரி 1335 -ஆம் ஆண்டு நிறுவியது. வரலாறு, புவியியல், அரசியல், பொருளாதாரம், கட்டிடக்கலை, சமூகவியல், தர்க்கம், தத்துவம், உளவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், மருத்துவம் என பல்வேறு துறைசார்ந்த 358க்கும் அதிகமான நூல்களை உருது மொழியில் இந்நிறுவனம் மொழிபெயர்ப்பு செய்தது.

இந்த மகத்தான சேவையில் தன்னை ஈடுபடுத்தி மிகப்பெரிய அளவில் பங்களிப்பு செய்த அறிஞர்களில், இலக்கியவாதிகளில் குறிப்பிடத்தக்க நபர்கள், டாக்டர். அப்துல் ஹக்,ஷைகு அப்துல் மாஜித் தர்யாபாதி, ஷைகு அப்துல்லா அல்-இமாதி, ஷைகு வஹீதுதீன் சலீம் பானிபதி, ஷைகு இனாயத்துல்லா தெஹ்லவி, ஷைகு மஸ்ஊத் அலி நத்வி, காஜி தலம்மத் ஹுஸைன் கோரக்பூரி.

1948ஆம் ஆண்டு இம்மொழி பெயர்ப்பு நிறுவனத்தின் ஆண்டு செலவு ரூ. 2,61,415. ஹைதராபாத் இந்தியாவோடு இணைக்கப் பட்ட பிறகு முற்றிலுமாக இப்பணி நின்று போனது. மேலும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய இதன் பெரிய நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. (இந்த அறிவு பொக்கிஷங்களை அழிக்க வேண்டும் என்று திட்டமிட்டே இதனை எரித்தார்கள் என்றே நிறைய மக்கள் கருதுகிறார்கள்.)

## தென்னிந்தியாவில் இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள்

தென்னிந்தியாவில் மார்க்க கல்வியை பரப்பியதில் முஸ்லிம்கள் பல ஆக்கப் பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டார்கள். இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள், பள்ளி கூடங்கள், அரபி மதரசாக்கள் ஆகியவற்றை நிறுவினார்கள். இதில் குறிப்பாக கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அரபு மொழியின் மீது மிகுந்த நேசம் கொண்டவராக விளங்கினார்கள். கிராமம், நகரம் என எல்லா இடங்களிலும் அரபி மத்ரஸாக்கள் செயல்பட்டு வந்தது. அவ்வனைத்து மத்ரஸாக்களிலும் அரபு மொழி கற்றுக் கொடுக்கப்பட்டது. அதில் குறிப்பிட தகுந்த மத்ரஸாக்கள் ரவ்ளதுல் உலூம், சுபுலுஸ் ஸலாம், மதீனதுல் உலூம், நத்வதுல் முஜாஹிதீன் என்ற அமைப்பிற்கு கீழ் செயல்பட்டு வந்த அல்ஜாமி அதுந் நத்விய்யா. இம்மாநிலத்தைச் சேர்ந்த உலமாக்கள் அரபு மொழியில் நன்கு பாண்டித்தியம் மிகுந்தவர்களாக திகழ்ந்தார்கள். எந்த அளவிற்கு என்றால் இந்தியாவின் வடபகுதியில் இருந்து யாரேனும் இவர்களை சந்திக்க வந்தால் அரபு மொழி யிலேயே பேச வேண்டிய சூழ்நிலை நிலவியது. இவர்களில் சிலர் உருது மொழியிலும் பாண்டித்திய மிக்கவர்களாக திகழ்ந்தனர்.

இந்தியாவின் தெற்கு பகுதியில் பல்வேறு முஸ்லிம் கல்லூரிகள் செயல்பட்டு வந்தது. இவற்றில் பிரபல்யமானது சென்னையில் உள்ள புதுக்கல்லூரி, வானியம்பாடியில் உள்ள இஸ்லாமியா கல்லூரி, திருச்சியில் உள்ள ஜமால் முஹம்மது கல்லூரி , கர்னூலில் உள்ள உஸ்மானிய்யா கல்லூரி, கேரளாவில் உள்ள

ஃபாருக் கல்லூரி. இதன் பெரும்பாலான செலவீனங்களை தென்னிந்திய இஸ்லாமிய கல்வி சங்கமே பொறுப்பேற்று வந்தது.

## நூலகங்கள்


முஸ்லிம் ஆட்சியாளர்கள், இளவரசர்கள் மூத்த மார்க்க அறிஞர்கள் மிகப்பெரிய நூலகங்களை நிறுவுவதில் மிகுந்த ஆசை கொண்டிருந்தனர். இந்தியாவிலேயே பிரம்மாண்டமான நூலகங்களில் ஒன்று பாட்னா, பான்கிபூர் நகரத்தில் உள்ள நூலகம்.இந்நூலகத்தின் பெயர் அல்மர்ஹூம் அல்காஜி ஹுதா பஹ்ஷ் கான்.

அதேபோல ராம்பூரில் உள்ள ரஜா நூலகம், ஹைதராபாத்தில் உள்ள அஸாஃபியா நூலகம், நவாப் சதர் யார் ஜங் மௌலானா ஹபீபுர் ரஹ்மான் ஷேர்வானி நூலகம். அலிகர் பல்கலைக்கழகத்தின் ஆஸாத் நூலகத்தோடு இது இணைக்கப்பட்டது. தாருல் உலூம் தியோபந்தில் அமைந்துள்ள நூலகம், அலிகர் பல்கலைக்கழகத்தின் நூலகம், லக்னோவில் உள்ள ஷைகு நாஸிர் ஹுஸைன் இப்னு ஷைகு ஹாமித் ஹுஸைன் நூலகம்.தாருல் உலூம் நத்வதுல் உலமாவில் அமைந்துள்ள அல்லாமா ஷிப்லி நுஃமானி நூலகம் இந்நூலகத்தில் 1 லட்சத்திற்கும் அதிகமான நூல்களும் நான்காயிரத்திற்கும் அதிகமான கைபிரதிகளும் உள்ளது.

இந்த நூலகங்களுக்கு இஸ்லாமிய மற்றும் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் தொடர்ந்து வருவார்கள். உலகில் வேறு எங்கும் காண முடியாத விலைமதிப்பற்ற புத்தகங்களின் பிரதிகளை புகைப்படங்கள் எடுத்து அதனை சர்வதேச நூலகத்தில் காட்சி படுத்துவதற்காக 1952ஆம் ஆண்டு அரபு லீக்கால் இந்தியாவிற்கு ஒரு தூதுக்குழு அனுப்பப்பட்டது. இது நாடு முழுவதும் பயணம் செய்து, லக்னோ, ராம்பூர், ஹைதராபாத், அலிகர், டோங்க், ஆசம்கர், கல்கத்தா, பாட்னா மற்றும் பிற இடங்களில் உள்ள முஸ்லிம் நூலகங்களில் பாதுகாக்கப் பட்ட நூற்றுக்கணக்கான பழைய மற்றும் அரிய அரபு புத்தகங்களை புகைப்படம் எடுத்து சென்றது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.....


முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?




- அரபி மொழியில் முதல் பதிப்பை எகிப்தின் (RESEARCH TRANSLATION AND PUBLICATION IN EGYPT) ஆராய்ச்சி மற்றும் மொழிபெயர்ப்பு வெளியீட்டுக்கான அகாடமி 1950ல் கெய்ரோவில் வெளியிட்டது.
- உலகெங்கும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அரபுலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களெல்லாம் இந்த நூலிலிருந்து மேற்கோள் காட்டி எழுதவும் பேசவும் செய்தார்கள்.
- அடுக்கடுக்காய் மிகச்சிறியதொரு காலத்தில் ஆறு பதிப்புகள் வெளிவந்தன. அதே காலகட்டத்தில் பார்சி, துருக்கி ஆகிய மொழிகளிலும், இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டது. உருது மொழியில் 1954ல் வெளியிடப்பட்டது.

272 பக்கம் | 300/-

Vergal Pathippagam





# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப் பட்டார்கள்






சென்ற இதழின் தொடர்ச்சி..

**யாசின் பட்கலை சிசிடிவி காட்சிகளின் வழியாக அடையாளம் காணுதல்**

ஜெர்மன் பேக்கரியின் பொருட்களை கொடுக்கும் வாங்கும் இடத்தில் இரண்டு பைகளுடன் காணப்பட்ட இளைஞர் யாசின் பட்கல் என்று காவல்துறை ஆய்வாளர் தினேஷ் கடம் (PW102) அவர்களால் அடையாளம் காணப்பட்டார். தினேஷ் கடம் மும்பையின் தீவிரவாதத் தடுப்புப்படையிலும் மும்பை குற்றப்பிரிவிலும் (க்ரைம் பிராஞ்ச்) பணியாற்றியிருந்தார். அவர் யாசின் பட்கலை நேரில் பார்த்திராவிட்டாலும் முந்தைய விசாரணைகளில்





யாசின் பட்கலின் புகைப்படங்களை பார்த்த அடிப்படையில் யாசின் பட்கலை அடையாளம் கண்டறிந்தார்.

இந்த அடையாளம் கண்டறிதலை உயர்நீதிமன்றம் பின்வருமாறு கூறி தள்ளுபடி செய்தது. 'சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆதாரத்தின் அடிப்படையில் பொருட்கள் கொடுக்கும் வாங்கும் இடத்தில் இரண்டு பைகளுடன் காணப்பட்ட நபர் யாசின் பட்கல் தான் என்ற முடிவுக்கு வருவது கடினமானது'.

**ஓர் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுனர் ஹிமாயத் பேக் அவர்களை அடையாளம் காணுதல்**

இந்த விஷயத்தில் உயர்நீதிமன்றம் பின்வருமாறு அவதானித்திருந்தது:'சாட்சியின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் குற்றம்சாட்டப்பட்டவரை மறக்கமுடியாத அளவிற்கு குற்றம் சாட்டப்பட்டவரின் தோற்றத்தில், நடவடிக்கையில் ஏதேனும் தனித்துவம் இருந்தது என்பதை எங்களால் நம்ப இயலவில்லை. அரசுத் தரப்பின் கோரிக்கையான குற்றம் சாட்டப்பட்டவர் வெடிகுண்டுகளை வைத்தவருடன் சேர்த்து பார்க்கப்பட்டார் என்ற வாதம் நம்பகத்தன்மையை பெறவில்லை'

**குற்றம் சாட்டப்பட்டவர் அவுரங்காபாத்தில் தன் செல்போனை கொடுத்து வைத்திருந்ததாக சொல்லப்பட்டவர் சாட்சியம்**

உயர்நீதிமன்றம் இந்த சாட்சியத்தை இவ்வாறு கூறி தள்ளுபடி செய்திருந்தது. PW96, ஷேக் நசீர் என்பருடைய சாட்சியமும் PW95, ஷேக் அஹ்மத் என்பருடைய சாட்சியமும் நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக இல்லை'

**கொலம்போவில் சதி**

கொலம்போவில் சதித்திட்டம் தீட்டப்பட்டது என்ற சித்தாந்தத்தை தள்ளுபடி செய்த நீதிமன்றம் இவ்வாறு கூறியது. சதித்திட்டம் கொலம்போவில் தான் உருவாக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டிற்கான எந்தவிதமான ஆதார அறிக்கைகளும் முன் வைக்கப்படவில்லை

**பிரியங்கா டிராவல்ஸ் மற்றும் அல்நூர் தங்கும் விடுதியின் பதிவேடுகளில் இருந்த பதிவுகள்**

பிரியங்கா டிராவல்ஸ் பதிவேட்டில் 7, பிப்ரவரி, 2010 அன்று பெயரில் திருத்தம் செய்தவதற்காக வெள்ளை மை (ஒயிட்னர்) உபயோகிக்கப்பட்டிருப்பதை உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. இரண்டு பதிவேடுகளிலும் இருந்த பதிவுகளை பற்றி பின்வருமாறு உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்திருந்தது,

பிரியங்கா டிராவல்ஸ் மற்றும் அல்நூர் தங்கும் விடுதியின் பதிவேடுகளில் இருந்த பதிவுகளின் சூழ்நிலைகள் குற்றம் சாட்டப் பட்டவரின் மீதான குற்றத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கு தொடர்புடையதாக இல்லை.

உயர்நீதிமன்றத்தில் பொதுவான கருத்தான, 'ஒட்டு மொத்தமாக அரசுத்தரப்பின் வழக்கு நம்பிக்கையை ஈர்க்கும் விதமாக இல்லை' என்பதில் ஏகப்பட்ட அர்த்தம் பொதிந்துள்ளது.

வெடிப்பொருட்களை வைத்திருந்த தற்காகவும் போலியான ஆவணங்களை வைத்திருந்த தற்காகவும் குற்றவாளி என உயர் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை கூறியது உயர்நீதிமன்றம், எனினும் குற்றம் சாட்டப் பட்டவரிடமிருந்து வெடிபொருட்களை அவர் முன்னிலையில் கைப்பற்றிய விஷயத்திலும் போலி ஆவணங்கள் என்று தெரிந்தே போலி ஆவணங்களை கையில் வைத்திருந்ததற்காகவும் குற்றவாளி என அறிவித்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு விசாரணை நீதிமன்றம் வழங்கிய ஆயுள் (கடுங்காவல் தண்டனை மற்றும் ஏழு வருட சிறை தண்டனை யை உறுதி செய்தது.

உயர்நீதிமன்றம் கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த பஞ்ச நாமாவை முறைப்படி உள்ளதாக கண்டிருக்கலாம். பஞ்ச்

சாட்சிகள் எனப்படும் அரசு சாட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சாட்சியங்களை குற்றமற்றதாகவும் சரியெனவும் கண்டிருக்கலாம். ஆனால், சாதாரண கண்களுக்கு கூட வெளிப்படையாக தெரியக்கூடிய இவ்வழக்கின் ஒட்டுமொத்த நேர்மையற்ற தன்மையை கருத்தில் எடுத்துக்கொண்டால் இவை ஒன்றுக்கும் உதவாதது. உயர் நீதிமன்றம் வெடிகுண்டுகளை கைப்பற்றியது, போலி ஆவணங்களை வைத்திருந்தது ஆகிய இந்த இரண்டையும் தனியாக பிரித்து பார்த்திருக்கக்கூடாது. ஒட்டுமொத்த வழக்குடன் இணைத்து பார்த்திருக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவருக்கு தெளிவான விடுதலையை வழங்கியிருக்க வேண்டும்.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டின் வழியாக செல்லலாம். அங்கு குற்றம் சாட்டப்பட்டவர் தெளிவான விடுதலையை பெறலாம். ஆனால், அந்த மேல்முறையீடு வெறும் குற்றம் சாட்டப் பட்டவரின் விடுதலை என்ற குறிக்கோளோடு நின்றுவிட வேண்டுமா? என்னை பொறுத்த வரையில் அதையும் தாண்டி செல்ல வேண்டும். உச்சநீதிமன்றத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டிய இரண்டு முக்கிய புள்ளிகள் என்னவெனில்:

1. வேண்டுமென்றே தவறான விசாரணையை மேற்கொண்டு உண்மை குற்றவாளிகளை காத்து அப்பாவிகளை இவ்வழக்கில் இணைத்த காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை

2. இவ்வழக்கின் விசாரணையின் போது கிடைத்த சில துப்புகளின் அடிப்படையில் இவ்வழக்கினை மேலும் விசாரித்து உண்மை குற்றவாளிகளை கைது செய்வது

**விசாரிக்கப்பட வேண்டிய சில ஆக்கப்பூர்வமான துப்புகள்**

**கைவசம் உள்ள தரவாக ஆராயப்பட வேண்டிய சில தடயங்கள்:-**

**1) வெடிகுண்டு வெடிக்க தூண்ட பயன்பட்ட கைபேசியின் சிம் கார்டு**

குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்ட இடத்தில் செல்போன்களின் பகுதிகள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளதாலும் வேறு எந்த விதமான பொருட்களும் கண்டெடுக்கப் படவில்லை என்பதாலும் வெடிகுண்டை வெடிக்க வைக்க அநேகமாக செல்போன் தான் ரிமோட் கண்ட்ரோலாக பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்று தடயவியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர், குண்டு வெடித்த இடத்தில் ஒரு ஏர்டெல் சிம்கார்டும் கண்டெடுக்கப் பட்டுள்ளதால் அந்த சிம்கார்டு தான் முடிவுக்கு வர இயலும். ஆனால் இதுவரையில் இந்த சிம் கார்டு தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. மேற்கொண்டு நடத்தக்கூடிய விசாரணையில் இதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு ஆழமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

**2) சாரங் குல்கர்னியுடைய சந்தேகிக்கப்படும் தொடர்பு**

2009ம் ஆண்டு மட்காவுன் (கோவா) வெடிகுண்டு வெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான சாரங் குல்கர்னிக்கு புனேவில் நடந்த ஜெர்மனி பேக்கரி வெடிகுண்டு வழக்கிலும் தொடர் பிருக்கலாம் என கோவா காவல்துறையின ராலும் தீவிரவாதத் தடுப்புப் படையினராலும் தீவிரமாக சந்தேகிக்கப்பட்டது. மஹாராஷ் டிராவின் தீவிரவாதத்தடுப்புப் படையின் தலைவரான கே.பி. ரகுவாஷியும் இந்த உண்மையை உறுதிப்படுத்தியிருந்தார். சாரங் குல்கர்னி மட்காவுன் வழக்கில் அவனுடைய பெயர் வெளிப்படுத்தப்பட்டதும் தலை மறைவாகிவிட்டான். எனினும், அவன் ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பிற்கு முன்னதாக புனேவில் உள்ள ஷிவாஜிநகர் பகுதிக்கு இரகசியமாக வந்து கொண்டிருந்தான்.

இந்த அறிக்கையானது லோக்மாத் என்ற மராத்தி தினசரியின் கோவா பதிப்பில் 5, மார்ச், 2020இல் வெளிவந்தது. சாரங் குல்கர்னி மற்றும் அவனின் நண்பர்களால் தயாரிக்கப் பட்ட 12 சர்க்யூட்களில் 5 மட்டுமே மட்காவூன் குண்டு வெடிப்பில் பயன்படுத்தப் பட்டது (இதற்கு அர்த்தம் இன்னும் ஏழு கையிருப்பில் உள்ளது) என்று அந்த அறிக்கை கூறியது. இந்த அறிக்கை வகுப்புவாத வெறித்தனம் கொண்ட பிராமணிஸ்டுகளில் முக்கிய நபர்களில் ஒருவன், சாரங் குல்கர்னி அடிக்கடி வந்து சென்ற புனேவில் உள்ள ஷிவாஜி நகரில் வசித்து வந்தான் என்ற உண்மையுடன் கனக்கச்சிதமாக

பொருந்திப்போகிறது. எனவே, இந்த அடிப்படையில் ஆழமாக விசாரிக்கப்பட மிகவும் பொருத்தமானதொரு வழக்கு.

**3) லேட். கர்னல் புரோகிதுக்கும் சனாதன் சன்ஸ்தாவுக்கும் இடையிலான தொடர்பு**

தி இந்தியன் எக்ஸ்பிரஸ், புனே பதிப்பு 21, டிசம்பர், 2009-இல் உள்ளவாறு மட்காவூன் குண்டு வெடிப்பை விசாரிக்கும்போது கோவா காவல்துறையினர் சனாதன் சன்ஸ்தா அமைப்பினருக்கும் அபிதவ் பாரத் அமைப்பின் லேட் கர்னல். புரோகிதுக்கும் இடையிலான தொடர்பை கண்டறிந்தனர். இது தர்க்கரீதியாக பொருத்த மானதே. ஏனெனில் அந்த காலக்கட்டத்தில் புரோகித் மட்டுமே பெரும் அளவிலான ஆர்.டி.எக்ஸ்ஐ கைவசம் வைத்திருந்தார். ஆனால், இந்த துப்பு ஆராயப்படவில்லை. ஒருவேளை உன்னிப்பாக பின்தொடரப்பட்டால், இந்த குண்டு வெடிப்பில் உபயோகப்படுத்தப்பட்ட வெடிப்பொருட்களின் மூலத்தை அது வெளிப் படுத்தும்.

**4) புனேவை சேர்ந்த இரண்டு வேதியியல் பேராசிரியர்கள்**

மாலேகான் (2008) குண்டு வெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ராகேஷ் தவாதே என்பவன் மஹாராஷ்டிராவின் ஜால்னா காவல் துறையினரிடம் விசாரணையின் போது டாக்டர். ஷரத் குண்டே, பேராசிரியர் தியோ என்ற இரண்டு வேதியியல் பேராசிரியர்களைக் குறித்தும் புனேவில் உள்ள அகான்க்ஷ ரிசார்ட்-இல் 2003ம் ஆண்டு நடந்த தீவிரவாத முகாம் களில் வெடிகுண்டுகளை கையாள்வதைப் பற்றி அவர்கள் பயிற்சி அளித்தது குறித்தும் வெளிப்படுத்தியிருந்தான்.

நவம்பர் 2008இல் லேட் கர்னல், புரோகிதுக்கு நடந்த மயக்கநிலை சோதனையின் போது (நார்கோ டெஸ்ட்) அபிநவ் பாரத் இயக்கத்திடம் கையிருப்பில் இருந்த ஆர்.டி.எக்ஸ். எவ்வளவு என்பதை பேராசிரியர் தீயோ என்பவர் தான் பராமரித்துக் கொண்டி ருந்தார் என்ற உண்மை வெளிப்பட்டது. அந்த இரு பேராசிரி யர்களும் இந்த வழக்கில் தீவிரமாக சந்தேகிக்கப்படுகின்றனர். அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும்.



தீவிரவாதத் தடுப்புப்படை தன்னுடைய பழைய கதையிலேயே சிக்கிக் கொண்டுள்ளது.

இந்த குண்டுவெடிப்பு வழக்கில் ஹிமாயத் பேக் விடுதலை செய்யப்பட்டதனால் ஏற்பட்ட பின்னடைவிற்கு பின்னரும் தீவிரவாதத் தடுப்புப் படை விசாரணையை சரியான பாதையை நோக்கி கொண்டு செல்லாமல் கொஞ்சமும் ஊக்கம் குன்றாமல் முஸ்லிம்களின் தொடர்பு என்ற தங்களுடைய பழைய பாதையை நோக்கியே பயணிக்கின்றது. அதனுடைய பழைய தவறுகளை மறைக்க உண்மையில் அதற்கான தேவையும் தீவிரவாதத் தடுப்புப் படைக்கு உள்ளது.

தீவிரவாதத் தடுப்புப்படையின் நியாயமற்ற நடத்தைக்கு யாசின் பட்கலின் கைதே ஒரு சிறந்த உதாரணம். அவர் இவ்வழக்கில் முதல் குற்றவாளியாக 2003ல் கைது செய்யப்பட் டார். ஆனால் 2018ம் ஆண்டு வரை ஒரே ஒருமுறை கூட புனே நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவில்லை. இவ்வழக்கின் விசாரணை பட்கலை. ஆஜர்படுத்தக்கோரி கிட்டத்தட்ட 70 முறை ஒத்தி வைக்கப் பட்டது. தீவிரவாதத் தடுப்புப்படைக்கு பட்கல் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பது கூட தெரியவில்லை.

19, செப்டம்பர், 2008 அன்று புனேவில் உள்ள தீவிரவாதத் தடுப்புப்படை சிறப்பு நீதி மன்றத்தில், பட்கல் இப்போது எங்கிருக்கிறார்

என்பது தெரியவில்லை என ஓர் எழுத்தறிக்கையை தீவிரவாதத் தடுப்புப்படை தாக்கல் செய்தது. எனினும், இரண்டு நாட்களுக்கு பிறகு 21, செப்டம்பர் அன்று பட்கல் தில்லியில் உள்ள திஹார் சிறையில் இருப்பதாக அது கூறியது.

தீவிரவாதத் தடுப்புப்படை தர்மசங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பட்கலுக்கு எதிராக எத்தவிதமான தகுந்த ஆதாரமும். இல்லாத காரணத்தால் தீவிரவாதத் தடுப்புப்படையால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவோ, குற்றச்சாட்டை சுட்டமைக் கவோ அல்லது முடிவின்றி வழக்கை ஒத்தி வைக்கவோ இயலாது. நீதிமன்றமும் இந்த ஒழுங்கற்ற நிலையின் மீது தீவிர பார்வை கொண்டுள்ளதாக தெரியவில்லை. இவ்வழக்கு பிணை வழங்க மிகவும் பொருத்தமான வழக்கு என்ற போதிலும் பட்களின் பிணை மனுவை நீதிமன்றம் 1, நவம்பர், 2008ல் தள்ளுபடி செய்தது. அவர் உயர்நீதிமன்றத்தை அணுகி அவர் பிணை பெறக்கூடும் என்பது வேறு விஷயம். ஆனால் இது தீவிரவாதத் தடுப்புப் படையின் போக்கிரித்தனம் குறித்தும் நீதிமன்றங்களின் சில பகுதிகளில் நடந்துள்ள கவனக்குறைவு குறித்தும் ஏகப்பட்ட உண்மைகளை உணர்த்தும். இந்த ஒட்டுமொத்த விஷயமும் முற்றிலும் பாகு பாடானாது என்பதை வெளிப்படுத்துகிறது.

இன்ஷா அல்லாஹ்...தொடரும்....!

# ரூ.50 கோடி அரசு சொத்தை அபகரித்த பாஜக பிரமுகர் கைது

திருவண்ணாமலை கோவிலுக்கு சொந்தமான இடம் மற்றும் அம்மணி அம்மன் மடம் ஆகியவற்றை ஆக்கிரமித்து வைத்திருந்த பாஜக ஆன்மீக பிரிவைச் சார்ந்த சங்கர் கைது செய்யப்பட்டார். திமுக ஆட்சிக்கு வந்தது முதல் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தை அபகரித்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நிலம் மீட்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு நிலத்தை அபகரித்தவர்களில் பெரும்பாலானோர் பாஜக பிரமுகர்கள் மற்றும் ஏதாவது ஒரு வகையில் பாஜகவோடு தொடர்புடையவர்களாக உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் திருவண்ணாமலையில் சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புடைய 21,800 சதுரஅடி பரப்புள்ள இடம் சுமார் 20 ஆண்டுகளாக மேனாள் இந்துமுன்னணி மற்றும் தற்போது பிஜேபியை சேர்ந்த சங்கர் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்தது.

நீதிமன்ற உத்தரவுப்படி நடைபெற்ற ஆக்கிரமிப்பு அகற்றும் பணி நடந்தது இது குறித்து அனைத்து நாளிதழ்களிலும் செய்தி வந்திருந்தது. இந்த நிலையில் சங்கர் என்பவர் ஆக்கிரமிப்பு அகற்றும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த அரசு அதிகாரிகளை மிரட்டி நான் யார் தெரியுமா? இந்த அரசுக்கு( திமுக) என்ன அதிகாரம் உள்ளது என்று தெரியாமல் எங்களோடு விளையாடுகிறது. அப்படியே விட்டுவிட்டுச் சென்று விடுங்கள், நாங்கள் மத்தியில் ஆட்சியில் இருக்கிறோம். நாங்கள் நினைத்தால் என்ன ஆகும் என்பதை புரிந்து கொண்டு எனது இடத்தின் மீது கை வையுங்கள் என்று மிரட்டியுள்ளார்.

மேலும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபு மற்றும் மாவட்ட ஆட்சியர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில அமைச்சர் ஒருவரையும் தரக்குறைவாக பேசியதோடு மட்டுமல்லாது இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளை தரக்குறைவாக பேசியுள்ளார். இந்த நிலையில் அறநிலையத்துறை அதிகாரிகள் இதுகுறித்து காவல்துறையில் புகார் கொடுத்தனர். இதனால் தாம் கைது செய்யப்பட்டு விடுவோம் என்று அஞ்சி திருப்பதிக்குச் சென்று கூட்டத்தோடு கூட்டமாக மண்டபத்தில் தங்கிவிட்டார். இருந்தாலும் அவரது அலைபேசி எண்ணை வைத்து அவர் இருக்கும் மண்டபத்தை அடையாளம் கண்டு தமிழ்நாடு தனிப்படை காவல்துறையினர் திருப்பதியில் கைது செய்தனர்.

**- நன்றி விடுதலை**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002